பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 59 தை 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 25 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2019
25 26 27
ஜனவரி / January
10.00am - 8.00pm
MUNICIPAL GROUNDS - JAFFNA
இன்று ஆரம்பம்

# பெருந்தொகை கள்ள மதுசாரம் பதுக்கப்பட்ட நிலையில் சிக்கியது

## 2 கோடி ரூபா பெறுமதியானது; இருவர் கைது!



யாழ்ப்பாணம், ஜன. 25
போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரம் நடந்துகொண்டிருக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் களவாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான மதுசாரம் (எதனோல்) நேற்றுக் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பில் சுன்னாகம் மதுபானசாலையில் பணியாற்றும் வாகனச் சாரதி மற்றும் உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

>> 25

# மனச்சாட்சி உள்ளவர்கள் ஆதரவை வழங்குவார்கள்

## மகிந்தவின் கருத்துக்கு சம்பந்தன் பதில்

யாழ்ப்பாணம், ஜனவரி 25
புதிய அரசமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கு மக்களின் கைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதால் ஊழல், மோசடிகள் இடம்பெற வாய்ப்பில்லை. வளங்கள் வீண்விரயம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்களை அது குறைத்து விடும். நாட்டின் நற்பெயர் பாதுகாக்கப்படும். நாட்டின் துரித வளர்ச்சிக்கு அது வழிசமைக்கும். எனவே, மனச்சாட்சி உள்ளவர்கள் புதிய அரசமைப்புக்கு ஆதரவு வழங்குவார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

>> 25



## மகிந்தவின் இளைய மகனுக்கு நேற்று அசத்தலான திருமணம்

### நிகழ்வில் ரணில், கோத்தா கூடிக் குலாவல்

கொழும்பு, ஜன. 25
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் கடைசி மகன் ரோகித ராஜபக்ச திருமண பந்தத்தில் நேற்று இணைந்து கொண்டார்.
அவரது நீண்டகால காதலியான டட்யான லீ என்பவரையே பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன்

>> 25

## பால்மாவுக்கும் விலைச்சூத்திரம்

கொழும்பு, ஜன. 25
அடுத்த இரு வாரங்களில் இறக்குமதி செய்யப்படும்

>> 25

## நாடாளுமன்றில் சம்பந்தன் இன்று சிறப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்

>> 25

**நீராவியடி பிள்ளையார் – புத்தர் முரண்பாட்டு விவகாரம்**

## தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரை முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படப் பணிப்பு

### பெப்ரவரி 12வரை எவரும் எந்த வேலையும் செய்யத் தடை

கொழும்பு, ஜன. 25
முல்லைத்தீவு - நாயாறு நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை அடுத்த தவணை நீதிமன்றில் முற்படுமாறு முல்லைத்தீவு நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.
எதிர்வரும் பெப்ரவரி மாதம்

>> 25



## காவியும் வெள்ளையும் தீயை மூட்ட முழுமுயற்சி!

### குற்றம் சுமத்துகிறார் நளின்

கொழும்பு, ஜன. 25
காவியுடை அணிந்தோரும், வெள்ளை ஆடைகளை அணிந்தோரும் நாட்டில் தீயை மூட்டுவதற்கு முயற்சிக்கின்றனர் என்று பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

>> 25

## பலாலி வானூர்தி நிலையத்துக்கு 2 பில். ரூபா ஒதுக்கப்படவுள்ளது!

யாழ்ப்பாணம், ஜன. 25
பலாலி வானூர்தி நிலையத்தின் ஓடுபாதையை அபிவிருத்தி செய்வதற்கு அரசு 2 பில்லியன் ரூபாவை ஒதுக்கவுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம் தலைமை

>> 25

## பெப்ரவரி 6ஆம் திகதியன்று யாழ். வருகிறார் மைத்திரி!

### கிராம சக்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்படும் கிராம சக்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் நேரில் ஆராயும் நோக்கில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன

>> 25

## நீராவியடிப் புத்தர் சிலை தமிழரை புண்படுத்துகிறது

### கடுமையாகக் கண்டிக்கிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஜன. 25
நாயாறு நீராவியடி ஏற்றத்தில் புத்தர் சிலை அமைத்து நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட செயலானது தமிழ் மக்களின் நெஞ்சங்களைப் புண்படுத்தும் செயலாகும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்


>> 25



ஒவ்வொரு முறையும் Card மூலம் செலவு செய்யும் தொகையின் 1% உங்களுடைய DFCC வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும்.
DFCC கடனட்டை
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## பிரியங்க பெர்னான்டோவை காட்டிக் கொடுத்தது அரசு

### குற்றம் சுமத்துகிறார் விமல்



கொழும்பு, ஜன. 25
பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவைகைதுசெய்ய இலங்கை அரசே திட்டம் போட்டுக் கொடுத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார். கொழு ம்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவை கைது செய்ய பிரிட்டன் நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அயலுறவுத்துறை அமைச்சு இது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று எமக்கு இதுவரை தெரியாது. ஆனால், வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதும், இலங்கை இராணுவத்தினரைக் கைது செய்யுமாறு வெளிநாட்டு நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதில்லை. அவ்வாறு நாம் கேள்விப்பட்டதுமில்லை. இதுதான் முதன்முறையாகும்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு அரசே அனுமதி வழங்கியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சட்டவரைவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. பன்னாடு ஒன்றிலிருந்து இராணுவத்தினருக்கு எதிரான பிடியாணை பிறப்பிக்கும் போது, அவரை அந்த நாட்டுக்கு ஒப்படைப்பதற்கான வழிவகைகளும் திறந்துதான் காணப்படுகின்றன.

பிரிட்டன் நீதிமன்றம் பிரிகேடியருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ளது. அரசோ, பன்னாட்டுச் சமூகத்திடம் இராணுவத்தினரை விட்டுக்கொடுக்க மாட்டோம் எனக் கூறிக்கொண்டிருந்தாலும், அரசின் கடந்த காலச் செயற்பாடுகளால், நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்பட வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாம் அன்று கூறியபோது, அனைவரும் எம்மைப் பார்த்து சிரித்தார்கள். அவ்வாறு இடம் பெறாது என்று கூறினார்கள். பிரிட்டன் நாடாளுமன்றம் இலங்கை இராணுவத்தினருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது. இப்படியான ஒரு அரசு இனியும் ஆட்சி பீடத்தில் நீடித்திருக்க நாம் இடமளிக்கக்கூடாது - என்றார். (5)

## டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை குடாநாட்டில் சடுதியாக அதிகரிப்பு

### நேற்றுவரை 701 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
**யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக சடுதியாக அதிகரித்து வருகிறது.**

ஜனவரி மாதத்தின் மூன்றாவது வாரத்தின்நிறைவில் 701பேர்டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் 499 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டிருந்தநிலையில்கடந்தஒருவாரத்தில் 200 பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

சுகாதாரஅமைச்சின்தொற்றுநோய்விஞ்ஞானப் பிரிவினரால் டெங்கு நோய் தொடர்பில் வாராந்தம் வெளியிடப்படும் அறிக்கைநேற்றுவெளியிடப்பட்டது. அதிலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டது.

ஜனவரி மாதத்தின் மூன்றாவது வாரத்தில் இலங்கை முழுவதும் 3 ஆயிரத்து 708பேர்டெங்குநோய்க்குஉள்ளாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே இந்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகமாகக் காணப்படுகிறது. அங்கு 884 டெங்குநோயாளர்கள்இனம்காணப்பட்டுள்ளனர். அடுத்த இடத்தில் யாழ்ப்பாணம்உள்ளது. வடக்கின்ஏனையமாவட்டங்களைப் பொறுத்த வரையில் கிளிநொச்சியில்14டெங்குநோயாளர்களும், மன்னாரில் 23 நோயாளர்களும், வவுனியாவில் 13 டெங்கு நோயாளர்களும், முல்லைத்தீவில் 3 டெங்கு நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். இலங்கையிலேயே டெங்கு நோயின் பாதிப்புக் குறைந்தமுதல்மூன்றுமாவட்டங்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகியனவே காணப்படுகின்றன.

காய்ச்சல் 3 நாள்களாகத் தொடர்ந்தால் தாமதமின்றி மருத்துவமனையை நாடுமாறும், உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும்தொற்றுநோய்விஞ்ஞானப்பிரிவினரால்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,21)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.25
சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி கே.கிருஸ்ணப்பிள்ளை தலைமையில்நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணக்காளர் திருமதி சுதர்ஜினி கலைச்செல்வன், சிறப்பு விருந்தினராககிருபாசாரதிபயிச்சிப் பாடசாலைஉரிமையாளர் கிருபா கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## உ.கிழங்கு இறக்குமதி வரி விதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25
உள்ளூர் உருளைக்கிழங்கின் அறுவடை காலத்தில் உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரியை அரசு அறிவிக்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்ததாவது:

இந்த முறை போகம் பிந்தியே செய்கையாளர்கள் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டனர். பெப்ரவரி மாதத்துக்குப் பின்னரே அறுவடை ஆரம்பிக்கும். அறுவடைக்காலத்தில் செய்கையாளர்கள் உருளைக் கிழங்கைச் சந்தைப்படுத்தும்போது அவர்களுக்கு நட்டம் ஏற்படாத வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டைப் போன்றே இந்த ஆண்டும் அறுவடை காலத்தில் இறக்குமதி உருளைக்கிழக்குக்கான வரி விதிக்க வேண்டும் - என்றார். (எ-17)

## யாழ். போதனா மருத்துவமனையில் பெப்ரவரி முதல் 'பாஸ்' நடைமுறை

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெறும்நோயாளர்களைப்பார்வையிட இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவதற்கானபாஸ்நடைமுறைஎதிர்வரும்பெப்ரவரி மாதம் முதலாம் திகதிமுதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றுயாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையின்பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். போதனாமருத்துவமனையில்'பாஸ்' நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல்மேற்கொள்ளப்பட்டது. இதற்குஅமைவாகவே பாஸ் நடைமுறையை மீண்டும் கொண்டுவருவது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி பெப்ரவரி மாதம் முதலாம்திகதிமுதல்மீண்டும்பாஸ்நடைமுறை கொண்டுவரப்படவுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆயிரத்து 250க்கும்மேற்பட்டபடுக்கைகள்உள்ளன. இவ்வாறிருக்கையில் ஒரு நோயாளரைப் பார்வையிடுவதற்காக அதிகமானோர் வருவதால் சேவைகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதில் சிரமம் நிலவுகிறது. இதனடிப்படையிலேயே பாஸ் நடைமுறை மீண்டும் கொண்டுவருவது என்று தீர்மானிக்கப்பட்டது - என்றார். (ம-106)

## 1,000 ரூபா போராட்டத்துக்கு கூட்டமைப்பும் முழு ஆதரவு



கொழும்பு, ஜன. 25
"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்கும் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் ஒத்துழைப்பை வழங்கும்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை தீர்மானம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் பெருமளவிலான நிலங்கள் கபளீகரம் செய்யப்படாமைக்கு மலையக மக்களே காரணம். மலையக மக்களின் போராட்டத்துக்கு தமிழர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ம-22)

## நுளம்பு பரவும் சூழல் இருந்த குடியிருப்பாளர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.25
அரியாலை, கொழும்புத்துறைப் பிரதேசங்களில்நேற்றுபுதன்கிழமைமேற்கொள்ளப்பட்ட திடீர் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது நான்கு குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. அந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

டெங்குத்தொற்று இனங்காணப்பட்ட இடங்களில்சுகாதாரப்பிரிவினர்நேற்றுக்காலைதிடீர் நுளம்புக்கட்டுப்பாட்டுநடவடிக்கையில்ஈடுபட்டனர். வீட்டுச் சுற்றாடல்களில் நீர் நிலைகள் காணப்படும்இடங்கள்அதிகமாகச்சோதனையிடப்பட்டன. வீடுகளில்இருந்தகுளிர்சாதனப் பெட்டியில் இருந்து வடியும் தண்ணீர்த் தட்டு மற்றும் தண்ணீர் தாங்கி என்பனவும் சோதனையிடப்பட்டன. (எ-17)

### கேப்பாபிலவில் அமைதியைச் சீர்குலைத்தனர் என

## நீதிமன்றில்முன்னிலையாகுமாறு பெண்கள் இருவருக்கு அழைப்பு

முல்லைத்தீவு, ஜன. 25
கேப்பாபிலவு பகுதியில் அமைதியைச் சீர்குலைத்தனர்என்றுகுறிப்பிட்டுபெண்கள் இருவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுஇந்தஅழைப்பாணைமேற்படிபெண்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதன்படி அவர்கள் இருவரும் இன்று நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும்.

கேப்பாபிலவில் நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பெண்களுக்கு இவ்வாறான அச்சுறுத்தல்களைவழங்கிப்போராட்டத்தை திசை திருப்பவும், ஒடுக்குவதற்கும் பொலிஸாரால்மேற்கொள்ளப்படும்நடவடிக்கையே இது என்று அந்தப்பகுதிமக்கள் விசனம்தெரிவித்தனர். (ம-ரி3)

### வாக்குறுதிகள் நிறைவேறுதற்காக

# இலங்கை மீது பன்னாடுகளின் அழுத்தம் தொடரல் வேண்டும்

## ஆஸ்திரேலியாவிடமும் வலியுறுத்தியது கூட்டமைப்பு

**கொழும்பு, ஜன. 25**
**"பன்னாட்டுச்சமூகத்துக்கு இலங்கை அரசு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. இதை நிறைவேற்றுவதிலிருந்து விலக முடியாது. எனவே, இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதற்கு இலங்கை அரசுக்கு பன்னாட்டுச்சமூகம் தொடர்ந்து கடும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்" இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.**

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவராகக் கடமையாற்றி தனது சேவைக்காலத்தை நிறைவுசெல்லும் பிரைஸ் ஹட்ச்ஸ்ன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளும் முழுமையாக இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவற்றைக் குறித்த காலவரையறைக்குள் நிறைவேற்றுவதற்கான அழுத்தங்களையும் இலங்கை அரசுக்கு பன்னாட்டுச்சமூகம் கொடுக்க வேண்டும். தேவையற்ற விதத்தில் காலங்கள் கடத்தப்படுவதை இழுத்தடிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட 'அரசியல் சூழ்ச்சிக்கு ஜனநாயக வழியில் தீர்வுகாண மேற்குலக நாடுகளும் அந்த நாடுகளின் தூதுவர்களும் அரச தலைவருக்குக் கொடுத்த அழுத்தங்களை நாம் மறக்கமாட்டோம்.

அதேவேளை, இலங்கையில் நீண்ட காலம் தொடரும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண இப்போது அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது என்பதற்காக ஆட்சியிலிருக்கும் அரசுக்கு நாம் சகல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றோம். புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிக்காக எம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம். புதிய அரசமைப்பு நிறைவேறாவிடின் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. எனவே, ஒருமித்த பிரிபடாத, பிரிக்க முடியாத நாட்டுக்குள்ளே நிரந்தர அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றோம். நாடு பிளவுபட்டு நிற்க நாம் விரும்பவில்லை.

எனினும், நியாயமான ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு வந்தால் மட்டுமே நாமும் எமது மக்களும் ஆதரிப்போம் - என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார். (ம-22)

### காங்கேசன்துறை

# எரிபொருள் நிரப்பு நிலையம் சீரமைப்பின் பின்னர் திறப்பு



வடமராட்சி, ஜன. 25
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பு நிலையம் மீண்டும் சீரமைக்கப்பட்டு நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந. உமாகரனின் தலைமையில் இந்தத் திறப்புவிழா நடைபெற்றது. முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழை பிரதே செயலர் ச.சிவஸ்சிறி எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

பெயர்பலகையை இலங்கைப்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் சி.சிவக்ரன், பிரதேச செயலர் ச.சிவசிறி இருவரும் இணைந்து திறந்துவைத்தனர். காங்கேசன்துறை பொலிஸ் நிலைய தலைமை நிலைய பொறுப்பதிகாரி அபெயரட்னவும் நிகழ்வில் கலந்து கொண்டார். (ம-26)

# 249 ஆசிரிய வெற்றிடங்களுக்கு நியமனம் நாளை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 25
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் 249 ஆசிரிய வெற்றிடங்களுக்கு நாளை நியமனம் வழங்கப்படும் என்று வடக்கு மாகண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பாடங்களுக்கான 440 வெற்றிடங்களை நிரப்பும் வகையில் கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்காக 360 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்த நிலையில் போட்டிப் பரீட்சை இன்றி நேரடியாக நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது.

இதில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு 160 பட்டதாரிகளும் ஏனைய பாடங்களில் 89 பேருமாக மொத்தம் 249 பேர் மட்டுமே இனங்காணப்பட்டனர். இவ்வாறு இனங் காணப்பட்டவர்களுக்கு இந்த மாத ஆரம்பத்தில் நியமனம் வழங்கமுயற்சிக்கப்பட்டது. இருப்பினும் வரவு -செலவுத் திட்ட நிறைவேற்றம் தொடர்பில் காலதாமதம் ஏற்பட்டது. இதையடுத்து சிறப்பு அனுமதியின் பெயரில் குறித்த நியமனம் நாளை வழங்கப்படுகின்றது -என்றார். (ம-105.7)

# வரவு – செலவு திட்டத்துக்கு யோசனையை முன்வைக்கலாம்


கொழும்பு, ஜன. 25
2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு யோசனைகளை பொதுமக்கள் முன்வைக்கலாம் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது கீச்சகப் பக்கத்தில் இது தொடர்பான தகவலைப் பதிவிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது. அதற்கான யோசனைகளை பொதுமக்களிடமிருந்து நிதி அமைச்சுக் கோரியுள்ளது. யோசனைகளை முன்வைக்க விரும்புவர்கள் அடுத்த மாதம் 11ஆம் திகதிக்கு முன்னதாக, பணிப்பாளர், வர்த்தக மற்றும் கொள்கைப் பிரிவு, ஊடக மற்றும் நிதி அமைச்சுச் செயலகம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். என்ற BDGTPROS_MO.TREASURY.GOV.LK மின்னஞ்சல் முகவரிக்கும் யோசனைகளை அனுப்பி வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

# வடக்கு, கிழக்கை கட்டியெழுப்ப உதவ வேண்டும் ஜப்பான் அரசு

## அந் நாட்டுத் தூதுவரிடம் சம்பந்தன் கோரிக்கை



"தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்கள் கொடூர போரால் சின்னாபின்னமாகின. இந்த மாகாணங்கள் தற்போதுதான் மெல்ல மெல்ல அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்த மாகாணங்களைத் துரித கதியில் அபிவிருத்தி செய்ய ஜப்பான் அரசு தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்".

' இவ்வாறு கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

"இந்த உதவிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழுள்ள வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வழங்கப்பட வேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தினார்.


இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிரா சுகியமா, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

"வடக்கு-கிழக்கில் வேலைவாய்ப்புக்காக இளைஞர்கள் பலர் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளையும் ஜப்பான் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்" எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் பன்னாட்டுச் சமூகத்தின் வகிபாகம், புதிய அரசமைப்பு மற்றும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். (ம-22)

# நகைத் திருட்டுடன் தொடர்புடையோர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது!

## யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த நகைத் திருட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஒருதொகுதி நகைகளும் கைப்பற்றப்பட்டன என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

"சந்தேக நபர்களிடம் இருந்து ஓர் உந்துருளியும் மீட்கப்பட்டது. களவாடப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் என சந்தேகிக்கப்படும் சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பதினைந்து பவுண் நகைகள் மீட்கப்பட்டன". மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன' என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-37)


## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, ஜன. 25.
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுகள் வித்தியாலய மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை நிபுணருமான மருத்துவர் செ.செல்வகணேஷ், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் அ.மனோரஞ்சிதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-9)

# கர்ப்பிணியுடைய வயிற்றில் மண்வெட்டியால் தாக்குதல்!

**தென்மராட்சி, ஜன.25**
**நிறை மாதக் கர்ப்பிணியின் வயிற்றில் மண்வெட்டிப் பிடியால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர் தப்பியோடியுள்ள நிலையில் பாதிப்புக்குள்ளான பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.**

இந்தச் சம்பவம் நேற்றுக் கெற்பேலியில் நடந்துள்ளது.
தாக்குதல் நடத்தியவர் அந்தப் பெண்ணைக் காதலித்தவர் என்று கூறப்படுகின்றது. பெண் கர்ப்பமானதை அடுத்து அவர் கைவிட்டுச் சென்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக நீதிமன்றில் பெண்ணால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெறுகின்றது. இந்தநிலையில் நேற்று வழமையாக மருத்துவ பரிசோதனைக்குச் சென்று விட்டு அந்தப் பெண் வீடு திரும்பியுள்ளார். அப்போது அவரை மறித்த நபர் மண்வெட்டிப் பிடியால் வயிற்றில் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளார். அங்கிருந்தவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தப்பியோடியவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)


யாழ்ப்பாணம் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் சப்ததள இராஜ கோபுரத்துக்கு அடிகல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ஐ-124)


யாழ்ப்பாணம் பாரதி மன்றம் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் தைப்பூச தினமான கடந்த திங்கட்கிழமை நடப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆனோல்ட் கட்டடத்துக்கான அடிக்கலை நட்டு வைத்தார். (ஐ-8)

## சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு விழா

சாவகச்சேரி, ஜன. 25
யாழ்ப்பாணம் கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு விழா நிலைய திறந்தவெளி அரங்கில் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலைய முன்னாள் தலைவர் அ.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-9)



# மாணவர்கள் 50 பேருக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25
நாங்கள் செயற்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் 5 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நவாலி பகுதியில் உள்ள 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நவாலி வடக்கு முதியோர் சங்கத்தில் வைத்து அமைப்பின் தலைமைச் செயற்பாட்டாளரும், ஆசிரியருமான செ.பிரதாப் தலைமையில் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## சங்காபிஷேகம்

வடமராட்சி.ஜன.25
யாழ்ப்பாணம் புலோலி தேவரன் மகிழமரத்தடி இராஜராஜேஸ்வரி (மாதா) அம்பாள் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.
காலை 8 மணிக்கு சிறப்பு பூசையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு மூலமூர்த்திகளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் இடம் பெறும். (ஐ-173)

## குண்டு விழுந்து ஆசிரியரின் காலில் காயம்!

சாவகச்சேரி, ஜன. 25
பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியின் குண்டு போடுதல் போட்டியில் மாணவன் ஒருவன் எறிந்த குண்டு அங்கு பதிவுகளை மேற்கொண்டிருந்த ஆசிரியரின் கால் பாதத்தில் வீழ்ந்ததில் ஆசிரியரின் காலில் பாதிப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையொன்றில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த 33 வயதுடைய ஆசிரியர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி.ஜன.25
ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் 253 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரமப் பொறுப்பாளர் சி.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் வெளியீட்டுரையை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ஆ. சிவநாதனும் நிகழ்த்துவர்.
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டு பேரவையினால் மாதாந்தம் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது. (ஐ-173)

## பொதுக்கூட்டம்

வடக்கு மாகாண இலங்கை மின்சார ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சுன்னாகம் மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் வ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். (ஐ)

# சிறுவருக்கு வழங்கும் கல்வியும், உணவும் அவர்களைச் சிறந்த குடிமக்களாக மாற்றும்

## மருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன் தெரிவிப்பு

கொடிகாமம், ஜன. 25
பெற்றோர்கள் தமது சிறுவர்களுக்கு வழங்கும் கல்வியும் உணவுப் பழக்கமும் அவர்களை எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக உருவாக்கும் என்று கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் மூத்த மருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாட சாலையின் கால்கோள் விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்பள்ளியில் கற்ற பின்னர் பாடசாலையில் காலடி எடுத்து வைக்கும் பிள்ளைகள் கற்றலில் ஆர்வம் காட்டுவதுடன் அவர்களின் உணவு வகைகளிலும் அக்கறை செலுத்த வேண்டும்.
பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்தவுடன் தமது கடமை முடிந்ததாக பெற்றோர் கருதக்கூடாது.
அண்மையில் முல்லைத் தீவுப் பகுதியில் முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்திய ஆய்வுகளின் பிரகாரம் பெருமளவு பிள்ளைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெற்றோரே காரணம் எனலாம். காலையில் பிள்ளைகளுக்கு போசாக்கான உணவுகள் சமைத்து வழங்காமல் கடைகளில் விற்கும் பாண் பணிஸ் போன்ற போசாக்கற்ற உணவுகளை வழங்கி வருகின்றனர்.
இதனால் பாதிக்கப்படப் போவது பிள்ளையின் உடல் நலம் என்பதை மறந்து விடுகிறார்கள்.
இலைக்கஞ்சி சமைப்பது பல வீடுகளில் காணப்படுவதில்லை. இலைக் கஞ்சியானது தவசி .முருங்கை இலை உட்பட பல்வேறு இலை வகைகளைக் கொண்டு சமைக்கப்படுவது. இலைக் கஞ்சியில் நிறைய புரதச்சத்து உள்ளது பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கு மிகவும் அவசியமான உணவாகும். வேலைக்குச் செல்லும் பெண்கள் வாரத்தில் ஒருநாள் தமது பிள்ளைகளின் நலன்கருதி அவசியம் வீடுகளில் சமைத்து பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் .இலைக்கஞ்சியை பிள்ளைகள் விரும்பி உண்பார்கள்.. பகல் வேளைகளில் கொடுப்பதால் பிள்ளை



முழுமையான போசாக்கினைப் பெறுவதுடன் வளர்ச்சியும் அதிகரிக்கும்.
முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கூடுதலான நேரங்களை வீட்டிலேயே செலவழிக்கின்றனர். மாணவர்களை பாடசாலைகளில் இணைத்து விட்டால் வழி நடத்தும் பொறுப்பு ஆசிரியர்களிடமே எனத் தட்டிக் கழிப்பதை தவிர்த்து பிள்ளைகளின் கல்வி மற்றும் உணவு விடயங்களில் பெற்றோர் அக்கறை செலுத்த வேண்டும்.
தற்போதைய காலத்தில் முன்பள்ளிப் பருவத்திலேயே பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்பிவருவதைக் காணமுடிகிறது. பெற்றோர் தமது பிள்ளைகளில் அக்கறை செலுத்த முற்பட்டால் தாங்களே வீட்டில் வைத்து கற்பிப்பதால் அவர்களைச் சிறந்த நிலைக்கு கொண்டுவரமுடியும்-என்றார். (ஐ-9,159)

## கலாசாரப் பேரவைக் கூட்டம்

வலி. தென்மேற்கு, ஜன.25

வலி. தென்மேற்கு கலாசாரப் பேரவைக் கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயல மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

பிரதேச செயலர் திருமதி பி.ஜசோதா தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலாசாரப் பேரவை யாப்பு திருத்தம், கலைஞர் விவரம் வெளியிடல், 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கலாசார விழா போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே சகல கலைஞர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. (ஐ-115)

# குடாநாட்டின் 38 இடங்களில் டெங்கு நோய் அறிகுறிகள்

## சந்தேகத்தில் அதிகாரிகள்

**யாழ்ப்பாணம்,ஜன.25**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 38 இடங்களில் டெங்கு நோய் என்று சந்தேகிக்கப்படும் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கின் தாக்கம் கட்டுபாட்டில் இருந்தாலும் வாரத்துக்கு வாரம் அதிகரிப்பதும், குறைவதுமான நிலை காணப்படுகிறது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வீட்டுக்கு வீடு களப் பயணத்தை ஆரம்பித்து சோதனை மற்றும் அறிவுறுத்தல் வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

சாதாரன காய்ச்சல்,சோம்பல்,பசியின்மை,தலையிடி போன்ற அறிகுறிகள் உடலில் காணப்படுவோர் மருத்துவ மனைகளுக்கு சென்று சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கடந்த வாரம் கிடைக்கப் பெற்ற அறிக்கையின் படி யாழ்ப்பாண மாவட்டத்தில் 38 இடங்களில் டெங்கு நோயாக இருக்கலாம் என்று சதேகத்தில் நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்.ஸ்ரான்லி வீதி, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.ஸ்ரேசன் வீதி, கொக்குவில்,இணுவில், ஆனைப்பந்தி, நாவலர் வீதி, கோண்டாவில், சாவற்காடு, ஆனைக் கோட்டை, ஓட்டுமடம், கலட்டி அம்மன் கோவில் வீதி, வைமன் வீதி, நல்லூர், சுதுமலை . மானிப்பாய், சண்டிலிப்பாய் உள்ளிட்ட 38 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. (ஐ-7)



யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயத்தில் தைப்பூச தினமான கடந்த திங்கட்கிழமை சத்ரு சம்ஹார ஹோமமும், 1008 கலச அபி ஷேகமும், 108 திரவிய அபிஷேகமும் சிவஸ்ரீ ரவீந்திரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றன. (ஐ– 159)

## அடிக்கல் நடல்

தெல்லிப்பழை, ஜன. 25

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கான கிராமச் செயலகம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது. பிரிவுக் கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் ச.சிவசிறி அடிக்கல்லை நட்டு வைத்தார். (ஐ-9)







# மாணவர்கள் 21 பேருக்கு ஈருருளிகள் வழங்கல்


யாழ்ப்பாணம்,ஜன.25

வடமாகாணத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 21 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.

நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

சுவிஸ்சர்லாந்தில் வசிக்கும் மனித நேயர் தம்பையா அன்ரன் ரமேஸின் நிதி அனுசரணையின் கீழ் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை, யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஆகிய இடங்களில் வைத்து கட்டம் கட்டமாக இந்த ஈருருளிகள் பகிர்தளிக்கப்படடன

நிகழ்வில் நல்லூர் றோட்டரிக் கழகத்தின் தலைவர் றொட்டேரியன் றோய் சத்தியசுதாகர், றொட்டேரியன் றவினதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



# நீரிழிவு விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகின் 31 ஆவது அணியினரால் நீரிழிவு விழிப்புணர்வுச் செயலமர்வு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்தியக்கலாநிதி விவியன் சத்தியசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது .

நிகழ்வின் இறுதியில், நீரிழிவுச் சிகிச்சைக்கான யோகமுறைகள் அரங்க ஆற்றுகையாக வெளிப்படுத்தப்பட்டன. இதனை யோகா போதனாசிரியர், எஸ்.உமாசுதன் நெறியாள்கை செய்திருந்தார். ஹரிஷாந்,நா.குயிந்தன், ச.துஜூபா வியாழினி, சி.இமானியா.அ.சாருஜா ஆகிய சித்த மருத்துவ மாணவர்கள் ஆற்றுகை வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ-159)

# பொங்கல் நிகழ்வு

சாவகச்சேரி, ஜன.25

யாழ்ப்பாணம் தென்மராட்சி பொது அமைப்புகளும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றமும் இணைந்து நடத்திய பொங்கல் நிகழ்வு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உப தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதல் அமர்வில் மங்கள விளக்கினை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் ஏற்றிவைக்க சாவகச்சேரி திருவேரகம் இசைக் கல்லூரியின் மாணவன் தெ.திருவேரகன் இறை ஆராதனையை இசைத்தார்.

வரவேற்புரையினை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், ஆசியுரையினை சிவசிறி து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழ்த்திருநாள் சிறப்பு உரையினை தென்மராட்சி இலக்கிய அணியின் நிறுவுநர் ஓய்வுபெற்ற ஆசிரியர் ச.மார்க்கண்டு நிகழ்த்தினார்.

மாகாண தமிழ்த் தினப் போட்டியில் முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் "காளிங்க நர்த்தனம் நாட்டியாஞ்சலி" இடம்பெற்றது.

இரண்டாவது அமர்வாக தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்றமிகு எம்தமிழர் பண்பாடு இன்று என்னும் தலைப்பிலான பட்டிமன்றம் நற்றமிழ்வேந்தன் கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

பொலிகிறது என்னும் தலைப்பில் ந.ஐங்கரன் பா.விக்னேஸ்வரன் ஆகியோரும் நலிகிறது என்னும் தலைப்பில் வே.உதயகுமார் லோ.துஷிகரன் ஆகியோரும் வாதிட்டனர். (ஐ-9, 131)





# பேருந்தால் தவறி வீழ்ந்த காயமடைந்த மூதாட்டி சாவு

## விபத்துக் குறித்துப் பொலிஸார் விசாரணை

சாவகச்சேரி, ஜன.25

பேருந்திலிருந்து தவறிவீழ்ந்து தலையில் காயம் ஏற்பட்ட மூதாட்டி 28 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு முள்ளியான் வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த மாசிலாமணி புஷ்பராணி (வயது 63) என்ற மூதாட்டியே உயிரிழந்தார்.

தனியார் பேருந்து ஒன்றில் ஏறமுற்பட்டவேளை தவறிவீழ்ந்ததில் தலையில் காயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்துச் சம்பவம் மருதங்கேணிப் பகுதியில் கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றது.

அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ச்சியாக சிகிச்சை வழங்கப்பட்டு வந்ததது. மூன்று தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

மூதாட்டியின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பளைப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். விசாரணைகளை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மூலம் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு பணித்ததையடுத்து பளைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கையிட்டனர்.

அறிக்கையினைப் பார்வையிட்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் விசாரணைகளை மேற்கொண்ட திடீர் சாவு விசாரணை அதிகாரி மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்துள்ளார். (ஐ-9)

# விதி மீறிய சாரதியின் விபத்தால் இறந்தவர் பேரில் ரூ. 1.25 லட்சம்

## இழப்பீடு வழங்க நீதிமன்றம் தீர்ப்பு

சாவகச்சேரி, ஜன. 25

**போக்குவரத்து விதிமுறைகளை மீறி விபத்தை ஏற்படுத்தி ஒருவரைச் சாவடையச் செய்த சாரதியை சாவடைந்தவரின் குடும்பத்துக்கு இழப்பீடாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.**

கடந்த 2017 ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில், வீதியில் நடந்து சென்றவரை மோதி அந்தப் பகுதியைச்சேர்ந்த பாலரத்தினம் விமலராஜ் என்பவருக்குச் சாவினை ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை யின் போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து சாவடைந்தவரின் குடும்பத்தினருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த நபருக்கு எதிராகக் கொடிகாமம் பொலிஸாரால், வீதியில் சென்றவரை மோதி சாவினை ஏற்படுத்தியமை, விபத்தினைத் தடுக்க தவறியமை கவனமின்றி வாகனத்தைச் செலுத்தியமை, செல்லும் திசை மாறி வாகனத்தைச் செலுத்தியமை, சாரதிய அனுமதிப் பத்திரம் இன்மை, பாவிக்க முடியாத வாகனத்தை செலுத்திய்மை போன்ற ஆறு குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஆறு குற்றங்களுக்கும் மொத்தமாக 11 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. (9)




## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

கொடிகாமம், ஜன.25

யாழ்ப்பாணம் கெற்பேலி ஜே/332 கிராம அலுவலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் க.தனேஸ்வரன் முன்னிலையில் கடந்த 14 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டன.

உதவும் இதயங்கள் நிறுவனத்தினூடாக ஜேர்மனி நூரன் .பேர்க் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் நிதி அனுசரணையில் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் உதவும் இதயங்கள் அமைப்பின் செயற்பாட்டாளர் ப.கிசோபன் மற்றும் பணிப்பாளர் வே.தனுசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159)

### சன சமூக நிலையத்தின்

## நிர்வாகத்தை எதிர்த்தவர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை

வலி.தென்.ஜன.25

சனசமூக நிலைய நிர்வாகத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர்கள் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பங்கு பற்றாமல் பின்வாங்கியுள்ளனர். இதனால் தற்போதைய நிர்வாக உறுப்பினர்களே மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளுமையின் கீழ் இயங்கும் சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி தவிசாளர் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 9 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

"போதிய அவகாசம் வழங்காமல் விதிமுறைகளுக்கு முரணான வகையில் நடைபெற்ற பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்" எனத் தெரிவித்து முன்னாள் நிர்வாகத்தினர் மீண்டும் பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் கோரியிருந்தனர்.

இவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக பொதுக்கூட்டம் நடத்தப்படாமல் இயங்கி வந்த மேற்படி சனசமூக நிலையத்துக்கான கூட்டத்தை நடத்த முன்வந்துள்ள தவிசாளர் அ.ஜெபநேசன் இது பற்றி நிர்வாகத்துக்கு அறியப்படுத்தியதுடன் கூட்டம் நடைபெறவேண்டிய திகதியையும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய மேற்படி நிலையத்தின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நிர்வாகத்துக்கெதிராகப் போர்கொடி தூக்கிய எவரும் சமூகமளிக்காமையால் தற்போதைய நிர்வாகஉறுப்பினர்களே மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஜ-115)

## சாரதிகள் மூவருக்கு ரூ. 1.75 லட்சம் தண்டம்

சாவகச்சேரி, ஜன. 25

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய மூன்று வாகனங்களின் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டமாக விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.


சாவகச்சேரி பொலிஸாரால் அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றியமை தொடர்பாக மூன்று சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றில் தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக



விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மூன்று சாரதிகளும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபாவும், ஏனைய இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது. (ஜ -9)



திருவண்ணை நகர் கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்தில் சென்ற 21 ஆம் திகதி தைப்பூச தினத்தன்று நடைபெற்ற குடமுழுக்கின்போது.

## காதலுக்குப் பெற்றோர் தடை இளம் பெண் தவறான முடிவு

கொடிகாமம்,ஜன.25

தவறான முடிவெடுத்து இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஆவரங்கால் மேற்கில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது.

காதலுக்குப் பெற்றோர் தடையாக இருந்தமையால் இந்தப் பெண் தவறான முடிவு எடுத்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது

அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மல்லாகம் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிகையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி ஜேக்கப் கிறிஸ்தோப்பர் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இறப்பு விசாரணை அதிகாரி சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேரடியாகச் சென்று அறை ஒன்றில் சேலையில் தொங்கிய நிலையில் காணப்பட்ட சடலத்தை மீட்டு அச்சுவேலிப் பிரதேச வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஜ-159)

## இணைப்பாட விதானச் செயற்பாடு மாணவரைச் சாதனையாளராக்கும்

### ஆசிரிய ஆலோசகர் சோ.திருக்குமரன் தெரிவிப்பு



கொடிகாமம், ஜன. 25

சிறு வயதில் வழங்கப்படும் கற்றல் நடவடிக்கைகள் மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மூலம் எதிர்காலத்தில் மாணவர்களை சிறந்த சாதனையாளர்களாக உருவாக்க முடியும் என்று தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சோ.திருக்குமரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமப்புற பாடசாலைகளில் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் சிறப்பாகச் செயற்பட்ட பலர் இன்று எம் மத்தியில் உயர்வான நிலையில் இருப்பதைக் காண்கின்றோம். பாடசாலைகளில் மாணவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் பொறுப்பான ஆசிரியர்கள் மாணவர்களின் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும்.

> *கிராமப்புற பாடசாலைகளில் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் சிறப்பாகச் செயற்பட்ட பலர் இன்று எம் மத்தியில் உயர்வான நிலையில் இருப்பதைக் காண்கின்றோம்.*

ஒவ்வொரு கல்வி வலயத்திலும் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கென தனியான அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியிலும் போட்டிகளிலும் சிறந்து விளங்குவதைக் காண முடிகிறது.

கிராமப்புற பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வி விளையாட்டு ஊக்குவிப்பு மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்கும்.

இன்றைய காலத்தில் உயர் பதவிகளில் உள்ளவர்களை நோக்கும் போது அவர்கள் கிராமப்புறப் பாடசாலைகளில் கற்று இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புக்களை வேறு பாடசாலைகளில் கற்று முன்னிலையடைந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் உயர்வதற்கு கிராமப்புற பாடசாலைகளே அடித்தளமிட்டன என்பதை மறக்க முடியாது.

ஆரம்ப பிரிவு வகுப்பில் படிக்க மாட்டான் என ஆசிரியரால் வெளியே விடப்பட்ட சிறுவன் எதிர் காலத்தில் சிறந்த விஞ்ஞானியாக மாறியமைக்கு தோமஸ் அல்வா எடிசன் உதாரணமாகக் காணப்படுகிறார். என்றார். (ஜ-159 -9)

## கல்லுமலை விநாயகர் ஆலயத்தைக் கையகப்படுத்தும்

# தொல்பொருள் திணைக்களத்தின் முயற்சிக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

கொடிகாமம், ஜன. 25

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயத்தினை தொல்பொருள் திணைக்களத்தினர் அரசிதழ் அறிவித்தல்மூலம் பதிவுசெய்து தமது திணைக்களத்துக்குச் சொந்தமாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்கு மக்கள் தமது எதிர்ப்பையும் தெரியப்படுத்தியுள்ளனர்.





திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பாக சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலய நிர்வாக சபையினரும், சமளங்குளம் கிராம மக்களும் நேற்று முன்தினம்புளொட்தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம்சித்தார்த்தனைச்சந்தித்து கலந்துரையாடியதுடன், இது தொடர்பாக உரியநடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

ஆலயத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழு உறுப்பினர்களான க. சந்திரகுலசிங்கம் ,கட்சியின் உபதலைவர், வவுனியா நகரசபை உறுப்பினர் சு. காண்டீபன், வவுனியா நகரசபை உறுப்பினர், த. யோகராஜா, கட்சியின்தேசிய அமைப்பாளர், பிரதேசசபைஉறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் கடந்த 1952 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களினால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இந்தக் கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற்தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் என்பனகாணப்படுகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன் தொல்பொருள் திணைக்களத்தினால் கல், மணல்எனக்கட்டடப்பொருள்கள்இந்த வளாகத்தில் இறக்கப்பட்டு சின்னங்களைச் சீரமைக்க முயற்சித்த போது, ஆலய நிர்வாகத்தினரும், பொதுமக்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

இவ்வாலயத்தில் பரம்பரை பரம்பரையாகத் தாம் வழிபட்டு வருவதாகவும், தற்போது தொல்பொருள் திணைக்களத்துக்குச்சொந்தம்என்றுதெரிவித்து, புத்தர் சிலையினை ஸ்தாபிக்க முயல்வதாகவும்அப்பகுதிமக்கள்இதன்போது குற்றம்சுமத்தியிருந்தனர். (க-159)



## கல்வியில் சிறந்து விளங்கினால் விடுதலையை வென்றெடுக்கலாம்

### பச்சிலைப்பள்ளி தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 25

கல்வியில்சிறந்துவிளங்குவதன் மூலம் எமது இனத்தின் விடுதலையை வென்றெடுக்கலாம் எனப் பச்சிலைப்பள்ளி தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார். அண்மையில் முகமாலை கிராமத்தில் மிகவும் வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்களாகிய எங்களுக்குரிய உரிமைகளை ஏனைய இனங்கள் தர மறுத்துவருவதுடன், நாங்கள் இந்த நாட்டின் வேண்டப்படாத இனமாகவும்கருதப்படுகிறோம். எனவே நாங்கள் பன்னாடுகளான இஸ்ரேலைப் போல் கிழக்கு திமோர் என்ற நீக்ரோ போல் அறிவுரீதியாக முன்னேற வேண்டும் ,அத்துடன் கல்வியில் சிறந்து விளங்குவ தன் மூலம் எமது இனத்தின் விடுதலையை வென்றெடுக்கலாம் -என்றார்.

சமூக ஆர்வலர் ஒருவரின் நிதி உதவியின் மூலம் கற்றல்உபகரணங்கள்கொள்வனவுசெய்யப்பட்டுவழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில்பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், தமிழரசுக் கட்சியின் முகமாலை அமைப்பாளர் லயாமற்றும்மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-6)

## ஈருருளியும் கற்றல் உபகரணங்களும் வழங்கல்



வவுனியா.ஜன.25

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினரால் செட்டிகுளம் பகுதியில் தாய் தந்தையை இழந்த மாணவனுக்கு, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் அண்மையில் ஈருருளியும் கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம், வீரபுரம்பகுதியில்தாய்தந்தையை இழந்து பேரனுடன் வசித்துவரும் வசதியற்ற பாடசாலை மாணவனுக்கு உதவிபுரியுமாறு கோரியதையடுத்து, புலம்பெயர்ந்துசுவிஸ்நாட்டில்வசித்துவரும்தாயகஉறவான சக்தி பாலகுமாரின் நிதி உதவியில் தமிழ் விருட்சம் ஊடாக இவை வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (க-111)





## குழந்தை யேசு ஆலய வருடாந்த திருவிழா

முல்லைத்தீவு.ஜன.25

புதுக்குடியிருப்பு அற்புத குழந்தை யேசு ஆலய வருடாந்த திருவிழா கடந்தசெவ்வாய்க்கிழமைகாலைஅருட்பணிஅன்ரனிதாஸ்அடிகளார் தலைமையில் நடைபெற்றது .

கடந்த 6 ஆம் திகதி மாலை ஆலயப் பங்குதந்தை அருட்பணி சுதர்சன் அடிகளார்தலைமையில்கொடியேற்றம்இடம்பெற்று, தினமும்மாலை திருசெபமாலையுடன் நவநாட் திருப்பலி இடம்பெற்றது.


14ஆம்திகதிமாலைநற்கருணைபெருவிழாவும், 15ஆம்திகதிதிருவிழா திருப்பலி யும் அருட்பணி அன்ரனிதாஸ் அடிகளார் தலைமையல் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாதிருப்பலியில்கடந்தகாலங்களில்இடப்பெயர்ந்து வாழ்ந்த மக்களும் அயல் பங்குகளைச் சேர்ந்த பங்கு மக்களும்கலந்து கொண்டனர். (க)

## அன்புக் கன்னியர் இல்லத்துக்கு அடிக்கல்

முல்லைத்தீவு.ஜன.25

இரணைப்பாலைப் பங்கில் அமைந்துள்ள ஆனந்தபுரம்கிராமத்தில்அன்புக்கன்னியர்சபை அருட்சகோதரிகளுக்கான இல்லம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இரணைப்பாலை பங்குத் தந்தை அருட்திரு லியோஆம்ஸ்ரோங்தலைமையில்இடம்பெற்ற



இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிக்கல் நட்டுவைத்தார்.

இதில் அன்புக்கன்னியர்சபையின்வடமாகாண ஆலோசகர்அருட்சகோதரியோகராணிமுல்லை மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்திரு ஜோர்ச் ஏனைய அருட்தந்தையர்கள்அருட்சகோதரிகள் பங்குமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (க-222)

## 105 மாணவர்களுக்கு கற்றல் கருவி வழங்கல்

முல்லைத்தீவு,ஜன.25

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியில் 105 மாணவர்களுக்கு கற்றல்உபகரணங்கள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன. கடந்த17 ஆம்திகதிநடைபெற்றஇந்தநிகழ்வில்ஈழமக்கள்புரட்சிகரவிடுதலைமுன்னணிக்கட்சியின் ஏற்பாட்டில் கனடாவில் உள்ள சி. ராஜேந்திரனின் நிதிப்பங்களிப்பில் மாணவர்களுக்கானகற்றல்உபகரணங்கள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன. வன்னிமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்சிவசக்திஆனந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க. அமலன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்குக்கற்றல்உபகரணங்களைவழங்கிவைத்தனர். (க-ரி3)



# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மின்சார சபைக்கு எதிராக முறையீடு

## உரிமையாளர் மறுத்தும் வாடகைதாரருக்கு மின் இணைப்பு

வவுனியா,ஜன.25
இரண்டு இலட்சம் ரூபா மின்சாரக் கட்டணத்தை செலுத்தி, தனது காணி மற்றும் கடையின் மின் இணைப்பைத் துண்டித்த காணி உரிமையாரின், உரிமையை மீறி மின்சார சபையினர் உணவகம் ஒன்றுக்கு மின் இணைப்பை வழங்கியமையால் காணி உரிமையாளரான முன்னாள் போராளி மனித உரிமை ஆணைக்குழுவை நாடியுள்ளார்.

கனகராயன்குளம் பெரியகுளம் பகுதியில் ஏ-9 வீதிக்கருகில் வசிக்கும் முன்னாள் போராளியான பேரம்பலம் வந்தகுமார் என்ற தமிழ்க்குடும்பத்தினர், தமது காணியின் ஒரு பகுதியை முஸ்லிம் சமூகத்தவர் ஒருவருக்கு உணவகம் அமைப்பதற்காக வாடகைக்கு வழங்கியுள்ளனர்.

உணவகத்துக்கான ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில், உணவகத்தினை நடத்துபவர் காணியை மீண்டும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கவில்லை. இந்த பிரச்சினை தொடர்பாக வவுனியா நீதிமன்றில் உரிமையாளர் வழக்கு தொடுத்துள்ளதுடன், அது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்றும் வருகின்றது.

இந்த நிலையில் உணவகத்துக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பை, காணியின் உரிமையாளர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் துண்டித்திருந்தார்.

உணவகத்துக்குச் சில நாள்களுக்கு முன்னர் மின்சார சபையினரால் மின் இணைப்பு புதிதாக வழங்கபட்டிருந்தது.

மின் இணைப்பு வழங்கபட்டமைக்கு எதிராக காணியின் உரிமையாளரால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்துக்கு முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு, மின்பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை கிளிநொச்சி, பிரதேச மின் பொறியியலாளர் இலங்கை மின்சார சபை மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய இருவருக்கும் அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா பெரியகுளம், கனகராயன்குளம் பகுதியிலுள்ள தாவூத் உணவகம் அமைந்துள்ள காணிக்கு மின்சார இணைப்பு வழங்கியமைக்கு முறைப்பாட்டாளரது அனுமதி பெறப்பட்டுள்ளதா?

குறித்த காணி அனுமதிப்பத்திரக் காணி என்பதால் தாங்கள் மின் இணைப்பு வழங்கவேண்டுமானால் குறைந்தது, கிராம அலுவலகர் மற்றும் பிரதேச செயலரிடமிருந்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். அதனைப் பெற்றீர்களா? அவ்வாறு இணைப்பை வழங்குவதற்கு தங்களுக்கு அதிகாரமிருப்பின் சட்டத்தின் அதிகாரம் என்ன? என்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கும், முறைப்பாட்டாளருக்கும் குறித்த காணி அத்துமீறல் தொடர்பில் நீதிமன்ற வழக்கு இடம்பெற்று வரும் நிலையில், தங்களது புதிய இணைப்பினை வழங்க எடுத்த தீர்மானத்துக்கு ஏதுவான சட்டரீதியான காரணங்கள் தொடர்பாகக் கேட்டறிவதற்காக குறித்த இருவருக்கும் அழைப்பாணை விடுக்கபட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (க-110)

# மடுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழா

மன்னார்,ஜன. 25
மடு பிரதேச செயலகத்தினரின் பொங்கல் விழா பிரதேச செயலர் ஜெயகரன் தலைமையில் அண்மையில் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

பொங்கல் நிகழ்வின் சிறப்பம்சமாக மடுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 17 கிராம அலுவலர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், 17 பானையில் பொங்கப்பட்டதுடன், சிறப்பு விவாதங்களும் விளையாட்டுப் போட்டிகளும், கயிறு இழுத்தல், மாலைகட்டுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலருடன் பிரதேச செயலகத்தின் அலுவலகத்தினர் ஊர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-213)





# காலை 8 மணியாகியும் நீடிக்கும் பனி மூட்டம்

## வவுனியால் மக்கள் சிரமம்

வவுனியா, ஜன.25
தற்போது நாட்டில் இரவு நேரத்தில் குளிரான கால நிலை காணப்படும் நிலையில், வவுனியாவில் காலை வேளையில் கடும் பனி மூட்டம் காணப்படுகின்றது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி கடந்தும் பனிமூட்டம் காணப்படுகின்றது. அதனால் வாகனச் சாரதிகள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளனர்.

பாடசாலை செல்லும் மாணவர்களும், அலுவலர்களும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர். அதிக பனிமூட்டம் காரணமாகக் காலை வேளை மக்களின் நடமாட்டமும் குறைந்துள்ளது.

அதேவேளை, வடக்கில் ஏற்பட்டுள்ள குளிர் கால நிலை ஓரிரு வாரங்கள் தொடரும் என்று கூறப்படுகின்றது. (எ-110)



# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி,ஜன.25
கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் சி. கலைச்செல்வனின் நிதி உதவியில் கிளிநொச்சி செல்வா நகர் அ.த.க பாடசாலையின் முதலாம் தர புதிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற கால்கோள் விழாவில் இவ்வுதவி வழங்கப்பட்டது. அமரர் ரகுநாதன் ஜெயநாயகி ஞாபகார்த்தமாக புலம்பெயர்ந்த தேசத்திலே வாழும் அவரது மகன் மயூரனின் நிதி உதவியின் மூலம், மாணவர்களுக்கு புத்தகப்பைகளும் வழங்கப்பட்டன. (க-222)



# கற்றல் நிலையத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா, ஜன.25
வவுனியா, புளியங்குளம் முத்துமாரி நகர் கிராமத்தில் இலவசக் கற்றல் நிலையமும், நூல் நிலையத்துக்குமான அடிக்கல் நடும் விழா நேற்று நடைபெற்றன. வவுனியா வடக்கு கனகராயன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் இவை அமைக்கப்படவுள்ளன.
சுவிஸ் நாட்டில் வசிக்கும் விதுசன் சபீனா குடும்பத்தின் உதவியுடன் எழுகை தன்னார்வத் தொண்டு அமைப்பு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நிகழ்வில் புளியங்குளம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பரமேஸ்வரநாதன், அபிவிருத்தி அலுவலர் எஸ்.தவபாலன், புளியங்குளம் ஆரம்ப பாடசாலை அதிபர் த.சிவராஜா, புரட்சி விளையாட்டுக்கழகத் தலைவர் அமிர்தராஜ், எழுகை சுவிஸ் செயற்பாட்டாளர் சி. யோகராசா, எழுகை இலங்கை தலைவர் செ. கேசவன், செயலர் கோபாலகிருஸ்ணன் ரூபகாந், பொருளாளர். அ. யோகமலர் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-110)

# புதியகல்வியாண்டுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா.ஜன.25
உயர்கல்வி, நீர்வழங்கல், நகர திட்டமிடல் அமைச்சின் கீழான இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் வவுனியா கற்கை நிலையத்துக்கு 2019 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிருந்து இலங்கை தொழில் நுட்பவியல் கல்வி நிறுவகத்தால் நடத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமாவுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரிவிண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்டு முற்றையாக ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், கணக்கு இல. 02520011339 7613 மக்கள் வங்கி, ஹைட்பார்க் கிளை (கொழும்பு) அல்லது வேறேதேனும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.500 ஐ பற்று வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், 'கல்வி இணைப்பாளர், உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம், எ9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா' எனும் முகவரிக்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பாடநெறியைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு அல்லது பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூபா 500 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த வேறு கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்பிக்க முடிவதுடன், அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிகதகவல்களுக்கு தொலைபேசி இல : 024 - 2052733
முகவரி: கல்வி இணைப்பாளர், உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம், எ9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா. எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்தல் விடுகபட்டுள்ளது. (க-110)

# மக்கள் நலன் காப்பகத்தால் 25 குடும்பங்களுக்கு உதவி

முல்லைத்தீவு,ஜன.25
கொக்குத்தொடுவாயில் 25 குடும்பங்க ளுக்கு மக்கள் நலன்காப்பகத்தினால் உதவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. மக்கள் நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் அத்தியாவசிய பொதி மற்றும் உடுபுடவைகள் என்பன அண்மையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் மக்கள் நலன் காப்பகத்தின் நிர்வாகி மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டு மக்களுக்கான உதவிகளை வழங்கிவைத்துள்ளனர். (க-ரி3)



## மன்னார் லூசியா மைதானத்தை விரைந்து சீரமைக்கக் கோரிக்கை

மன்னார், ஜன.25

மன்னார், பள்ளிமுனை புனிதலூசியாவிளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகியுள்ளபோதும் அவை நிறைவு பெறவில்லை.

மைதான அபிவிருத்திப் பணிகளை விரைந்து முடிக்க ஆவண செய்ய வேண்டும் என்று கிராம மக்களும், விளையாட்டுக் கழகத்தினரும்கோரிக்கை விடுத்துள்ளனர்.

மைதான அபிவிருத்தி நடவடிக்கைகள் 2014ஆம் ஆண்டு நகரத் திட்டமிடல் அதிகார சபையின் நிதி உதவியுடன் மன்னார் நகர சபை ஊடாக ஆரம்பிக்கப்பட்டன. இந்த அபிவிருத்திகளுக்காக நகரத் திட்டமிடல் அதிகார சபை 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

விளையாட்டு மைதானத்துக்கான சுற்றுமதில், பார்வையாளர் அரங்கு என்பன அமைத்தல், மைதானத்தைச் சமப்படுத்தி மண் நிரப்புதல், மைதானத்தில் புல் வளர்த்தல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மைதானம் சமப்படுத்தப்பட்டு, பல இலட்சம் ரூபா செலவில் புற்கள் நடப்பட்டபோதும் அவை தற்போது கருகியுள்ளன. பார்வையாளர் அரங்கும் அமைக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 26 மில்லியன் ரூபா வரை அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்டுள்ளது. ஏனைய அபிவிருத்திப் பணிகள் இன்னமும் நிறைவு பெறவில்லை.

அபிவிருத்திப் பணிகளை விரைவில் முடிவுறுத்த வேண்டும் என்று பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் பயன் கிட்டவில்லை.

மைதான அபிவிருத்திகள் மந்தகதியில் நடைபெறுவதால் பள்ளிமுனைக் கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அதனால் மைதான அபிவிருத்திப் பணிகளை உடனடியாக முழுமைப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் கருத்தறிய நகர சபைத் தவிசாளரைத் தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் அது பயனளிக்கவில்லை.(எ-56.213)

# பொதுப் பாவனைக்கென வழங்கப்பட்ட லான்ட் மாஸ்டர் பராமரிப்பின்றி நாசம்

### மகளிர் அமைப்பின் மீது குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,ஜன.25

மீள்குடியேற்றத்தின் பின்னர் ஒட்டுசுட்டான் பகுதி வித்தியாபுரம் மக்களின் பயன்பாட்டுக்கென "அம்குறோ" நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில், இருசில்லு உழவு இயந்திரம் ஒன்று வித்தியாபுரம் கிராமிய மகளிர் அமைப்புக்கு வழங்கப்பட்டது.



அமைப்பினர் பராமரிப்பின்றியும், சரியான கண்காணிப்பின்றியும் நடந்துகொண்டதால்,அதன்உதிரிப்பாகங்கள் கழற்றி எடுக்கப்பட்ட நிலையில், முன்னைநாள் கிராமிய மகளிர் அமைப்பு பொருளாளர் தயாநிதி வீட்டில் தேடுவாரற்ற நிலையில் காணப்படுகிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று வித்தியாபுரம் கிராமிய அபிருத்திச் சங்கத்தலைவர் தி.தங்கத்துரை தெரிவித்தார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்ணளவாக 4 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த இருசக்கர உழவு இயந்திரம் 2010 ஆம் ஆண்டு இவர்களுக்கு வழங்கப்பட்டது. மக்களின்பாவனைக்காக வழங்கப்பட்ட தொழில் உபகரணத்தை அசண்டையீனமாகக் கரிசனையில்லாமல்விட்டமையால், கிட்டத்தட்ட 9 வருடங்கள் அதனைப் பயன்படுத்திப் பயன்பெறத் தவறியுள்ளனர்.

இந்த இயந்திரத்தை மீள செயற்பட வைக்க 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகும் நிலையில் தற்போது காணப்படுகிறது. எமதுகிராமமக்களின் வறியநிலைகண்டு அவர்களுக்கு பயன்படும்வகையில், அம்குறோ நி நிறுவனத்தின் நிதியீட்டத்தில் இருந்து இருசில்லுஉழவுஇயந்திரத்தினைமகளிர்அமைப்புக்குவழங்கினர். ஆனால் அந்த இயந்திரத்தினை அமைப்பினர் சரியான முறையில் கண்காணிக்காது, பொறுப்பற்ற முறையில் மூலையில் விட்டதால், அதன் உதிரிப்பாகங்களும் கழற்றப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்படுவதுஎமதுகிராமமக்களே.

இது தொடர்பாக கிராமிய அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலர், ஆகியோருக்கு கிராமிய அபிவிருத்தித் சங்கத் தலைவர் என்றமுறை யில் தெரியப்படுத்தியிருந்தேன். ஆனால் அதுபற்றி எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ஒருகிராமமக்களின்நன்மைகருதிஅக்கிராமத்தின் அமைப்புக்கு வழங்கப்பட்ட இயந்திரத்தினை, சரியான பராமரிப்பின்றி, பொறுப்பற்ற தன்மையில் பாதிக்கப்படவிடுவதால் எமது கிராம மக்களேவெகுவாகப்பாதிக்கப்படுகின்றனர். எனவே எமது கிராம மக்களின் நன்மைகருதி, அமைப்பினர்மீதுநடவடிக்கை எடுக்கவேண்டுமென கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தி. தங்கத்துரை மற்றும் கிராம மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம்கேட்டுள்ளனர் என்றார்.

இயந்திரம் வழங்கப்பட்ட காலத்தில் அமைப்பின் தலைவியாக இருந்த வே. றீட்டாரோகினியிடம் இது பற்றிக் கேட்டபோது தான் பொறுப்பில் இருந்த காலத்திலும், அதற்குபின்னரும் உரியவர்களுக்கு இது பற்றித் தெரிவித்தும் யாரும் கவனத்தில் எடுக்கவில்லை. செயலரான தமயந்தியும் அதனை மற்றவர்கள் பயன்படுத்தும் வகையில் பாதுகாக்கவில்லை, அல்லது பொறுப்பான யாரிடமும் கையளிக்கவும் இல்லை - என்றார். கிராம அலுவலரைத்தொடர்புகொண்டுகேட்டபோது கிராமிய அமைப்புக்களின் அக்கறையின்மையே இதற்குக் காரணம் - என்றார். (க-500)

## படைப்புழுவை எதிர்கொள்ள முழுவீச்சில் நடவடிக்கைகள்

கிளிநொச்சி, ஜன.25

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள படைப் புளுத் தாக்கத்தை எதிர்கொள்வது தொடர்பாக நேற்றுக் கிளிநொச்சியில் செய்தியாளர் சந்திப்பொன்று நேற்று நடத்தப்பட்டது.

விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் விவசாய ஆராய்ச்சி நிலைய வடபிராந்தியமேலதிகபணிப்பாளர்சின்னத்துரை ஜேம்சன் அரசகேசரி மற்றும் வடமாகாண விவசாய ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் உதவிப் பணிப்பாளர் சிறின்பரமலிங்கம் ராஜேஸ் கண்ணா ஆகியோர் விளக்கங்களை வழங்கினார்.

இரவு நேரங்களில் தான் இந்தப் படைபுழுவை அவதானிக்க முடியும். தலைப் பகுதி "வை" உருவமானது. வெள்ளைக்கோடுகள் காணப்படும்.

பயிர்ச்செய்கை ஆரம்பித்து 15 நாள்களில் இருந்து இவற்றை அவதானிக்க வேண்டும். உரிய நேரத்தில் பயிர்ச் செய்கை மேற்கொண்டு உரிய நேரத்தில் அறுவடை செய்வதன் ஊடாக இதைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்தப் பீடைகளுக்கு எதிரான பயிர்களை எதிர்காலத்தில் பயிரிட வேண்டிய தேவை உள்ளது. ஆபிரிக்காவில் இதற்கு எதிராக நேப்பியர் என்ற புல் பயிரிடப்படுகின்றது. அவை இந்தப் பீடைகளைக் கவருபவையாகக் காணப்படும். நாளடைவில் இந்தப் புல்லில் முட்டையிடும். புல்லில் காணப்படும் மயிர்கள் போன்றவை அவற்றை அழித்துவிடும். அதைத் தவிர டெஸ்மேனியா என்ற தாவரத்தைச் சோளத்துக்கு இடையே நடலாம். இந்தப் பயிர் புழுக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும். இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தலாம். ஆனால் முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் இல்லை. ஆனாலும் இது தொடர்பில் ஆய்வுகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)



# தொழில்சார்ந்த தொழில்நுட்ப அறிவை வளர்ப்பது அவசியம்

### கரைச்சித் தவிசாளர் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி ஜன 25

உயர் தொழில்நுட்ப அறிவே தற்போது உலகை ஆளுகின்றது. உந்துருளி சுத்திகரிப்பா ளர்களுக்கு உயர் தொழில்நுட்ப அறிவு அவசியம்.

இவ்வாறு கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் ஆ. வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட உந்துருளிகள் சுத்திகரிப்பு உரிமையாளர் சங்கத்தின் ஆரம்ப நிகழ்வு பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் ஏற்பாடு செய்யபட்டிருந்தது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றி போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரே தொழில் சார்ந்த தொழிலாளர்கள் ஒன்றினைந்து ஒரு சங்கமாக பரிணமித்தல் ஒரு சக்தி மிக்க செயற்பாடாகும். வெறும் "கறாஜ்காரர்கள்" என்கின்ற சமூக மன நிலையை நாம் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு உரிமையாளரும் தான் சார்ந்த தொழில் துறையில் நவீன தொழில்நுட்ப அறிவையும் அனுபவத்தையும் கற்றல் வேண்டும். பட்டம் பெற்றால் மட்டும்பொறியியல் துறையில் மிளிரலாம் என்பதற்கு அப்பால் அறிவு, அனுபவம், தேடல் என்பவற்றின் ஊடாக ஒவ்வொரு உரிமையாளரும் உயர் தொழில் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிளிநொச்சியில் இருந்து ஏராளமான அரச வாகனங்கள் தூய்மிப் புக்காகவும் திருத்துவதற்காகவும் மாவட்டதுக்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. அதனால் அதிக பணமும் அதிக நேரமும் செலவாகின்றன. எமது மாவட்டத்தின் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பும் பயனற்று போகிறது.

உயர் தொழில்நுட்பம் தான் எமக்குச் சவாலாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். தொழில்நுட்ப ஆற்றலே இன்றைய உலகை ஆளுவதால் அத்தகைய உயர் நிலை நோக்கி இந்தச் சங்க உறுப்பினர்கள் பயணிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.என்றார்

நிகழ்வில் பிரதேச சபை உப தவிசாளர் தவபாலன், உறுப்பினர் ஜீவன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி நகர அமைப்பாளர் நகுலன், பிரதேச சபை செயலர் கம்சநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-9)

## வாழ்வுதயத்தின் பொங்கல் விழா

மன்னார், ஜன.25

மன்னார், கரித்தாஸ் வாழ்வுதயத்தின் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் மன்னாரில் நடைபெற்றது. நிகழ்வுக்கு கரித்தாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்பணி செ. அன்ரன் அடிகள் தலைமை தாங்கினார். முதன்மை விருந்தினராக மன்னார் நகர முதல்வர் அன்ரனி டேவிற்சன் கலந்துகொண்டார்.

விருந்தினராக மௌலவி மொஹமட் அன்வரும் கலந்துகொண்டார்.

நிகழ்வுகளில் வாழ்வுதயத்தில் கணினிக் கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்கள், மாணவிகள் பங்கு கொண்டனர். பொங்கலிடப்பட்டு அனைவருக்கும் அது பகிரப்பட்டது. உழவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வழிபாடுகளும் நடத்தப்பட்டன. (எ-56)








# யாழ்ப்பாணத்தில் பெய்யும் மழை வீழ்ச்சியில் வெறும் 2 வீதமே குடிதண்ணீருக்குத் தேவை!

## மிகுதியை வீணடித்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார் எந்திரி சர்வராசா

யாழ்ப்பாணம், ஜன.25

மழை மூலமாகக் கிடைக்கும் தண்ணீரே யாழ்ப்பாணத்து மக்கள் குடிப்பதற்குப் போதுமானதாகக் காணப்படுகிறது. ஆனால் நாங்கள் அதைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரியாதவர்களாகவே உள்ளோம் என்று யாழ்ப்பாண மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சர்வராசா தெரிவித்தார்.

ஆறுமுகம் திட்டம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொது நூலக சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: அக்கரைப் பச்சை என்றே எல்லோரும்நினைக்கின்றனர். ஆனால் இக்கரையும் பச்சை என்று நான் கூறுகின்றேன். இதுதான் உண்மை. அதாவது யாழ்ப்பாணத்துக்கு ஆயிரத்து 250 மில்லியன் கனமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கிறது. யாழ்ப்பாண நிலப்பரப்பு ஆயிரம் சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. ஒருமனிதருக்கு ஒருநாளைக்கு குடிப்பதற்குத் தேவையான குடிதண்ணீர்த் தேவை 9 லீற்றர் என்று பார்த்தாலும் யாழ்ப்பாணத்தில் 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் இருந்தாலும் கூட ஒருவருடத்துக்கு 19 மில்லியன் கனமீற்றர் குடிதண்ணீர்தான் தேவைப்படுகிறது.

இன்று யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர்ப்பிரச்சினை, அது இது என்று கதைத்துக் கொண்டிருப்பது எங்களுக்குக் கிடைப்பதில் இரண்டு வீதம் கூட இல்லை. கிடைக்கும் நீரைப் பயன்படுத்த முடியவில்லை என்பது எங்களுடைய திறமையின்மை என்றுதான் பொருள். நாங்கள் உழைத்துச் சம்பாதித்து அதில் வரும் பணத்தைக் கொண்டு குடும்பம் நடத்தத் தெரியாமல் வெளிநாட்டில் இருந்து பணம் கேட்பதைப் போலத் தான் இதுவும் அமையும். ஒருவர் இரண்டு பரப்புக் காணி வைத்திருப்பார் என்றால் அதில் 6 லட்சத்து 25 ஆயிரம் லீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கிறது.

ஒருநாளைக்கு 100 லீற்றர் கொள்கலனை நிரப்புகின்றோம் என்றால் ஒருவருடத்து 3லட்சத்து 65ஆயிரம் லீற்றர் தண்ணீர்தான் தேவைப்படுகிறது. இதைப் பார்த்தாலே நான் எவ்வளவு தூரம் தண்ணீரை விரையம் செய்கிறேன் என்பதை உணரமுடியும்.

இதற்கு நாம் சில திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். கிடைக்கின்ற நீரை நாம் நிலத்துக்குள் செலுத்தவேண்டும். அப்போது நிலத்தடி நீர் மேம்படும். வறட்சியை ஏற்படுத்தாது என்றார்.

கிராமப் புறங்களில் இருந்து நகரத்தை நோக்கி மக்கள் படையெடுக்கின்றனர் என்றும் அதனால் யாழ்ப்பாண நகரில் குடிதண்ணீர் பல வழிகளாலும் மாசுமடுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நிலத்தடி நீர் தொடர்பில் யாழ்ப்பாணமாநகர சபைச்சட்டம்ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்பதையும் அவர் அந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தியிருந்தார். (21)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பட்டயப் பயிற்சிநெறி தொடக்கம்

வலி.தென்மேற்கு, ஜன. 25

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் விண்ணப்பிக்கமுடியும் என்று இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் சகல பிரதேச சபைகளுக்கும் அறிவித்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில்தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளூராட்சி விடயப் பரப்பு பற்றிய முறையான மற்றும் பரந்தளவிலான அறிவைப் பெற்றுக் கொடுப்பதே இந்தப் பயிற்சிநெறியின் முக்கிய நோக்கமென்று உள்ளூராட்சி ஆளுமை நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த வர்கள் மட்டும் இந்தப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற 'அரசியல் பிரவேசம்' பற்றிய சான்றிதழ் பாடநெறியைக் கற்றுக் கொண்டவரும் அதற்கு விண்ணப்பிக்க முடியும். அல்லது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குச் சமமான கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்மொழியில் இடம்பெறும் இந்தப் பாடநெறி ஒரு வருடத்துக்கு ஒவ்வொரு வாரமும் ஒருநாள் வீதம் நடைபெறும். இந்தப் பாடநெறிக்கு ரூபா 60 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்படும். பயிற்சிநெறி மாகாணத்தினுள் தெரிவு செய்யப்பட்ட ஒரு பயிற்சி நிலையத்தில் நடைபெறும். பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் பிரதேச சபைகள் மூலமாக உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (கு-115)

# போர் இடம்பெற்ற காலத்தில் சிங்களவருக்கு உதவினோம்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு



மன்னார், ஜன.25

போர் இடம்பெற்ற போது உயிரைச் துச்சமெனமதித்துவன்னி மாவட்டத்தில்வாழ்ந்த சிங்கள மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்ததுடன், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றினோம். தேர்தலை இலக்காகக் கொண்டு நாம் செயற்படவில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

வவுனியா வடக்கில் வாழும் பெரும்பான்மையின மக்களால் அமைச்சருக்குநேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் இனங்களுக்கிடையே மோதல் ,மதங்களுக்கிடையே பிரச்சினைகள், சமூகங்களுக்கு இடையே பிரிவினைகள்மேலோங்கி இருந்தன. அதனால் பிளவுகளும் பிரச்சினைகளும் அதிகரித்திருந்தன. சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையிலான பிளவுகள் ஏற்பட்டதால் மாவட்டத்தின் அமைதி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

மக்களின் துன்பங்களிலே நாம் ஒருபோதும் அரசியல் நடத்த விழைந்ததில்லை. எமது சேவையை அங்கீகரித்ததால் தான் எங்களது அரசியல் செயற்பாடுகளுக்கும் சிங்கள சகோதரர்கள் ஆதரவளிக்கத் தொடங்கினர். அண்மையில் அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தின் போது, அரசமைப்புச் சட்டத்தையும் ஜனநாயகத்தையும்பேணிப் பாதுகாக்கும்நோக்கில் நாம் சரியான முடிவு எடுத்தோம். நீதியும் எமக்குத்துணைசெய்தது. வவுனியா சிங்கள கம்மான ,வெலிஓய மற்றும் ஏனைய இடங்களிலும்வாழும் சிங்கள சகோதரர்களின் நல்வாழ்வுக்கும் , அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றவும் நாம் கடந்த காலங்களில் காத்திரமான திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றோம்- என்றார். (எ-56)

# மிதிவெடியில் காயமடைந்த பணியாளர் நலமுடன் உள்ளார்

கிளிநொச்சி, ஜன. 25

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது அது தவறி வெடித்தலில் காயமடைந்த தமது ஊழியர் நலமாக உள்ளார் என்று ஹலோரஸ்ட் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்த அசம்பாவிதத்தால் எமது பணியாளர்களில் ஒருவர் சாதரணமான காயங்களுக்குள்ளானார். குறிப்பிட்ட பணியாளர் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு தற்பொழுது சிறந்த சிகிச்சையும் பராமரிப்பும் பெற்றுவருகின்றார்.

இந்தக் காயமானது உயிருக்கு ஆபத்தானதல்ல. இடது பக்க விரலில் உடைவும் சில கீறல்களும் ஏற்பட்டுள்ளன. நோயாளி தெளிவாகவும் நலமாகவும் உள்ளார் என்றுள்ளது. (ம-6)

# படைப் புழுக் கட்டுப்பாடு தொடர்பில் விழிப்புணர்வு




யாழ்ப்பாணம், ஜன.25

படைப் புழுவைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று மருதனார்மடத்தில் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஊர்வலம், வலி.தெற்குப் பிரதேச சபையின் அலுவலக வாயிலில் இருந்து ஆரம்பித்து கே.கே.எஸ்.வீதி ஊடாக மருதனார் மடம் சந்திவரை சென்றது.

யாழ்ப்பாண மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி சிறிரங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ். மாவட்டக் கால்நடை உற்பத்திச் சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் திருமதி அமிர்தலிங்கம் வட்சலா, யாழ்ப்பாணம் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.நிசாந்தன், யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி கருணைநாதன், யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான அலுவலர் (பயிர்ப் பாதுகாப்பு), பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், உடுவில் பிரிவின் கமநலசேவை நிலையத்தின் விவசாய அலுவலர்கள், உடுவில் பிரதேச செயலக அலுவலர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

படைப்புழுவானது இதுவரை இலங்கையில் கண்டுபிடிக்கப்படாத ஆக்கிரமிப்பு தடுப்புக் காப்பு பீடையாகும். இந்த அந்நிய படைப் புழுவானது சோளம், இறுங்கு, கரும்பு, நெல், மரக்கறிகள், பழங்கள், அவரைப் பயிர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான பயிர்களைத் தாக்கி அழிக்கக் கூடியது. தற்போது அம்பாறை, அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் போன்ற இடங்களில் சோளப் பயிர்களைப் பெருமளவில் பாதித்துள்ள இந்தப் பீடையின் தாக்கம் நாடு முழுவதும் பரவி வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டங்களின் சில இடங்களிலும் இந்தப் புழு இனங்காணப்பட்டுள்ளது. (எ)

# ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இன்று பெரும் போராட்டம்!

## மைத்திரியின் கவனத்தைக்கோரி மட்டக்களப்பில் இடம்பெறுகிறது



செங்கலடி, ஜன. 25

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.ஹிஸ்புல்லாஹ் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இன்று வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் இனத்துக்கோ மதத்துக்கோ எதிரானதல்ல, ஆளுநர் எம். ஹிஸ்புல்லாஹ் என்பவரை ஏற்க மறுப்பதே என்று தமிழ் உணர்வாளர் அமைப் பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடியில் உள்ள தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிழக்கு மாகாணம் பல்லின மக்களைக் கொண்ட பகுதி. தமிழரோ, முஸ்லிமோ அல்லது சிங்களவரோ ஆளுநராக வரமுடியும். யார் வந்தாலும் எமக்குப் பிரச்சினை இல்லை. ஹிஸ்புல்லாஹ் ஆளுநராக நியமிக்கப்பட்டதை மாத்திரமே நாங்கள் ஏற்க மறுக்கின்றோம்.

தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி ஓட்டமாவடியில் காளி கோவில் காணியை அபகரித்தவர். தனக்குச் சாதகமாக தீர்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் நீதிபதியை மாற்றித் தீர்ப்பைச் சாதகமாகப் பெற்றுக்கொண்டவரே ஹிஸ்புல்லாஹ். வடக்கு - கிழக்கு இணைந்தால் குருதி ஆறு ஓடும் என்று கூறியவர். இவர் வாழைச்சேனை நீதிமன்றில் நிபந்தனை அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனத்தை ஏற்க மறுக்கின்றோம் என்பதை அரசதலைவருக்கும் நாட்டு மக்களுக்கும் காட்டுவதற்காகவே மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் மக்களை வீட்டுக்குள் முடங்கி வீதிகளை வெறிச்சோடச் செய்யும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்- என்று தெரிவித்தார். (த)

## கடந்த வருடம் மட்டுவில்
# 5,800 தெருநாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி


மட்டக்களப்பு, ஜன. 25

மட்டக்களப்பில் கடந்த 6 மாத காலத்தில் சுமார் 5ஆயிரத்து 800 தெரு நாய்களுக்குக் கருத்தடை, விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த கால்நடை வைத்தியர் எம். அப்துல் ஹாதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சம காலத்தில் அதிகரித்துள்ள தெருநாய்களின் பெருக்கத்தைக் குறைக்கும் நோக்கிலும் மனிதர்களை விசர் நாய்க் கடியிலிருந்து பாதுகாக்கும் நோக்கிலும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

2030 ஆம் ஆண்டளவில் விலங்கு விசர் நோய் இல்லாத இலங்கை" என்ற இலக்கை நோய் தமது நடவடிக்கைகள் நகர்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (த-46)



# டயகமவில் 150 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன

கொழும்பு, ஜன. 25

டயகம தோட்டத்தில் அமைக்கப்பட்ட 150 வீடுகள் கடந்த சனிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்திய அரச நிதியொதுக்கீட்டில் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் மூலமாக இவை அமைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் அமைச்சர் பழனி திகாம்பரம், இலங்கைக்கான இந்திய உதவி தூதுவர், கண்டி உதவி தூதுவர், காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக, சிறப்புப் பகுதிகளுக்கான அபிவிருத்தி அமைச்சர் இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வீடுகள் ஏழு பேர்ச்சஸ் காணியில் 505 சதுரஅடி பரப்புக் கொண்ட 2 அறைகள், வரவேற்பறை, குளியலறை மற்றும் சமையலறை என்பனவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசின் 150 மில்லியன் ரூபா நிதியுதவியிலும், இலங்கை அரசின் 20 மில்லியன் ரூபாவிலும் மின்சாரம், உட்கட்டமைப்பு வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# வடக்கு – தெற்கு இளையோர் இணைந்த நல்லிணக்கப் பயண நிகழ்வு சிறப்புற்றது

யாழ்ப்பாணம், ஜன. 25

தெற்கிலுள்ள இளையோரும் வடக்கிலுள்ள இளையோரும் இணைந்து "ஒன்றிணைந்த தீர்வைப் பெறுவோம்" என்ற தொனிப் பொருளில் நல்லிணக்கப் பயண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சர்வோதயம் சாந்திசேனை அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் "தேசோதயம்" அலுவலகப் பிரிவில் இடம்பெற்றது.

4 நாள்கள் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தெற்கில் சப்ரகமுவப் பல்கலைக் கழகத்தின் 60 மாணவர்கள், தெற்கிலுள்ள சர்வோதய உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், தெல்லிப்பழை மற்றும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளின் சர்வோதய உறுப்பினர்கள் 60 பேர் உட்பட சுமார் 120 பேர் நல்லிணக்கப் பயண வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில், நல்லிணக்கப் பயணத்தில் கலந்த கொண்டவர்களுக்கு மங்கள வாத்திய இசையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், பிரதேச செயலர் சிவசிறி, சர்வோதய உபதலைவர் ரவீந்திரா கந்தகே, இராணுவ மேஜர் ஜெனரல் கெட்டியாராட்சி, காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தின் மூத்த பொறுப்பதிகாரி, யூனியன் கல்லூரி அதிபர் ரி. வரதன், தெல்லிப்பழை தேசோதயத் தலைவர் சட்டத்தரணி சிவபாதம் மற்றும் சர்வோதய மூத்த அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

அன்று நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அரசியல், பொருளாதார கலை,கலாசாரம் மற்றும் பிறவிடயங்கள் தொடர்பில் செயலமர்வுகளும் கருத்துரைகளும் இடம்பெற்றன.

இதேவேளை தெற்கு மக்களுக்கும் வடக்கு மக்களுக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள வீடுகளில் நல்லிணக்கப் பயணத்தில் கலந்து கொண்டவர்களில் இருவர் வீதம் தங்கவைத்து இங்குள்ள மக்களின் கலை கலாசார மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் இனரீதியான ஒற்றுமையைப் பலப்படுத்தல் வேலைத்திட்டம் இந்த நான்கு நாள்களும் இடம்பெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்கள் விடுதிப் பகுதிகள், புற்றுநோயாளர் விடுதிவளாகம், மருத்துவமனை பின்புற வளாகம் என்பன துப்புரவு செய்யப்பட்டன. இரவு யூனியன் கல்லூரியில் தீப்பாசறை நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் குழுவினர் குடாநாட்டிலுள்ள முக்கிய வணக்கஸ்தலங்கள் மற்றும் முக்கிய இடங்களுக்குச்சென்று அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பங்கேற்று உரையாற்றியிருந்தார்.

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழை "தேசோதயம் அலுவலகத்தில் தைப்பொங்கல் விழா தெல்லிப்பழை தேசோதயம் பிரிவின் தலைவர் சட்டத்தரணி சிவபாதம் தலைமையில் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த)







# சுத்தமான தண்ணீரைப் பெறுவதில் மண்முனையில் இன்னும் சிக்கல்!

## மாவட்டச் செயலர் தெரிவிக்கிறார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, கிரான் போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் சுத்தமான குடிதண்ணீரைப்பெற்றுக்கொள்வதில் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட செயலர் மா. உதயகுமார் தெரிவித்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கொல்லநுலை, குளுவினமடு, தேவிலாமுனை ஆகிய கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கி வைக்கும் நிகழ்வு கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 4 இலட்சம் ரூபா செலவில் உன்னிச்சைக்குளத்திலிருந்து குழாய்மூலமாக தண்ணீர் கொண்டுவரும் பணிகள் இடம்பெற்றன. 3 இலட்சம் ரூபாவை இராமகிருஸ்ணமிசன் அமைப்பினரும் ஒரு இலட்சம் ரூபாவை குளுவினமடு மக்களும் வழங்கியிருந்தனர்.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையிலான இந்த நிகழ்வில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது;

மாவட்டத்தில் பல பகுதிகளில் அடிப்படை தேவைகள் இல்லாமலுள்ளன. வறுமை, கல்வியிலே பின்தங்கியிருக்கின்ற நிலைமை உருவாகியுள்ளது. இவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றுஎமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றைத் தவிர்க்க அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நிலைத்திருக்க வேண்டிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அரசு, நிறுவனங்கள், மக்கள் இணைந்து செய்கின்ற செயற்பாடுகள் நிலைத்திருக்கும் செயற்பாடுகளாக அமையும். மிகச்சிறப்பான செயற்பாடுகள் செய்யப்பட வேண்டுமாகவிருந்தால் அடிப்படையில் இருந்தே செய்யப்பட வேண்டும். மத்திய அரசை மாத்திரம் நம்பியிருக்காமல் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மிகக் காத்திரமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (த)



# திருகோணமலையில் புகைப்படக் கண்காட்சி

மூதூர், ஜன. 25
'அன் பிறேம்ட்' என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி ஒன்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. விகல்ப இணையத்தால் இக் கண்காட்சி நடத்தப்பட்டது.
கண்காட்சியில் காணாமலாக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகளைத் தேடித்தருமாறு கோரும் தாய்மார்கள், குருதி ஆறு ஓடிய பூமியில்...., காணியுரிமைப் போராட்டம், காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர், நலன்புரி முகாம், போரின் போது கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்தல், இலங்கையில் தேயிலை உற்பத்தி உட்பட மனதை உறையவைக்கும் கதைகள் பல புகைப்படக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. (த)

# பன்னாட்டு இளையோர் மாநாடு இந்தமுறை இலங்கையில் நடக்கும்

**கொழும்பு, ஜன. 25**
**பன்னாட்டு இளைஞர் மாநாடு இந்தமுறை இலங்கையில் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்கவுடன் 'அய்சேக்'இலங்கை அமைப்பின் தலைவர் இசுறு பிரேமதிலக்க உள்ளிட்ட நான்கு பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.**



அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்போது 'அய்சேக்' அமைப்பின் உத்தியோகப்பூர்வ இலட்சினையும் வெளியிடப்பட்டது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.
2019ஆம் ஆண்டு ஜீலை மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை நடைபெறும். 120க்கும் மேற்பட்ட பன்னாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 800 வரையிலான இளந்தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.
இளந் தலைவர்களின் சிறப்புப் பாணிகள், திறமைகளை வளர்த்தல் மற்றும் அவர்களின் பொருட்டு பன்னாட்டு ரீதியில் மேடை வாய்ப்புக்களை உருவாக்கல் ஆகிய முக்கிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைப்பு இயங்குகிறது. இந்தஅமைப்பில் 90 இலட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.
பன்னாட்டுக் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு இந்த மாநாடு வருடாந்தம் மிக விமர்சையாக நடைபெறும். இளைஞர்களின் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தல், கலாசார வேறுபாடுகள் தொடர்பில் தெளிவூட்டல் மற்றும் பூகோள நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கங்கள் என்று அமைச்சு தெரிவித்தது.
இந்த மாநாடு 1995ஆம் ஆண்டு முதன்முறையாக இலங்கையில் நடைபெற்றது. 23 ஆண்டுகளுக்குப் பின்னர் 73ஆவது மகாநாடு இந்த நாட்டில் நடைபெறவுள்ளது என்றும் அமைச்சு மேலும் தெரிவித்தது. (த)

# இந்திய மீனவர் 6 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
இலங்கைக் கடற்பரப்பில் தத்தளித்த நிலையில் மீட்கப் பட்ட ஆறு இந்திய மீனவர்களை மல்லாகம் நீதிமன்று நேற்றுமுன்தினம் விடுதலை செய்தது.
அவர்கள் கடந்த 22ஆம் திகதி மீட்கப்பட்டனர். விசாரணையின் போது குறித்த மீனவர்கள் தமிழகம் புதுக்கோட்டையில் இருந்து கடந்த மாதம் 22ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றவர்கள் என்றும், கடற்சீற்றம் காரணமாக படகு சேதமடைந்த நிலையில் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர் என்றும் தெரியவந்தது.
அனைவரும் மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டனர். தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த ஆறு மீனவர்களும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து மல்லாகம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். (ம-37)

# வீடொன்றில் புகுந்து பெண்கள் தாக்குதல்

## ஏறாவூர் பொலிஸில் இப்படி முறைப்பாடு

மட்டக்களப்பு, ஜன. 25
ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றுக்குள் இரவு வேளையில் தடாலடியாக உட்புகுந்த இரு பெண்கள், அங்கிருந்த பெண்கள் மீதும் சிறுவர்கள் மீதும், வீட்டின் ஜன்னல் மற்றும் பொருள்கள் மீதும் தாக்குதல் நடத்தினர் என்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
றிபாய் பள்ளியை அண்டிய பகுதியிலுள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தின்போது வீட்டிலிருந்த 4 வயதுக் குழந்தை, அந்தக் குழந்தையின் தாய் தாக்குதலுக்கு உட்பட்டனர். அவர்கள் ஏறாவூர் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வீட்டிலிருந்த ஜன்னல்கள் மற்றும் ஏனைய பொருள்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸ் தரப்பு மேலும் தெரிவித்தது.
ஏறாவூரின் மறுமுனையான கிராம நீதிமன்ற வீதியை அண்டி வசிக்கும் தாயும் மகளுமே தாக்குதல்களை மேற்கொண்டிருக்கலாம் என்று பொலிஸாருக்குச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ம-46)



# சு.கட்சியின்மாவட்டத் தலைவர் பதவியிலிருந்து சந்திரிகா நீக்கம்

## யாழ்ப்பாணத்துக்கு அங்கஜனும் வன்னிக்கு மஸ்தானும் நியமனம்

கொழும்பு, ஜன. 25
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய மாவட்டத் தலைவர்களை கட்சியின் தலைவரும் அரசதலைவருமான மைத்திரிபால சிறிசேன புதிதாக நியமித்துள்ளார். முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் மாவட்டத் தலைவர் பதவி பறிக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தின் தலைவராக முன்னர் அவர் பதவி வகித்திருந்தார்.
ஐப்பசி 26 அரசியல் சதியின் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மீது கோபமடைந்த சந்திரிகா, சுதந்திரக் கட்சியின் விசுவாசமான உறுப்பினர்களுடன் கட்சியை மீட்டெடுப்பது குறித்து ஆலோசனைகளை நடத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து அவரைக் கட்சியிலிருந்து ஓரங்கட்டுவதற்கான நடவடிக்கைகள் அரசத்தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அரசதலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை புதிய மாவட்டத் தலைவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. ஏனைய மாவட்டங்களின் தலைவர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
பதுளை - நிமல் சிறிபால டி சில்வா, கண்டி- எஸ்.பி.திசாநாயக்க, ஹம்பாந்தோட்டை மகிந்த அமரவீர, களுத்துறை- மகிந்த சமரசிங்க, குருணாகல்- சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர, அநுராதபுரம்- துமிந்த திசாநாயக்க, கேகாலை- ரஞ்சித் சியம்பலாப்பிடிய, கம்பஹா - லசந்த அழகியவன்ன, மாத்தளை- சட்டத்தரணி லக்சமன் வசந்த பெரேரா, கொழும்பு - திலங்க சுமதிபால, காலி - ஷான் விஜயலால் டி சில்வா, மாத்தறை - டி.விஜய தஹநாயக்க, அம்பாறை - சட்டத்தரணி திருமதி.சிறியானி விஜேயவிக்ரம, மட்டக்களப்பு- எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, மட்டக்களப்பு- குணரத்னம் ஹரிதரன், நுவரெலியா- டபிள்யு.ஜீ.ரணசிங்க, இரத்தினபுரி -அதுலகுமார ராஹூபத்த, திருகோணமலை - திருமதி. டபிள்யு. ஜீ. எம். எம். ஆரியவதி கலப்பதி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இதன்போது எதிர்கால மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் அரசதலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)



# புலிகள் தொடர்பான நிகழ்வுகளை இனிமேல் நடத்தப்போவதில்லை!

## தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 25
விடுதலைப்புலிகள் தொடர்பான நிகழ்வுகளை இனிமேல் நடத்துவதில்லை என்று முடிவெடுத் துள்ளதாக விடுதலைப்புலிகள் கட்சி தெரிவித்துள்ளது. அரசு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.
கிழக்கு மாகாணத்தில் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக அம்பாறை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொழும்பில் அமைந்துள்ள இரண்டாம் மாடிக்கு விசாரணைக்கு வருமாறு கடந்த 16ஆம் திகதி பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் அறிவித்தல் அனுப்பியிருந்தனர். அதனடிப்படையில் அங்கு சென்றிருந்தேன். எனது கட்சி சார்பாக நடத்திய கரும்புலி தின நிகழ்வுகள் தொடர்பாக சுமார் ஆறு மணி நேரம் என்னை விசாரித்தனர். கரும்புலி தின நிகழ்வு செய்வதற்கு எங்கிருந்து பணம் வந்து? எவ்வளவு பணம் அனுப்பி வைக்கப்பட்டது? எனப் பல கேள்விகள் கேட்டனர். இவ்வாறான நிகழ்வுகள் மூலமாக மீண்டும் புலிகளின் செயற்பாடுகளைத் தூண்டுகின்றதாக அமையும் அதனால் இதனை முற்றுமுழுதாக நிறுத்த வேண்டும் என்று அழுத்தமாகக் கூறினர். அதை நானும் ஏற்றுக்கொண்டேன்.
அவ்வாறான விடயங்கள் தொடர்பாக எந்த அரசியல்வாதிகளும் என்னைத் தொடர்பு கொண்டு விடுதலைப்புலிகள் தொடர்பாக நிகழ்வுகள் நடத்தக்கூடாது என்று நான் அச்சுறுத்தப்பட்டமை சம்மந்தமாக யாரும் அரசிடம் கேள்வி எழுப்பவில்லை இவர்கள் வெறுமனே மாவீரர் நாள்கள் முள்ளிவாய்க்கால் தினம் ஆகியவற்றை வைத்து அரசியல் நடத்துவதற்கே உள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (த)



## போதை ஒழிப்புத் துறையினருடன் மைத்திரிபால சிங்கப்பூரில் பேச்சு

கொழும்பு. ஜன. 25

சிங்கப்பூர் போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளுடன் இலங்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பேச்சு நடத்தியுள்ளார்.

சிங்கப்பூருக்கு இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருக்கும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூர் அரசின் சமூக, குடும்ப மேம்பாட்டு அமைச்சரும் தேசிய அபிவிருத்தி பிரதியமைச்சருமான டெஸ்மன் லீ உள்ளிட்ட அந்த நாட்டின் குறித்த துறையினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

மெண்டரின் ஓரியண்டல் விடுதியில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது. இலங்கையின் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுமாறு மைத்திரிபால முன்வைத்த கோரிக்கைக்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மைத்திரிபால சிங்கப்பூருக்குப் பயணமாகியிருந்தார். (து)



ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் துறை சார்ந்த நிறுவனத் தலைவர்கள் மாநாட்டில் முதன்மை உரையாற்றுவதற்காகச் சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன அவர்களுக்கும் சிங்கப்பூர் அரச தலைவர் ஹலீமா யாகூப் அம்மையாருக்குமிடையிலான சந்திப்பு இன்று (24) முற்பகல் இடம்பெற்றது.

# கிழக்கு மாகாணப் பொங்கல்விழா வெருகலில் நேற்றுச் சிறப்புற்றது



மூதூர். ஜன. 25

கிழக்கு மாகாண பொங்கல் விழா திருகோணமலை வெருகல் கருக்காமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களம், வெருகல் பிரதேச செயலகம் மற்றும் விவசாயிகள் இணைந்து இதை நடத்தினர்.

முதன்மை அதிதியாக திருகோணமலை மாவட்டச் செயலர் என்.என்.ஏ.புஷ்பகுமார கலந்துகொண்டார். பொது அமைப்புக்கள், பொதுமக்களால் 108 பானைகள் வைத்து பொங்கல் இடம்பெற்றது. தமிழர்களின் பாரம்பரியத்தை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக் காட்டும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (த-40)

## உள்ளூராட்சி அலுவலர்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம். ஜன. 25

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கான இரண்டு நாள்கள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 28ஆம் 29 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணியகத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் விடயத்துக்குப் பொறுப்பான இரண்டு அலுவலர்களை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளூர் அதிகாரஆளுகை நிறுவகம் இதனை நடத்துகிறது. (த-9)

### போர்க் காலத்தில் ஏதிலிகளாகச் சென்றோரில்

## 39 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் இந்தியாவிலிருந்து திரும்பவுள்ளனர்

### அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவிப்பு

போர்க் காலத்தில் ஏதிலிகளாகத் தமிழ் நாட்டுக்குச் சென்றவர்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்தவருடம் ஜனவரி மாதம் 31ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர்.

தேசியகொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியமர்வு, மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சித் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி இதனைத் தெரிவித்தார்.

சுயவிருப்பின் பேரில் 39 குடும்பங்களைக்கொண்ட 83 பேர் வானூர்தி மூலமாக இலங்கைக்கு வரவுள்ளனர். இதில் 34 ஆண்களும் 49 பெண்களும் உள்ளடங்குவர். இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளனர் என்று அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலவச பயணச்சீட்டு, ஒன்றிணைத்தல் மானியக் கொடுப்பனவாக வயதுவந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், வயதுகுறைந்தவர்களுக்கு 5ஆயிரம் ரூபாவும், போக்குவரத்துக் கொடுப்பனவாக 2ஆயிரத்து 500 ரூபாவும், உணவு அல்லாத மானியக் கொடுப்பனவாகத் தனிநபருக்கு 5ஆயிரம் ரூபாவும், குடும்பத்துக்கு 10ஆயிரம் ரூபாவும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகத்தால் வழங்கப்படுகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சால் வானூர்தி நிலையத்தில் 5ஆயிரம் ரூபாவும் தற்காலிக கொட்டகைகளுக்காக 25ஆயிரம் ரூபாவும், உபகரணங்களுக்கு 3ஆயிரம் ரூபாவும் காணிதுப்பரவு செய்வதற்கு 5ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்படும். வாழ்வாதாரத் திட்டங்களிலும் வீட்டுத் திட்டங்களிலும் தெரிவின் போது சிறப்புப் புள்ளி வழங்கப்படுகின்றது.

மேலும் ஒரு லட்சம் ஏதிலிகள் இந்தியாவில் உள்ளனர். அவர்களில் 65ஆயிரம் பேர் அகதிமுகாம்களிலும் 35ஆயிரம் பேர் வெளியிடங்களிலும் தங்கி வாழ்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (து)

# கொழும்பில் சரக்கு பரிமாற்றத்தில் அமெரிக்கப் படை ஈடுபட்டுள்ளது

கொழும்பு. ஜன. 25

கொழும்புக்கு வெளியிலுள்ள பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்திலுள்ள வானூர்திகளுக்கு இடையில் சரக்குகளை நகர்த்துவதற்கான மாற்றுதல் நடவடிக்கையொன்று இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இதை அமெரிக்கக் கடற்படை மேற்கொள்கின்றது. சேவை வழங்கல்கள் மற்றும் வர்த்தகத்துக்கான பிராந்திய மையமாக உருவாவதற்கான இலங்கையின் முயற்சிகளை ஊக்குவிக்கும் தற்காலிக சரக்கு மாற்றுதல் முன்னெடுப்பொன்றின் அங்கமாக இது அமைந்துள்ளது. ஜனவரி மாதத்திலான இந்த சரக்கு மாற்றம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏறக்குறைய 25 மில்லியன் ரூபா பங்களிப்பை வழங்கவுள்ளது.

இந்துபசுபிக் பிராந்தியத்தின் இணைப்புப் புள்ளியிலுள்ள இலங்கையின் இருப்பிடத்தைப் பிரதிபலிக்கும் மற்றும் இந்தத்தனித்துவமான இருப்பிடம் வழங்கும் வாய்ப்புகளை இறுகப் பற்றிக் கொள்ளும் நாட்டின் பிராந்திய ஈடுபாட்டுக்கான தங்களது நோக்குப் பற்றி இலங்கையின் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

இந்த முன்னெடுப்பின் கீழ் அமெரிக்க கடற்படை வானூர்திகள் இந்த வர்த்தக வானூர்தி நிலையத்தில் தரையிறங்கிப் புறப்பட்டுச் செல்லவுள்ளன. உயிருக்கு ஆபத்தில்லாத பல்வேறு பட்ட விநியோகங்களையும் கொண்டு வரவுள்ளன.

இந்த விநியோகங்கள்வானூர்திகளுக்கு இடையில் மாற்றம் செய்யப்படும். பின்னர் கடலில் இருக்கும் யு.எஸ்.எஸ். ஜோன்சீ. ஸ்டென்னிஸ் வானூர்திதாங்கிக்கப்பலுக்கு எடுத்துச் செல்லப்படும்.

கடற் படையினருக்கான தனிப்பட்ட தபால்கள், காகித பொருள்கள், உதிரிப் பாகங்கள், கருவிகள் மற்றும் ஏனைய பொருள்கள் இந்த விநியோகங்களில் உள்ளடங்கியிருக்கும் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (து)

# போராட வெளியே வாருங்கள்! தொண்டாவுக்கு திகா அழைப்பு

"கூட்டு ஒப்பந்தப் பேச்சுகளிலிருந்து தொழிற்சங்கங்கள் வெளியேறினால், அரசிலிருந்து வெளியேறி தொழிலாளர்களுக்காகப் போராடுவதற்கு நானும் தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் அறிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளவத்தையிலிருந்து புறக்கோட்டைக்கு முச்சக்கர வண்டியில் வருவதாக' இருந்தால்கூட 500 ரூபாவுக்கு அதிக தொகையை செலுத்த வேண்டும்.


அடிப்படை சம்பளமாக 500 ரூபா பெறும் தொழிலாளர்கள் எவ்வாறு வாழ்வது? காலத்துக்குக் காலம் மட்டும் கூட்டு ஒப்பந்தம் குறித்துப் பேசாமல், அப்பிரச்சினைக்குத் நிரந்தரமான தொரு தீர்வு காணப்பட வேண்டும்.

எனது தாயும் மலையில் கொழுந்து பறித்தவள். தொழிலாளர்களின் வலி, வேதனை என்னவென்பது எனக்குத் தெரியும். அவர்களை ஒருபோதும் ஏமாற்றவோ, காட்டிக்கொடுக்கவோ மாட்டேன்.

தற்போதைய நிலை தொடருமானால் இன்னும் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தோட்டங்களில் வேலை செய்ய ஒருவர்கூட இருக்க மாட்டார்.

கூட்டு ஒப்பந்தப் பேச்சில் தொண்டமானே தன்னிச்சையாகமுடிவெடுக்கின்றார். என்ன நடக்கின்றது என்பது ஏனைய தொழிற்சங்கங்களுக்குத் தெரிவதில்லை.

கூட்டு ஒப்பந்தப் பேச்சிலிருந்து தொழிற்சங்கங்கள் வெளியேறினால், நானும் அரசிலிருந்து வெளியேறி தொழிலாளர்களுக்காகப் போராடத் தயாராகவே இருக்கின்றேன். எமக்குப் பதவிகள் முக்கியமில்லை - என்றார். (22)



## இந்தோனேசியாவில் கடும் மழை 8 பேர் சாவு 2 ஆயிரம் பேர் பாதிப்பு

ஜகார்த்தா.ஜன.25
இந்தோனேசியாவில் கடும் மழை பெய்துவருகிறது. அதனால், ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் நேற்று மாலை வரை 8 பேர் சாவடைந்தனர். 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்தனர்.
மத்திய இந்தோனேசியாவிலேயேஇவ்வாறாகக்கடும்மழை பெய்துவருகின்றது. இதனால், அங்குள்ள நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன. வெள்ளம் பெருகி வருகிறது. அங்குள்ள பில்லி அணையில் நீர் நிரம்பிவிட்டது. அணைக்கு ஆபத்து ஏற்படும் என்றசூழ்நிலைஏற்பட்டது. நீரை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் காரணமாக அது திறந்து விடப்பட்டது. மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்காமல் அவ்வாறு செய்ததால், மக்கள் குடியிருக்கும் ஆற்றோரப் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. பல இடங்களில் பாலங்கள் உடைந்தன.
இதனால், தெற்கு சலாவேஸி மாகாணத்தின்மகாஸருக்குஅருகான பிரதேசத்தில் 2 குழந்தைகள் நீரில் மூழ்கி இறந்தனர். மின்சாரம் தாக்கி ஒருவர் சாவடைந்தார். 4 பேர் காணாமல் போயினர். நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளிலும் சாவுகள் சம்பவித்திருக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது.

# தீர்ப்புக்கு முன்னதாக ஜெயலலிதா குற்றவா

## நினைவிடத்துக்கும் தடையில்லை; உய

சென்னை.ஜன.25
**அளவுக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டது. ஆனால், நீதிமன்றத் தீர்ப்பு வெளியாவதற்கு முதலில் ஜெயலலிதா சாவடைந்தார். தீர்ப்புக்கு முன்னதாகச் சாவடைந்ததால் ஜெயலலிதா குற்றவாளியாகச் சாவடையவில்லை என்று அறிவித்த இந்திய உயர் நீதிமன்று அரச பணத்தில் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் அமைப்பதற்குத் தடைவிதிக்க முடியாது என்று தற்போது கூறியுள்ளது.**

தமிழகமுதலமைச்சராகஇருந்தஜெயலலிதா 2016ஆம்ஆண்டுடிசெம்பர்மாதம்சாவடைந்தார். சென்னையிலுள்ளமெரீனாக்கடற்கரையில்அவருடையஉடல்அடக்கம்செய்யப்பட்ட இடத்தில்நினைவிடம்அமைப்பதற்குஇந்திய அரசு திட்டமிட்டது. இந்த நிலையில், தேசிய மக்கள்சக்திகட்சிஎன்றஅமைப்பைச்சேர்ந்த எம்.எல். ரவி என்ற வழக்கறிஞர் இது தொடர்பாக பொதுநல வழக்கு ஒன்றைச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்தார். அதில் ஜெயலலிதாதண்டிக்கப்பட்ட குற்றவாளி என்பதால் அவருக்கு நினைவிடம்கட்டுவதற்குஅனுமதிக்கக்கூடாது எனக் கோரியிருந்தார். இந்த வழக்கில் அரச தரப்பில் முன்னிலையாகி வாதாடியஅட்வகேட்ஜெனரல் விஜய் நாராயணன். ஜெயலலிதாவைத்தண்டிக்கப்பட்ட குற்றவாளி எனக் கூறுவது முறையற்றது எனக் குறிப்பிட்டார். அதன் பின்னர் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்றத்தால் ஜெயலலிதா விடுவிக்கப்பட்ட நிலையில், மேல் முறையீட்டில் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குஉச்சநீதிமன்றம்தடைவிதிக்கவில்லையென்பதால் அவரைக் குற்றவாளி எனக் கருதமுடியாது எனக் கூறினர். சொத்துக்




குவிப்புவழக்கில்வி
முறையீட்டில் தீர்ப்பு
இறந்துவிட்டார் என்

## தடம் மாறுகின்றன மஞ்சள் அங்கிகள்

பரீஸ்.ஜன.25
எரிபொருள் விலை உயர்வு மற்றும் சம்பள உயர்வு ஆகிய அடிப்படை உரிமைகளுக்காகப் பிரான்ஸ் மக்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தில் மாதக்கணக்காக ஈடுபட்டு வருகிறார்கள். மஞ்சள் அங்கிகளை அணிந்து ஒருமித்த உணர்வுடன் அவர்கள் போராடி வருவதால் இந்தப் போராட்டம் மஞ்சள் அங்கிப் போராட்டம் என வர்ணிக்கப்பட்டது. குறித்த போராட்டம் தடம் மாறித் தற்போது அரசியல் பாதையில் பயணிக்க ஆரம்பித்திருப்பதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அடுத்து இடம் பெறவுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் போராட்டக்காரர்கள்தங்கள்சார்பில்போட்டியிடுவதற்காகப்போராட்டக் காரர்களையே வேட்பாளர்களாக நிறுத்த உள்ளனர். இதன் விளைவாக புதிய அரசியல் வாதிகள் உருவாக உள்ளனர்.

# வட துருவத்தில் காந்தப்புல

வோஷிங்டன்.ஜன.25
பூமியைச் சுற்றிப் பல காந்தப் புலங்கள் உள்ளன. இவை திசைகளைக் கணிப்பதற்கு ஆதாரமாக உள்ளன.
1831ஆம் ஆண்டில் வட துருவக் காந்தப் புலத்தின் மையம்கனடாவின்நுனாடைட் போத்தியா குடாப் பகுதியில் நிலைகொண்டிருந்தது.
பின்னார் அது அங்கிருந்து வடக்காக நகர்ந்து கடந்த வருடத்தில் சைபீரியாவை அண்மித்தது. நகர்வு வேகம் ஒரு வருடத்துக்கு 15கிலோ மீற்றர்களாக இருந்தது. இந்த மாற்றத்துக்குக் காரணமாக இருப்பது வட துருவத்தில் உள்ள பனிக் கட்டிகளின் அசைவுகள் தான் என இதுபற்றிய ஆய்வில் ஈடுபட்டு வந்த விஞ்ஞானி




மைக்க வே
என்றும் அவர்

## மீண்டும் சிறைப்படுத்தப்பட்டார் பெருவின் முன்னாள் அதிபர்

லிமா.ஜன.25
ஊழல், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்குட்பட்டிருந்த பெரு நாட்டின் முன்னாள் அதிபர் அல்பர்டோ புஜிமோரிக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பொது மன்னிப்பு நீக்கப்பட்டு அவர் நேற்று முன்தினம் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். 1990ஆம்ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த இவர், பல்வேறு ஊழல்களில்ஈடுபட்டதாகவும்அரசை எதிர்த்துப் போராடிய 25 பேரைக் கொலை செய்ததாகவும்குற்றம்சாட்டப்பட்டது. இதுதொடர்பானவழக்கில் அவருக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட இந்தச் சிறை தண்டனையின் மீதிக்காலத்தை புஜிமோரி இனிச் சிறையில் கழிக்க வேண்டும். வயது முதுமை காரணமாகச் சிறையில் அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது. தலைநகர் லிமாவில் உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். சிறையில் அவரின் உயிர் பிரிய வேண்டாம் என்று கூறி, பெருவின் அதிபர் பெட்ரோபாப்லோமுன்னாள்அதிபர் அல்பர்டோ புஜிமோரிக்குப் பொது மன்னிப்பு வழங்கினார். அதை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் தலைநகர் லிமா உட்படப் பல்வேறு நகரங்களில் போராட்டங்களில் ஈடுபட்டனர். அரசியல் காரணங்களுக்காகவே பாப்லோ, புஜிமோரியை விடுதலைசெய்ததாகக்கூறப்பட்டது. இதனால் நீதிமன்றம் இதில் தலையிட்டுப் பொது மன்னிப்பை நீக்கியது. இதைத் தொடர்ந்து உடல்நிலை மோசமானதாகக் கூறி, புஜிமோரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில், நீதிமன்றம் நியமித்த மருத்துவக் குழுபுஜிமோரியைப்பரிசோதித்துஅறிக்கைஅளித்தது. அதில், அவரது உடல்நிலை தேறிவருவதால் மருத்துவமனையில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.






சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இந்த மாதம் 22ஆம்
கப் பொருளாதார மாநாடு. இதன் ஆரம்ப நிகழ்வுகளில்
லைஞர்களின் இசைமீட்டல் வைபவம் ஒன்றை மேற்குறித்
இன்றுடன் முடிவடைகின்ற இந்த மாநாட்டில் உலகத் தன
பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ...க இறந்ததால் ...வாளி இல்லை!

## ...உயர்நீதிமன்றம் தெரிவிப்பு




...ழக்கில்விடுவிக்கப்பட்ட அவர்மேல் ...ட்டில் தீர்ப்பு வழங்குதற்கு முன்பாக ...ிட்டார் என்பதையும் நீதிபதிகள் தங் கள்தீர்ப்பில்சுட்டிக்காட்டினர். ஆகவே கர்நாடக உயர் நீதி மன்றத்தால் அவர் விடுவிக்கப்பட்டதைக்கணக் கில் கொள்ளும்போது, அவ ரைக் குற்றவாளி என்று கூற முடியாது என்று தெரிவித்த னர். இந்தத் தீர்ப்பு அரசியல வதானிகள் மத்தியில் பரவ லாகப் போசப்படுகிறது. குற்ற மிழைத்த ஜெயலலிதா சாவ டைவதற்கு முதலில் தீர்ப்பு வெளிவராததால் அவர் நிரப ராதியாகவே வாழ்ந்து முடித்ததால் இந்தத் தீர்ப்பு சரியானது என்றுஒருசாரார் வதிடுகின்றனர்.

இறந்தபின் அறிவிக்கப்பட்ட தீர்ப்பு உயிரோடு இருந்தவ ரைச்சாராதாயின்உயிரோடு இல்லாத அவருக்கு ஏன்தீர்ப் பளிக்கப்பட்டது? என்று மறுசாரார் இந்த விவகாரம் குறித்துக் கேள்வி எழுப்புகின் றமை குறிப்பிடத்தக்கது.

# சிறையில் இறந்தது ஹிட்லரின் தளபதி என்பது உறுதியானது

## ஆள்மாறாட்டம் நடக்கவில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்



வியன்னா.ஜன.25

ஜேர்மனியின் நாசிக் கட்சியின் தலைவ ராக விளங்கி 1934ஆம் ஆண்டில் அதன் தலைவராகியவர் ஹிட்லர். உலகையே நடுங்க வைத்த சர்வதிகாரி என்று வர் ணிக்கப்பட்ட அவர் 1945ஆம் ஆண்டில், இரண்டாம் உலகப்போரின் முடிவில் ரஷ்யப் படைகளிடம் தோல்வியுற்றுத் தனது உயிரை மாய்த்துக் கொண்டார். அவர் தலைமையிலான படைகளில் இடம்பெற்றிருந்தவர்கள் இழைத்த போர்க் குற்றங்களுக்காகப் பின்னாள்க ளில் தண்டிக்கப்பட்டனர். ஹிட்லரின் நம்பிக்கைக்கு உரிய தளபதியும், நாசி கட்சியின் முக்கிய தலைவருமான ரூடால்ப் ஹெஸ் என்பவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டில் தனது 93ஆவது வயதில் பெர் லின் சிறையில் தூக்கிலி டப்பட்டு இறந்த நிலையில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது. ஆனால், சாவடைந்தது ரூடால்ப் ஹெஸ் இல்லை என்றும் ஆள்மாறாட்டம்செய்து அவருக்குப்பதிலாகவேறொ ருவர்சிறைக்குஅனுப்பப்பட்டதாகவும்கருத்துநிலவி வந்தது. இது தொடர்பாக ஆஸ்திரிய விஞ்ஞானிகள் நடத்திய உயிரணுச் சோதனையில், பெர்லினில் உள்ளஸ்பான்டாசிறையில்அடைக்கப்பட்டிருந்தது ஹிட்லரின் நம்பிக்கைக்கு உரியவரும், நாஜி கட்சி யின்முக்கியதலைவருமானரூடால்ப்ஹெஸ்தான் என்று தெரியவந்தது. மறைந்த ஹெஸ்ஸின் உற வினர் ஒருவரின் உயிரணு மாதிரியை வைத்து சோதனைநடத்தியதில்1982ஆம்ஆண்டுஸ்பான்டா சிறையில் கைதி எண் 7 என அடையாளத்துடன் இருந்த நபரின் குருதி மாதிரிகளுடன் ஒன்றித்துப் போனது. இதனால்சிறையில்சாவடைந்ததுரூடால்ப் ஹெஸ்தான் என்று உறுதிப்படுத்தப்பட்டது.

**பின்னணி**

ஹிட்லரின் நம்பிக்கைக்குரிய தளபதியாக விளங்கி யவர் ஹெஸ். 1941ஆம் ஆண்டு இவர் தனியாக விமானத்தில் ஸ்கொட்லாந்து சென்றபோது, விமா னம் ஆள் நடமாட்டமற்ற இடமொன்றில் விபத்துக்குள்ளாகித்தரையிறங்கியது. பின்னர்இவர் பிரிட்டன் படைகளால் கைது செய்யப்பட்டுச் சிறை யில் அடைக்கப்பட்டார். 1946ஆம் ஆண்டு நடந்த போர்க்குற்றவிசாரணையில்இவர்மீதுசுமத்தப்பட்ட போர்க் குற்றங்களில் இருந்து விடுபட்டார். ஆனால் வேறு சில குற்றங்களுக்காக இவருக்கு ஆயுள் தண் டனை விதிக்கப்பட்டது. அடுத்த 40 ஆண்டுகளைப் பெர்லினில் உள்ள ஸ்பான்டா சிறையில் அவர் கழித்தார். 1987ஆம்ஆண்டில்தூக்கிட்டுச்சாவடைந்த நிலையில் சிறையிலிருந்து அவரது உடல் மீட் கப்பட்டது

# ...ல மாற்றம்!



கள் கூறுகிறார்கள். வடதுருவத் தில் மாற்றத்துக்குட்பட்டு வரு கின்ற குறித்த காந்தப் புலம் கார ணமாகத் திசைக்காட்டி களால் இனிவரும்காலங்களில்சரியான திசையைக்காட்டமுடியாதநிலை ஏற்படும் என்று அமெரிக்காவின் கொலரடோ பல்கலைக்கழகத் தின் தேசிய கடல்வள சூழல் நிர் வாக மற்றும் சுற்றாடல் மையத் தின் காந்த விசை தொடர்பாடல் பெறுப்பதிகாரியான அர்னாட் சூலிபட் தெரிவித்தார்.

அத்துடன் காந்தப்புலத்தை அடிப் படையாகக்கொண்டு இயங்கும் சகல கருவிகளின் செயற்பாடுக ளையும் இதற்கேற்ப மாற்றிய ...க்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது ...றும் அவர் குறிப்பிட்டார்.



...22ஆம் திகதி ஆரம்பமாகியது உல ...வுகளில் ஒன்றாக அமைந்த இசைக்க ...ற்குறித்த ஒளிப்படம் சித்திரிக்கிறது. ...லகத் தலைவர்கள், தொழிலதிபர்கள், ...ண்டனர்.

# வெனிசுவேலாவில் போராட்டம்

## ஆதரவளிக்கின்றன அமெரிக்கா, கனடா



காரகாஸ்.ஜன.25

வெனிசுவேலாஅதிபர்நிக்கோலாஸ்மதுரோவின் அரசைக் கவிழ்க்கும் முயற்சியாக மாபெரும் பேரணி ஒன்றை வெனிசுலா மக்கள் நடத்துவதா கச் செய்திகள் வெளியாகின. இந்தப் போராட்டத் துக்கு அமெரிக்கா வெளிப்படையாகத் தனது ஆதரவைத் தெரிவித்தது.

தேசியப் பேரவையின் தலைவர் குயெய்டோ தான் தற்காலிகத் தலைவர் என்று அறிவித்தார். வெனிசுவேலாவில்நிலவிவந்தஇராணுவஆட்சி 1958ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது. அதன் 61வது ஆண்டைக் குறிக்கும் முகமாக, அந்த நாட்டின் தற்போதைய அதிபர் நிக்கோலஸ் மது ரோவுக்கு எதிராக அங்குள்ள தேசியப் பேரவை யின் தலைவர் குவான் குயெய்டோ மக்கள் போராட்டம்ஒன்றுக்குஅழைப்புவிடுத்தார். இந்தப் போராட்டத்துக்குஅமெரிக்காவின்துணைஅதிபர் மைக் பென்ஸ் தனது ஆதரவைத் தெரிவித்தார். தேசியப் பேரவையையும். குயெய்டோவையும் ஆதரிக்கிறேன். நிக்கோலாஸ் மதுரோவுக்கு அர சதிகாரத்தில் உரிமையில்லை. அவர் வெளியேற வேண்டும்' என்று கூறினார் மைக் பென்ஸ்.

**பின்னணி**

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் வெனிசுவே லாவின் மறைந்த அதிபர் ஹியூகோ சாவேஸ். வெனிசுவேலாவின் 53ஆவது அரச தலைவரும், தென் அமெரிக்க முதற்குடிமக்கள் பின்புலம் உள்ள முதல் அரச தலைவரும் ஆவார். இவரது தலை மையில் வெனிசுவேலாவில் அமைந்த புரட்சியை பொலிவரியன் புரட்சி என்று குறிப்பிடுவர். முதலாளித்துவத்தையும் ஐக்கிய அமெ ரிக்க நாடுகளின் அயலுறவுக் கொள்கையையும் கடுமையாகஎதிர்த் தவர். போரற்ற உலகம், பசி, நோய், கல்லாமை அற்ற சமத்துவ ஜனநாயக சமூகத்துக்காகப் போராடியவர். அவரது மறைவுக்குப் பிறகு அதிபரான நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சியில் அரசியல் சர்ச்சைகள் அடிக்கடி தோன்றுகின்றன. நிலையற்ற தன்மையும், ஜனநாயகச் சிக்கல்களும் அவ்வப்போது எழுகின்றன. வெனிசுலா வின் எதிர்க்கட்சி புறக்கணித்த 2018ஆம் ஆண்டு மே மாதம் நடத் தப்பட்ட தேர்தலில், நிக்கோலாஸ் மதுரோ இரண்டாவது முறையா கவும் அதிபரானார். மதுரோவைநீக்கிவிட்டு, தேர்தலுக்கு முன்னால் தற்காலிக அதிபராகப் பணிபுரிவதற்கு விரும்புகிறார் என்று தேசியப் பேரவையின் தலைவர் குவான் குயெய்டோ மீது விமர்னங்கள் உள்ளன. குயெய்டோமீது வெனிசுவேலா உச்சநீதிமன்றத்தில் இது குறித்த வழக்கு ஒன்றும் நடந்து வருகிறது. 2014ஆம் ஆண்டு எண் ணெய் விலை குறைந்தால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் சமீப ஆண்டுகளில் அதிகளவான மக்கள் வெனிசுவேலாவை விட்டு வெளியேறி வருகின்றனர். இத்தகைய தளம்பல் நிலைகள் பல வெனிசுவேலாவில் உணரப்படுகின்றன.

# விஷ்ணு பகவான் தரித்த மோகினி அவதார மகிமை





அமிர்தம் பெற வேண்டி ஒரு சமயம் தேவர்களும் அசுரர்களும் ஒன்றிணைந்து பாற்கடல் கடையும் முயற்சியில் ஈடுபட்டனர். பாற்கடலில் மந்தர மலையை மத்தாக்கி, அதில் வாசுகி எனும் பாம்பை கடையும் கயிறாக்கி, அதன் தலைப்பகுதியில் அசுரர்களும், வால் பகுதியை தேவர்களுமாக பற்றி மாறி மாறி தம் பலம் கொண்ட மட்டும் பாற்கடலைக் கடையத் தொடங்கினர்.

இரா.நிசாந்தன்

திருமகள்தலைவனாகவிளங்கிடும் சிறிமன் நாராயணன், உலகங்களை காத்தருளுகின்ற கடவுளாக விளங்குகின்றார். நாராயண மூர்த்தி மேற்கொண்ட அவதாரங்களில் சிறப்புக் கொண்ட ஓர் அவதாரமாக மோகினி அவதாரம் அமைவுறுகின்றது. விஷ்ணுவின் தசாவதார அமைப்பில் இந்த அவதாரம் அமைவுறாது விடினும் புராணங்கள் வாயிலாக மோகினி அவதாரம் மேன்மையுறுகின்றது. மோகினி என்றால் அழகிய பெண் எனப் பொருளாகும். பெண் வடிவம் தாங்கி மோகனத்தினால் பிறரை மயக்கும் சக்தியுடையவள். மோகினி அவதாரம் தரித்து விஷ்ணு பகவான் அற்புதம் நிகழ்த்திய கருத்தாடல்கள் புராணங்களில் இழையோடியுள்ளன. மூன்று சந்தர்ப்பங்களில் விஷ்ணுபகவான் மோகினி வடிவம் தரித்துள்ள கதையாடல்களை நம் கண்ணுறலாம்.

### தேவரும் அசுரரும் பாற்கடல் கடைதல்

அமிர்தம் பெற வேண்டி ஒரு சமயம் தேவர்களும் அசுரர்களும் ஒன்றிணைந்து பாற்கடல் கடையும் முயற்சியில் ஈடுபட்டனர். பாற்கடலில் மந்தர மலையை மத்தாக்கி, அதில் வாசுகி எனும் பாம்பை கடையும் கயிறாக்கி, அதன் தலைப்பகுதியில் அசுரர்களும், வால் பகுதியை தேவர்களுமாக பற்றி மாறி மாறி தம் பலம் கொண்ட மட்டும் பாற்கடலைக் கடையத் தொடங்கினர். இதனைப் பொறுக்கமுடியாத வாசுகி வேதனையோடு கோபம் கொண்டதாய் தன் நஞ்சை வெளியில் கக்கத் தொடங்கியது. வாசுகியின் உக்கிரமான தாக்குதலை எதிர் கொள்ள முடியாத தேவர்கள் ஒன்று கூடி கைலையில் வாசம் செய்திடும் எம் பெருமானிடம் சரண் புகுந்தனர். தேவர்கள் நிலை கண்டு மனமிரங்கி திருவுள்ளம் கொண்ட பெருமானும் பாற்கடலில் தோன்றி ஆலகால நஞ்சை தன் கைகளில் ஏந்தி வாயில் இட்டு பின் தன் தொண்டையில் அடக்கிக் கொண்டார். பாற்கடல் தோன்றும் பணி தொடர்ந்திட அதிலிருந்து பல திவ்ய வஸ்துக்கள் வெளிவந்தன. ஜராவதம் எனும் யானை, உச்சைச்சிரவஸ் எனும் குதிரை, கற்பகத்தரு, காமதேனு, என்பவற்றோடு சந்திரன், மகாலட்சுமி முதலியோரும் வெளிப்பட்டனர்.

### அமிர்தம் வெளிப்படலும் அசுரர் அதை கைப்பற்றலும்

திவ்யப் பொருள்கள் வெளிவந்ததன் பின் தெய்வீக ஒளியுடன் தன்வந்திரி எனும் தேவன் அமிர்த கலசத்துடன் வெளித் தோன்றினான். அமிர்தத்தைக் கண்ணுற்ற தேவரும், அசுரரும் பெரும் ஆனந்தம் அடைந்தனர். ஆனால் தீயெண்ணம் கொண்ட அசுரர்களோ அமிர்த கலசத்தை தம் பலத்தால் கைப்பற்றி தாம் மட்டும் அதை உண்டிட எண்ணம் கொண்டனர். இது கண்ட தேவர்கள் மனவருத்தம் உற்று நாராயணனை தியானிக்கத் தொடங்கினர்.

### விஷ்ணு மோகினி வடிவம் தாங்கி வருதல்

தேவரின் வேண்டுதலை ஏற்றிட்ட விஷ்ணு பகவானும் அமிர்தம் தேவர்களுக்கு கிடைத்திட வேண்டும் எனக் கருதி அழகிய பெண் வடிவம் தாங்கி அவ்விடம் வருகை தந்தார். அதுவே மோகினி வடிவம் எனப்படுகின்றது. காண்பவர் மதி மயங்கும் பேரழகு படைத்த தோற்றத்தில் அங்கே காட்சி ளித்தார் மோகினியான விஷ்ணு. இது இவ்வாறிருக்க அமிர்த கலசம் பெற்ற அசுரர்கள் தாம் ஒருவருக்கொருவர் கைகலப்பில் ஈடுபட்டிருக்க அங்கு வருகை தந்த மோகினியைக் கண்டு மையல் உற்றனர். அவள் அழகில் மயங்கி பின்னே செல்லத் தொடங்கினர்.

அசுரரிடமிருந்து அமிர்த கலசத்தை பெற்றுக் கொண்ட மோகினி, அவர்களை நோக்கி தேன் போன்ற தன் இனிய குரலால், நீங்கள் எல்லோரும் வரிசையாக அமர்ந்திருங்கள். நானே உங்கள் எல்லோருக்கும் இந்த அமிர்தத்தை பகிர்ந்தளிக்கின்றேன் என்று கூறினாள். மோகினியின் வார்த்தைகளைக் கேட்ட அசுரர்களோ மறு பேச்சின்றி எல்லோரும் வரிசையாக அமரத் தொடங்கினர். தேவர்களும் இணைந்து கொண்டனர். மோகினியே தேவர்களது வரிசையில் முதலில் அமிர்தத்தை பகிர்ந்தளித்த வண்ணம் வந்து கொண்டிருந்தாள். அசுரர்களுக்குரிய சந்தர்ப்பம் வர அமிர்தம் முடிவடைந்திருந்தது. அப்போது தான் தாம் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம் என்பதை அங்கிருந்த அசுரர்கள் உணர்ந்து கொண்டனர். பாற்கடல் வாசன் மோகினி வடிவம் தாங்கி தேவர்களுக்கு அமிர்தத்தைப் பெற்றுக் கொடுத்து மிகப் பெரும் திருவருட் செயலை புரிந்தருளினார் என்றே கூறலாம். கதையாடல் விஷ்ணுவானவர் மோகினி வடிவம் தாங்கிய முதல் சந்தர்ப்பமாகும்.



### பஸ்மாசூரன் எனும் அசுரன் சிவனிடம் வரம் பெறல்

பத்மாசூரன் எனும் பெயருடைய அசுரன் சிவபெருமானிடம் வரம் பெறும் விருப்பம் கொண்டு கடுந் தவம் புரியலானான். அசுரனது கடுமையான தவம் கண்டு மனமகிழ்ந்த ஈசனும் அவன் முன் தோன்றி விரும்பும் வரம் யாதென வினவி நின்றார். அவ் அசுரனும், இறைவா, நான் யாருடைய தலையில் கையை வைக்கின்றேனோ அவர்கள் அக்கணமே எரிந்து சாம்பலாகிப் போக வேண்டும் எனும் வரத்தை வேண்டி நின்றான். சிவனும் அளித்த வாக்கினைக் காத்திட அவன் விரும்பிய வரத்தைக் கொடுத்தருளினார். வரம் பெற்றதும் ஏளனமான சிரிப்பை அசுரன் வெளிப்படுத்தினான். உடனே எம்பெருமானிடமே தான் பெற்ற வரத்தை பரிசோதித்துப் பார்த்திட எண்ணம் கொண்டவனாய் ஈசனின் அருகில் நெருங்கினான் அசுரன். இதை சற்றும் எதிர்பாராத இறைவனும் அவனிடம் இருந்து தப்பி ஓடி வைகுண்ட வாசன் நாராயணனிடம் சரணடைந்தார்.

ஈசனும் வைகுண்டத்தை பதற்றத்துடன் வந்தடைந்தமை கண்ட நாராயணனும் நடந்தது யாதென வினவி நிற்க, அதற்கு சிவனும் நடந்தவற்றை எடுத்துக் கூறி தன்னை அசுரனிடம் இருந்து காத்திட வேண்டும் என கூறி நின்றார். விஷ்ணு வும் மைத்துனரே, தாம் கவலை களையுங்கள். அசுரன் வைகுண்டத்தை அடைய முடியாது. ஆகவே தாம் இங்கேயே தாங்கியிருங்கள். நான் சென்று அவனை சரி செய்து வருகின்றேன் எனக் கூறி வைகுண்ட வாசனும் பத்மாசூரன் இருக்கும் இடத்தை வந்தடைந்தார். சிவபெருமானைப் பின் தொடர்ந்து வந்த அசுரன் ஒரு அடர்ந்த வனத்திலே வந்து சேர்ந்தான். சிவபெருமானைக் காத்திட பத்மாசூரன் இருக்கும் வனத்துக்கு வந்த விஷ்ணுவும் அக்கணமே மோகினியாக உருவம் தாங்கினார். மோகினி வடிவில் காட்டிலே உலாவித் திரிந்தாள். திடீரென தன் முன் ஓர் அழகிய மங்கையைக் கண்டதும் பத்மாசூரன் ஆச்சரியம் அடைந்தான். அழகில் மயங்கினான். அவள் அருகில் சென்று தன்னை திருமணம் செய்து கொள்வாயா? என்று வினவி நின்றான். அதற்கு மோகினியோ கொஞ்சம் நளினத்துடன், நான் ஒரு நாட்டியம் புரிபவள். எங்கள் குல வழக்கப்படி நான் புரியும் நடன அசைவுகளை யாவர் செய்து காண்பிக்கின்றனரோ அவரையே நான் மணம் செய்து கொள்வது என முடிவு செய்துள்ளேன் எனக் கூறி நின்றாள். பத்மாசூரன் உற்சாகத்துடன் நானும் ஆடல் கலை பற்றி கொஞ்சம் அறிந்தவன். ஆகவே நீ புரியும் நடன அசைவுகளை நானும் புரிந்து உன்னை மணம் செய்து கொள்வேன் என்று பதிலுரைத்து நின்றான்.

### பத்மாசூரன் எரிந்து சாம்பலாகிப் போதல்

மோகினி சில நடன அசைவுகளை ஆடிக் காட்டினாள். அதைக் கண்ணுற்ற அசுரனும் அதை அப்படியே செய்து காட்டலானான். அப்போது மோகினி தன் உடலை அசைத்தவாறு தன் கைகளை தன் தலையிலே வைத்தாள். மோகினி மீது மோகம் கொண்டிருந்ததாலும், நடன அசைவுகளில் மெய் மறந்து போயிருந்ததாலும் பத்மாசூரன் மோகினி செய்ததைப் போல தன் கரங்களை தலையில் வைத்தான். அக்கணமே அவன் எரிந்து சாம்பலாகிப் போனான். அவன் பெற்ற வரம் இறுதியில் அவன் சாவுக்கே வழிவகுத்து விட்டது. இவ்வாறு மோகினி அவதாரம் தாங்கி சிவபிரானுக்கு ஏற்பட இருந்த பெரும் சங்கடத்தை போக்கியருளினார் விஷ்ணு பகவான்.

மகாபாரத்தில் அர்ச்சுனன் மற்றும் நாக கன்னிகை ஒருத்திக்கும் பிறந்தவன் அரவான். அரவான் கிருஷ்ணரிடம் பெற்றுக் கொண்ட வரத்துக்கு அமைவாக அவன் இறப்பதற்கு முதல் நாள் மோகினி வடிவம் தாங்கி மணஞ் செய்து அவனது விருப்பத்தை நிறைவேற்றினார் என்று மகாபாரதம் கருத்தாடல் செய்கின்றது.

Your Gateway to the North

10th EDITION

JITF 2019

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

25 26 27 ஜனவரி JANUARY
10.00AM - 8.00PM
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
MUNICIPAL GROUNDS - JAFFNA

PLATINUM SPONSOR: INSEE CEMENT
GOLD SPONSOR: Browns A Heritage of Trust
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY UNITY IS STRENGTH

www.jitf.lk jitf.lk



## Message from

**Hon. Rishad Bathiudeen M. P.**
*Minister of Industry and Commerce*
*Resettlement af Protracted Displaced Persons*
*& Cooperative Development af Sri Lanka*

It is with great pleasure that I send this message of felicitation on the occasion of the 10th Edition of the Jaffna International Trade Fair 2019 (JITF), the multi-faceted mega trade exhibition of Northern Province. The multiproduct JITF expo series, is more than a consumer fair –the reason my Ministry endorses this event. JITF has become a key trade networking event in the Northern Peninsula. As a result of JITF's growing reputation it is now even referred to as the "Gateway to the North".

I am pleased that the Jaffna Municipal Council, the Sri Lanka Convention Bureau and International Business Council too are supporting this event which has become a definite meeting point and a platform for Chambers and Businesses from not only the Northern Province but from other provinces as well. The successes of JITF recorded year after year and the increasing joint ventures, tie ups, large orders reported from this event are clear signs that the growth of the Northern Province now extends to its business sector as well.

In this background I am pleased that my Ministry is endorsing this mega expo which has become a must-see networking platform for bigger local and international entrepreneurs who seek new linkages.

I and my Ministry wish great success to the organisers and all participants of JITF 2019.

*Rishad Bathiudeen M.P.*
*Minister of Industry and Commerce, Resettlement af Protracted Displaced Persons & Cooperative Development af Sri Lanka*



## Message from

**Hon. Dr. Suren Raghavan**
*Governor*
*Northern Province*

I am pleased to send this felicitation message to the $10^{th}$ Edition of "Jaffna International Trade Fair 2019 (JITF 2019)" organized by Lanka Exhibition and Conference Services (Pvt) Ltd (LECS) together with the Chamber of Commerce & Industry of Yarlpanam (CCIY) with the support of Jaffna municipal Council , Sri Lanka Convention Bureau (SLCB) and International Business Council. Jaffna International Trade Fair which is now organized for the $10^{th}$ successful year is the largest international trade exhibition in Northern Province for the products, equipment and machineries of multi-sectors like Construction, Automobile, Apparel, Agriculture, Information Technology, Hospitality, Banking and finance. I feel that due to the inspiration of JITF, people of Northern Province from various sectors get a great exposure and experience by having introduction of modern trends and technology to an area which has been isolated for over three decades.

I understand that the number of Exhibitors and trade-visitors are annually increasing for Jaffna International Trade Fair (JITF). JITF has become as the key networking and sourcing platform for the traders from local, national and international markets. JITF grows gradually as an access to Public and private partnership in North, as face to face meetings and dialog with key officials from the public and private sectors are annually held at the Trade Fair. I am very happy to congratulate the regional, national and international organizations which play the key, facilitative and supportive roles to organize $10^{th}$ Jaffna International Trade Fair in a successful way. I look forward to your continued success. I would like very much to accompany all of you to move forward for ensuring the steps towards advancement and development of our people.
Thanks

*Dr. Suren Raghavan*
*Governor*
*Northern Province*



## Message from

**S. Balachandran**
*Consul - General of India*
*Jaffna*

The Jaffna International l Trade Fair (JITF) has grown from strength to strength since its inception in 2010.

The 1oth edition of the Fair is scheduled to be held from 25-27 January, 2019.

Positioned as the only fair of its kind on a global scale in Jaffna, the Fair has attracted participation from Indian companies on a regular basis.

With connectivity to Jaffna improving, we expect the Fair to realise its full potential.

I am sure the participants would benefit from the growth story of Jaffna and return each year in a big way.

I wish the organizers and each participant all success with JITF 2019.

*S. Balachandran*
*Consul - General of India, Jaffna*



## Message from

**Emmaanuel Arnold**
*Mayor*
*Municipal Council - Jaffna*

I am happy to send this message to the souvenir of $10^{th}$ Jaffna International Trade Fair which is scheduled to be held on $25^{th}$ January 2019 for three consecutive days. This is a great achievement of Lanka Exhibition and Conference services (Pvt) Ltd, together with Chamber of Commerce and Industry of Yarlpanam (CCIY) with the support of the Sri Lanka Convention Bureau (SLBC), Consulate General of India and the Jaffna Municipal Council.

This is a social event annually to give the Northern part of the country a face lift by introducing modern trends and technology.

Jaffna International Trade Fair is recognized to be one of the key events that have been continuously taking place in order to provide all kind of facilities for the "upliftment" of trade industries, education, hospitality, construction, automobile, apparel, agriculture, information technology, banking etc. and lot of more to showcase their valued products and services which will be importance for the development of the North and East of Sri Lanka. The untiring effort of the organizers is praise worthy.

I whole heartedly congratulate the activities of Jaffna International Trade Fair and wish all success for the ever and ever.

*Emmaanuel Arnold*
*Mayor*
*Municipal Council - Jaffna*



## Message from

**V.K.Vignesh**
*The Chairman*
*Chamber of Commerce & Industries of Yarlpanam*

I'm honored to be involved in one of the most prestigious event of Jaffna. It is my great pleasure to extend heartfelt greetings and deliver a message on the occasion of JITF which is scheduled to be held on $25^{th}$, $26^{th}$ and 27th. I am confident that the success story of the JITF will continue to consolidate the achievements of the previous years. I take this opportunity to thank, Hon. Ragavan Governor of Northern Province, Hon. N. Vethanayagan, Government agent / district secretary, His Worship Emanuel Arnold, Mayor, Jaffna municipal council, Hon Balachandran Consul General, Consulate General of India, Local Heads of Sri Lanka Army, Police and other Officials of the State agencies; for your valuable support to make this trade fair a meaningful one. It is a highly remarkable event which has always been a platform to the Small and Medium industrialists, business entities and entrepreneurs. JITF offers great opportunity to the business community to showcase/exhibit their products – in line with the theme of SEE TOWARDS JAFFNA.

I believe potential investors could make use of the opportunities presented by the JITF. While government of Sri Lanka has given top priority to attract foreign direct investment, potential overseas investors could interact with the local business community aimed at finding firsthand information as to the possibility of investing in the northern region. I'm proud of many accomplishments of the JITF in the past years and look forward to generate an atmosphere of growth for industries, trade and business here in Jaffna. I convey my gratitude to the exhibition organizer, Lanka Exhibition and Conference Services and other stakeholders for their contribution and immeasurable support for cherishing the event successfully. It is heartening to see the role played by the media in disseminating the news of the JITF. I respect the involvement and dedication of the sponsors. May the Fair be a successful event in the sphere of economy and businee.

*V. K. Vignesh*
*Chairman*
*Chamber of Commerce and Industries Yarlpannam*



## Message from

**Arjun Dharmadasa**
*Managing Director*
*Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd*

It is with great pleasure that I extend this message for the $10^{th}$ Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors.

As per the statistics there is a significant increase of the visitors to the exhibition year on year which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community. Special attractions at JITF will be the "Made In Jaffna" pavilion with over 40 stalls, under the flagship of Chamber of Commerce & Industries of Yarlpanam (CCIY).

I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality.

I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, former Ministry of Traditional Industries & Small Enterprise Development, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Jaffna Municipal Council, Consulate General of India in Jaffna, the Sri Lanka Convention Bureau and all Exhibitors, Sponsors & participants.

I also thank the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.

*Arjun Dharmadasa*
*Managing Director*
*Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd*

OFFICIAL PARTNERS
HEALTH CARE: ASIRI HEALTH
FOOD
BANKING: PEOPLE'S BANK
TELECOMMUNICATION: Sri Lanka Telecom
FERTILITY CARE: NINEWELLS
ROOFING: i-ROOF
ONLINE MEDIA: mC reative
PRINT MEDIA
RADIO
ELECTRONIC MEDIA
SUPPORTED BY
ENDORSED BY


Unilever pure it

Unilever

## யுனிலீவர் பியூரிட் அல்டிமா RO418

உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுத் தரும்.

- ஒரு வருட உத்தரவாதம்.
- ஆயுட்கால சேவை பராமரிப்பு.
- உலகத்தர நிர்ணயத்திற்கு அமைவாக அதிசிறந்த தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டது.
- உங்கள் வீட்டு நீரை உங்கள் கண்ணெதிரே சுத்தமான நீராகப் பெற்றுக்கொள்ள முடியும்.
- குடிநீரில் இருக்கவேண்டிய கனியுப்புக்களை சரியான அளவில் கொண்டிருக்கும்.
- பாதிப்புக்களை ஏற்படுத்தும் பக்ரீரியா. வைரஸ் மற்றும் நுண்ணுயிர்கள், கல்சியம். மலக்கழிவுக் கிருமிகளை அகற்றும்.
- உவர் நீரையும் தூய்மையாக்கும் திறன் கொண்டது.
- போத்தல் நீர். எரிபொருட்செலவில் இருந்து விடுதலை.
- சிறுநீர்நோய். தோல்வியாதிகளில் இருந்து பாதுகாப்பு.
- வட்டி இன்றி இலகு தவணை முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்.



10வது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தையில்
**விற்பனைக்கூட இல.222**
என்றும் இல்லாத
**20 % விலைக் கழிவு**
மூன்று நாள்கள்
**(25, 26, 27)** மட்டுமே

தொடர்புகளுக்கு: **ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
(வட மாகாண ஏக முகவர்)
**077 63 93 444, 077 25 49 211**

### வேலைவாய்ப்பு

- யாழ்.நகரில் இயங்கிவரும் நிறுவனத்துக்கு கணித அறிவு ஓரளவுடைய 30 வயதுக்கு மேற்பட்ட பகல் நேர காவலாளி மற்றும் இரவு காவலாளி தேவை.
- பிரபல வைத்திய நிலையத்துக்கு முகாமையாளராக செயற்படக்கூடிய ஆங்கில அறிவு. சிங்களம் தெரிந்த 40 வயதுக்கு மேற்பட்ட ஆண் தேவை. அரசாங்க வைத்திய நிலையங்களில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் விரும்பத்தக்கது.

**நேர்முக தேர்வு :- 27.01.2019 (ஞாயிறு)**
**காலை :- 9.30 மணிக்கு**
**இடம் :- சன்றைஸ் மெடிகிளினிக்**
**388, ஆஸ்பத்திரி வீதி** (பஸ்நிலையம் முன்பாக),
**யாழ்ப்பாணம் - 021 222 6069**

(CS/22810)(11,17)

### விற்பனைக்கு

நிறை கூடிய
**புறொயிலர், கோழிகள்**
மிகக் குறைந்த விலையில்
விற்பனைக்குண்டு.
**077 282 4966**

### வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்
### ஆதனப்பெயர் மாற்றம்
**93/29, 93/31, 93/33 சங்கரத்தை வீதி, வட்டாரம் - 09**

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 02, அராலி வீதியிலுள்ள இல. 93/29, 93/31, 93/33 ஆகிய ஆதனங்கள் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் கார்த்திகேசு என்றே காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை சின்னவன் கார்த்திகேசுவும் பெண் விசையம்மாவும் ஆகியவர்கள் குறித்த ஆதனம் சின்னத்துரை கனகேந்திரன் என்பவருக்கும் சொந்தமாகவிருந்து அவர் தமக்கு குறித்த ஆதனத்தை நன்கொடையாக வழங்கியிருந்தார் எனவும் சில வசதியீனங்களாலும் அவர் காலஞ்சென்றதாலும் உறுதி முடிக்கப்படவில்லை எனவும் குறித்த ஆதனம் எவ்வித இடையூறுமின்றி தங்களால் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் 8155/03.07.2011 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

இரத்தினம் கைம்பெண் பொன்னம்மா பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8155/03.07.2011 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னவன் கார்த்திகேசுவும் பெண் விசையம்மாவும் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

இரத்தினம் கைம்பெண் பொன்னம்மா ஆகியவர் ஆதனப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இரத்தினம் கைம்பெண் பொன்னம்மா ஆகியவருக்குப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு, பிரதேசசபை.**

(CS/22805)(11,17)

## Health Serv
*Making families happy*

## இலவச மருத்துவ முகாம்

**Organized by: Evolution**
Events and Corporate Services



இடம்: **ஹோட்டல் கிரீன் கிராஸ்**, சங்கிலியன் மண்டபம்,
இல. 33, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**ஜனவரி, 26-27** காலை 10.00 முதல் மாலை 6.00 வரை



சிறப்பு அழைப்பாளர்:
உலகப் புகழ் பெற்ற சென்னை பிரசாந்த் வைத்தியசாலையின் வைத்தியர்
**Dr. கீதாஹரிப்பிரியா,**
குழந்தையில்லா தம்பதியருக்கான இலவச மருத்துவ ஆலோசனை
மற்றும் குழந்தையின்மைக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம்,
உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்..

பங்கு பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண்:
**075 492 7080, 011 2730987**

இலவச கண் பரிசோதனை
மற்றும் மருத்துவ முகாம்

## பொதுக்கூட்டம்


யாழ்.மாவட்ட மாட்டுவண்டி சவாரிச்சங்கத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரியும் பொதுக் கூட்டமானது எதிர்வரும் 10.02.2019 ஞாயிற்றுக்கிழமை வழமையாக எமது சங்கத்தின் கூட்டம் நடைபெறுகின்ற புன்னாலைக்கட்டுவன் நரசிம்மர் ஆலயத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. எனவே இக்கூட்டத்துக்கு சங்க உறுப்பினர்கள், சவாரி பிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்/ செயலாளர்,**
**யாழ்.மாவட்ட மாட்டுவண்டி சவாரிச் சங்கம்**

(CS/228)(2)(11.17)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 04 . 1938



மறைவு
05 . 02 . 2018

### அமரர் சின்னப்பு துரைராசா

**திதி: 25.01.2019**

குடும்பத்தைக் கோயிலாய் எண்ணிய
இன்முகத்துடன் இனியவை பேசி
நன்னெறியில் எம்மை வளர்த்தாளாக்கிய
எங்கள் அன்புத் தெய்வமே – நீங்கள்
உடல் நீத்த இன்றைய ஓராண்டு திதியில்
உத்தம ஜீவன்கள் வாழ் புண்ணிய வைவஸ்தத்தில்
தர்ம தேவன் உமைக் கைப்பிடித்து வரவேற்கும் தருணமிதில்
உங்கள் முத்திப் பேற்றுக்காய் பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

நீதி மன்ற வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.
077 043 5132

(CS.11713) (13 .17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**மருக்கொழுந்து கனகரெட்ணம்**

மண்ணில் விண்ணில்
02.06.1929 05.02.2018



எம் அன்பு அன்னையே
எம் கண்கண்ட தெய்வமே
எம் விருப்பங்களின் அனுசரிப்பாக
எம் நலமும் மகிழ்வும்
உமதானதாங்கி
வாழ்ந்து இரண்டு சந்ததி கண்ட
எம் அன்பு அன்னையே
இன்று எம்மை விட்டுப் பறந்து போன
பாசமாய் பறவை நீங்கள் ஆண்டு ஒன்றாகியதை
நம்பத்தன் முடியவில்லை இந்நாளில்
எமது ஆத்மாவின் சாந்திக்காக
எங்கள் கண்களால் வழியும் கண்ணீர்பூக்களை
தங்கள் பாத மலர்களுக்கு காணிக்கையாக்குகிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 00533) (14.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**பவானியம்மா குழந்தைவேலு**

தோற்றம்
22.05.1932



மறைவு
25.01.2018

எம் குடும்ப விளக்காய் ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து எங்களை வளர்த்துவிட்டு
எம் எல்லோரையும் தவிக்கவிட்டு விண்ணுலகு புகுந்த நீங்கள்
எப்போது மீண்டும் வருவீர்கள் என்று நாம் எண்ணாத நாளில்லை

இல.11, அம்பாள் வீதி,
நாயன்மார் கட்டு, நல்லூர்.

நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

- மேசன்,
- கூலி,
- வீட்டுப்பணிப்பெண்.

**077 355 1631**

(CS/223)(1) (11.17)

## MAJESTIC CINEPLEX




Jaffna Silver / Platinum / Bronze
10.45AM / 4.15PM / 7.15PM



Jaffna Bronze
10.15AM | 1.15PM | 4.15PM



Jaffna Silver
1.45PM | 4.45PM | 7.45PM




Jaffna Platinum
10.00AM | 1.00PM | 7.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999

CEYLON THEATRES
Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

10TH EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

**25, 26, 27 ஜனவரி 2019**
**யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்**

JITF 2019




- FEDERAL SKILL WORKERS
- TEMPORARY FOREIGN WORKERS
- PROVINCIAL NOMINEES PROGRAM
- START-UP VISA PROGRAM
- INVESTOR PROGRAM
- STUDY PERMITS
- CAREGIVERS
- IMMIGRATION APPEAL
- SUPER VISA

SUMEDHA SWARNADHIPATHI
BARRISTER & SOLICITOR
LLM-York,Canada & LLM-Wales,UK

16 CAMPERDOWN AVE
TORONTO
ONTARIO
M9R 3T4
T (647) 969 1560
F (647) 350 9075
sulawyers@outlook.com

RAJA KANAGA
PARALEGAL, ARBITRATOR
& CONSULTANT

2607 EGLINTON AVE EAST
UNIT 1&2, 2nd FLOOR
SCARBOROUGH, ONTARIO
M1K 2S2
T (416) 889 6952
F (416) 264 8947
rms_consultants@rogers.com







## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களுக்கு உதவ இன் சீ சீமெந்து நிறுவனத்தின் பங்களிப்பு.

இந்த வருடம் ஜனவரி மாதம் 23 ஆம் திகதி இன் சீ சிமெந்து நிறுவனம் புதுகுடியிருப்பு, ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேச செயலகங்களுடன் இணைந்து வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்கள் தங்கள் வீடுகளை கட்டிக்கொள்ள / புனரமைப்பதற்கான உதவிகளை செய்துள்ளது. ' நாட்டைக் கட்டியெழுப்புவோம் ' என்ற ஸ்லோகத்துடன் இன் சீ சிமெந்து நிறுவனம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 250 இக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சீமெந்துப் பைகளை வளங்கியுள்ளது. சிமெந்து தயாரிப்பில் இலங்கையில் முன்ணனியில் திகழும் இன் சீ சிமெந்து நிறுவனம் வட ப்குதியை கட்டியெழுப்பும் இந்த அரசின் கொள்கைக்கு பெறும் பங்கினை வகிப்பது குறிப்பிடப்படவேண்டும்.

வட பகுதி மக்களின் மிக அவசர அவசிய தேவையான இந்த சிமெந்து பைகளை உணர்ந்த இன் சீ நிறுவனம். அவர்கள் மீண்டு எழுவதற்கு வசதியாக ஆளுக்குத் தலா 10 சிமெந்து பைகள் என்ற அடிப்படையில் 250 இக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக இவற்றை பகிர்ந்தளித்துள்ளது. போர்ட்லண்ட் இன் சுண்ணாம்புக் கற்களை மூலப் பொருளாகக் கொண்டு எஸ்.எல்.எஸ் (SLS) 1253 முத்திரையுடன் நீண்டகாலம் உறுதியாக நிலைத்திருக்கும் தரமான சிமெந்தை இலங்கையில் உற்பத்தி செய்கிறது. இலங்கையில் உள்ள வீடுகளில் 3 இல் 1 இன் சீ சங்சா சிமெந்தினால் கட்டப்பட்டுள்ளன.

" நாங்கள் கடந்த சில வருடங்களாக வடக்கில் எங்கள் சேவையை விஸ்தரித்துள்ளோம். வட பகுதியின் வளர்ச்சிக்காக நாங்கள் பெறும் சேவை செய்கிறோம் என இன் சீ சங்சா சிமெந்து நிறுவனத்தில் உப தலைவரான ஜன் குனிக் குறிப்பிட்டு உள்ளார். கடந்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளம் ஆயிரக்கணக்கானவர்களை அகதிகளாக்கி நாட்டின் பொருளாதாரத்தையும் பெரிய அளவில் சீர் குலைத்து விட்டது. இலங்கை மக்களின் நம்பிக்கைக்குறிய நிறுவனமான இன் சீ இந்த மக்களின் நிலமையை நன்றாகவே புரிந்துக்கொண்டு செயல்படுகிறது. இந்த நிறுவனத்துக்கும் இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டிய தார்மீக பொறுப்பு உள்ளது. அதன் காரணமாகவே இந்த உதவியை நாங்கள் வட பகுதி மக்களுக்காக செய்கிறோம். இது வெறும் ஆரம்பம் மட்டுமே.

இன் சீ சன்ஸ்தா என்பது மக்களின் நம்பிக்கையையும் நன் மதிப்பையும் பெற்ற ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனம் தொடர்ச்சியாக 7 வருடங்களாக " கட்டடத் துக்கு உறுதி இன் சீ " என்ற பெயரையும் இலங்கையின் தர நிர்ணய சபை (SLS) எஸ்.எல்.எஸ். என்ற தர நிர்ணயத்தை பெற்றது மட்டுமல்லாது குறைந்த அளவான கரியமில வாயுவையே வெளியிடும் தொழிற்சாலை என்ற பெயரையும் சுற்றாடல் மாசடைதல் கவுன்சில் இடம் இருந்து பெற்றுள்ளது.

(C/32379)(10)

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com









# உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்





திருமதி
## சுதா சசிகரன்
**S.L.T.S. 2 - 11**
**B.A., PGDE (Distinction)**

யாழ். பல்கலைக்கழகத்தில் 22.01.2019 அன்று நடைபெற்ற 34ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுதா சசிகரன் அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துகிறோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## கதிரவேலு குணரத்தினம்
**(டிங்கர் குணம்)**

விண்ணில் 05.05.1945 — மண்ணில் 08.02.2015

நான்காண்டுகள் முடிந்ததே
ஆறவில்லை எங்கள் மனம்
அன்பு, பாசம் பண்பிற்கு – உறைவிடமாய்
வாழ்ந்த எங்கள் குலவிளக்கே
எங்கு சென்றீரோ?
உதவி என்னும் சொல் உங்கள்
உதிரத்தின் சொத்து – பசுமையாய்
எம்மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

**குடும்பத்தினர்.**
பழையவீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(CS/22808)(11.17)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு சிவபாதம்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சிவபாதம் 23.01.2019 புதன்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திர லீலாவின் அன்புக் கணவரும், அகிலன், ஜனகன், கிருபாலினி, ஜெயபாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமணன், துஸ்யந்தன், கஜப்பிரியா, சேந்துஜா ஆகியோரின் அன்பு மாமனும், சஜித், சங்கீதன், சுகாஸ், திலக் ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையாபிள்ளை மற்றும் பாலச்சந்திரன், நகுலேந்திரன் (பிரான்ஸ்), தயாகரன், சத்தியாதேவி (கனடா), தெய்வேந்திரன், சகுந்தலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


(cs 22806) (13.17)

**077 217 3831 / 077 521 2501**

# மரண அறிவித்தல்

## கனகசபாபதி சண்முகநாதன்

*(பொறியியலாளர், முன்னாள் முகாமையாளர் - காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*



அன்னைமடியில் 30.07.1939 — ஆண்டவன் அடியில் 09.01.2019

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது ரொறென்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி சண்முகநாதன் கடந்த (09.01.2019) புதன்கிழமை புட்டபர்த்தியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. கனகசபாபதி - சௌந்தராம்பிகை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மாவிட்டபுரம் செல்லையா - அன்னலட்சுமி தம்பதிகளின் மருமகனும் திருமதி செல்வலட்சுமி (முன்னாள் நூலகர் - யாழ்ப்பாண நூலகம்) யின் ஆருயிர்க் கணவரும் கனடாவைச் சேர்ந்தவர்களான சஞ்ஜீவன், சுமித்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. (திருமதி) சோபனாவின் அருமை மாமனாரும் சேதுநாயகி சண்முகநாதன் (அமெரிக்கா), காலஞ்சென்ற இரத்தினபூபதி சிவப்பிரகாசம், காலஞ்சென்ற Dr. இரத்தினவடிவேல், பங்கஜதேவி, சோமாஸ்கந்தன் (இளைப்பாறிய ஆசிரியை), மனோன்மணி வசந்தநாதன் (இளைப்பாறிய ஆசிரியை) காலஞ்சென்ற சற்குருநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் வித்தியா (கனடா), வருண் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (12.01.2019) சனிக்கிழமை புட்டபர்த்தியில் இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: சகோதரிகள்**
**பங்கஜதேவி சோமாஸ்கந்தன் - 077 500 1078,**
**மனோன்மணி வசந்தநாதன்**

## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

எமது பாடசாலையில் பிரதி அதிபராகக்கடமையாற்றும்



திரு. அந்தோனிப்பிள்ளை இராசதுரை தேவதாசன்

### திரு. அந்தோனிப்பிள்ளை இராசதுரை தேவதாசன்

அவர்கள் 22.01.2019ல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 34ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணியில் முதல் வகுப்பில் (First class) பட்டத்தை பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் இவர் கல்வியில் பல பட்டங்களை பெற்று வாழ்வில் சிறந்து விளங்கிட உளமார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/பாஷையூர் சென் அன்ரனீஸ் றோ.க மகளிர் வித்தியாலயம்**

## யாழ்ப்பாணம் மாநகரசபை தேவைக்கேற்ற அடிப்படையில் விசேட சுகாதாரப் பணியாளர்களை தற்காலிகமாக சேவையில் இணைத்துக்கொள்வதற்கான விளம்பரம்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் விசேட சுகாதார பணிக்காக தேவைக்கேற்ற அடிப்படையில் கடமையாற்றுவதற்கு ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை :**

I. உடல் ஆரோக்கியமானவராகவும்

II. 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும்

III. காலை 6.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமை :**

I. க.பொ.த. (சா/த) இல் இரு தடவைக்கு மேற்படாமல் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கடமை :**

I. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் புகையூட்டல் இயந்திரம் இயக்க தயாராக இருத்தல் வேண்டும்.

II. மருந்து விசிறும் செயற்பாட்டை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

III. டெங்கு தடுப்பு கள செயற்பாடுகளை (துப்புரவு பணி உட்பட) செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.

IV. மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகரின் கீழ் பணிபுரிய வேண்டும்.

V. ஏனைய பணிக்கப்படும் கடமைகளை செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.

கடமையாற்றும் நாள் ஒன்றிற்கு சம்பளக் கொடுப்பனவாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் படிகள் உள்ளடங்கலாக ரூபா 1, 068. 00 வழங்கப்படும். அத்துடன் பெற்றுக்கொள்ளும் சம்பளக் கொடுப்பனவிற்கான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு செய்யப்படல் வேண்டும்.


தேவையான ஆளணிகளின் எண்ணிக்கை - 25 நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப் படுவார்கள்.

உரிய பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை யாழ். மாநகர சபையின் தாபனப் பகுதியில் பெற்று பூரணப்படுத்தி, 03.02.2019ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** **24.01.2019**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தாயின் மடியில் 04 . 01 . 1932



சிவனடியில் 06 . 01 . 2019

### அமரர் தியாகராஜா கதிர்காமத்தம்பி

கடந்த 06.01.2019 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் தியாகராஜா கதிர்காமத்தம்பி அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.01.2019) சனிக்கிழமை அதிகாலை 6 மணியளவில் கீரிமலையிலுள்ள அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரண நிகழ்வு 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**பிரதான வீதி, பருத்தித்துறை.** (CS/22739) (11,17) **021 226 4920, 077 129 8201**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் எமது வித்தியாலய ஆசிரியை


திருமதி

### விஜயலதா ஜெயகாந்தன்

அவர்கள் 22.01.2019 யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 34 ஆவது பட்டமளிப்பு விழாவின்போது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் அதிஉயர் விசேட திறமைச் சித்தி (Distinction) பெற்று பெருமை சேர்த்ததை எண்ணி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/மீசாலை விக்கினேஸ்வரா ம.வி**

## மரண அறிவித்தல்



### செல்லையா செல்வச்சீராளன் (சங்கீத பூஷணம்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பருத்தியடைப்பைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வச்சீராளன் (சங்கீத பூஷணம்) கடந்த (21.01.2019) திங்கட்கிழமை ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரபிள்ளை - நாகரத்தினம் தம்பதிகளின் பாசமிகு பெறாமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (நொத்தாரிசு), ஜெயலக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் சிவச்செல்வி - கோகுலகுமார் (லண்டன்), திருமூலதீபன் (லண்டன்), அருள்மொழித்தேவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கோகுலகுமார், கோசலா, மேரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிலன், சரண், பரத், கனிஸ்கா, மிதுசா, நிசா, றிசா, ஈத்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.01.2019) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**134 (276) பிரதான வீதி, யாழ்ப்பாணம்.** (CS 23668/15/18) **தகவல்: சி.இளங்கீரன் (மைத்துனர்) 077 168 6300**


## தோல்விக்கு நானே பொறுப்பு

*பின்ஞ் தெரிவிப்பு*

இந்தியாவுக்கு எதிரான 3 ஒருநாள் போட்டித் தொடரில் ஆஸ்திரேலியா அணி தோல்வியடைந்தது. இந்தத் தோல்வி குறித்து ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் போட்டிக்கான அணித் தலைவர் ஆரோன் பிஞ்ச் மனம் திறந்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்: இந்தியாவுடன் ஏற்பட்ட தோல்விக்கு நானே முழு பொறுப்பு. வேறு எவரையும் குறைகூற விரும்பவில்லை. டெஸ்ட், ஒருநாள் தொடரில் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆடிய எனது செயற்பாடே தோல்விக்குக் காரணம். எனது ஆடும் உத்தியில் தவறுகளைக் களைய வேண்டும். எனது ஆட்டத் திறமையை மேம்படுத்த வேண்டும். அணித் தலைவராக நான் சரியாக விளையாடவில்லை என்றே கூறவேண்டும் - என்றார்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சண்முகநாதன்



மண்ணில் 27.05.1927 விண்ணில் 22.01.2019

வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை சண்முகநாதன் (22.01.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் லீலாவதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பரமலிங்கம் (ஓய்வுநிலை தபாலதிபர் - கனடா) மற்றும் பாக்கியலட்சுமி (பிரான்ஸ்), காந்திமதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யசோதரா (ஆசிரியை - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற சசீந்திரன் மற்றும் பாமா (ஆசிரியை - யா/ கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), குமுதாஞ்சலி (நோர்வே), உதயவிக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவகுமார், காலஞ்சென்ற கண்ணதாசன் (ஆசிரியர்) மற்றும் சிவகுமாரன், வதனா ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஷ்ணவி (2018 Bio பிரிவு மாணவி - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சேயோன், துர்க்கா, விதுரன், லக் ஷயன், தர்சனா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் புனிதவதி (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை, சண்முகநாதன், கனகம்மா, கனகலிங்கம் தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (விதானையார்), கமலாம்பிகை மற்றும் ஞானாம்பிகை ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**323. நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.** (CS 23689/15/18) **தகவல்: குடும்பத்தினர்.**

# வென்றது வைகறை



யாழ்ப்பாணம், ஜன. 25

நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான தாச்சித் தொடரில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. நவாலி தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:2 என்ற கோல் கணக்கில் வைகறை வென்றது. (ம-23)


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் வீடு (Annex) வாடகைக்கு உண்டு

தொடர்பு-077 639 8097

## உதவி ஆசிரியர் தேவை

யாழ். நகர் பிரிவில் அமைந்துள்ள பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் சிறுமிக்கு காலை 08.00 - 11.30 மணிவரை உதவி ஆசிரியராக பாடசாலையில் பணி புரிவதற்கு ஆள் தேவை.

தொடர்பு 0771912291
Email - sindu@hotmail.my

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் 4 1/4 பரப்பில் அமைந்துள்ள மேல் மாடியுடன் கூடிய வீடு (7 அறைகள் பெரிய) வீடு, 26.01.2019 சனிக்கிழமையும், 27 01.2019 ஞாயிற்றுக்கிழமையும் வீட்டை பார்வையிட்டு விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

076 884 3551

Aishwarya Film Proudly presents
இப்பொழுது திரையில்



வடக்கு, கிழக்கு

Majestic Jaffna. 10.45, 4.15, 7.15
Raja 2 Jaffna. 10.30, 1.30, 4.30, 9.30pm
Saraswathy Trinco. 2.30 pm
Bala Chavakachcheri.
Suganthi Batticaloa. 1.30 pm
Saru Point Pedro 2.30 / 9.30 pm

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று வெள்ளிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (25.26.27.28) ஆகிய திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி. 2 ஆம் ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.
28.01.2019 அன்னதானம் வழங்கப்படும்.
அடியவர்கள் வந்து இறையருள் பெற்றுச்செல்க.

**அருள்வாக்கின் மூலம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாட்டு பயணத்தடை, குழந்தை பேறு, குடும்பப்பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.**

**பூஜை நேரம் - காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

குறிப்பு - கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு - 021 221 9127, 077 801 2226

## உங்கள் பிள்ளைகளின் எதிர்கால கனவிற்கு துணை நில்லுங்கள்

Aspirations Education




25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறும் யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கூடம் B 144 இலும் 26ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ். நூலக கேட்போர் கூடத்தில் எம்மால் நடத்தப்படும் உயர்கல்வி வழிகாட்டல் கருத்தரங்கிலும் மேலதிக விவரங்களை பெற முடியும்.

வழிகாட்டல் கருத்தரங்கில் கல்வி ஊக்குவிப்பாளர் திரு. தவராசா மற்றும் யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை மன்ற தலைவர் திரு. விக்னேஸ் கலந்து உயர் கல்வி வழிகாட்டல்களை வழங்குவர்.

**அஸ்பிரேஷன்ஸ் எடியுகேஷன்**
அவ்னோர் கொம்பிலெக்ஸ்
இல : 269 A9, பலாலி வீதி, கந்தர்மடம்.
021 314 4242, 077 768 7821


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் கதிரவேலு வேலுப்பிள்ளை



கடந்த 26.12.2018 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கதிரவேலு வேலுப்பிள்ளை**
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.01.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
குடும்பத்தினர். 077 614 6819

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் பிரதி அதிபர்
**ந.ரகுநாத்** அவர்களின்
பாசமிகு மாமியார்
திருமதி **ராசலட்சுமி தவராசா**
அவர்கள் 22.01.2019 அன்று இறைபதம் அடைந்தமையினையிட்டு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.



**நலன் புரிக் கழகம்**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**


## வேலைவாய்ப்பு

**நிறுவனம்** :- டோக்கியோ ரெடிமிக்ஸ் [Tokyo Supermix (PVT) Ltd]
**நிலையம்** :- மிருசுவில், யாழ்ப்பாணம்

**01. Electrician**
- *3 பேஸ், வாகனமின் இணைப்பு
- *1 - 3 வருட அனுபவம்

**02. Weigh Bridge Operator**
- *கா.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி
- *கணினி அறிவு

மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் கீழ் உள்ள E- mail முகவரிக்கு தங்கள் சுயவிபரக்கோவையினை அனுப்பி வைக்கவும். அல்லது 8.00 - 5.00 மணிவரை கிழமை நாட்களில் நேரில் சமூகம் தரவும்.

முடிவுத்திகதி:- 01.02.2019
Email:- supermix.jaffna@tokyocement.lk

டோக்கியோ ரெடிமிக்ஸ் பிளாண்ட்
மிருசுவில், யாழ்ப்பாணம்

தொடர்பு- 0771607804


## University of Jaffna Sri Lanka

**Faculty of Agriculture, Ariviyal Nagar, Kilinochchi**

**Commencement of Lectures Enrolment And Orientation Programme for freshers**

The orientation programme for freshers who have been selected for the academic year 2017/2018 will be commenced on 30.01.2019, Wednesday at 9.00 am at the Faculty of Agriculture, Ariviyal Nagar, Kilinochchi. All freshers are requested to participate in the orientation programme. Enrolment and Hostel facilities will be provided on 29.01.2019 morning (8.00am).

23.01.2019 (IN/9197)(11,17) Registrar

## மரண அறிவித்தல்

### திருமதி சர்வாம்பிகை விக்கினேஸ்வரன்



தோற்றம் 30.08.1948 மறைவு 24.01.2019

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சர்வாம்பிகை விக்னேஸ்வரன் நேற்று (24.01.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேசன் - கனகாம்பிகை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும் விக்னேஸ்வரனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சர்வேசனின் சகோதரியும் மைத்திரேயின் அன்புத் தாயாரும் யசோதரனின் அன்பு மாமியாரும் வாரணனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (27.01.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிஸ்சை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பி.ப. ஒரு மணிக்கு கல்கிஸ்சை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

011 272 9956.
077 834 7605, 077 543 4555 [CS 22822|15|18]

தகவல்: செ.விக்கினேஸ்வரன் குடும்பத்தினர்.


10ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை

யாழ். மாநகர சபை மைதானத்தில் எமது விற்பனைக் கூடம்

JITF

தெரிவுக்கு முந்துங்கள்!

## மங்களா நிறுவனத்தின் Mega Sale

Mangala

அனைத்துப் பொருள்களுக்கும் என்றும்-எங்கும் கிடைக்காத விலைக் கழிவு

மூன்று நாள்கள் (25,26,27) மட்டுமே!



~~1700~~/= 1200/=
~~2500~~/= 1600/=
ARPICO sofa ~~45000~~/= 35000/=
~~2500~~/= 1750/=
~~11500~~/= 9900/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 505
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.01.24
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 56,418,120/-
வெற்றி இலக்கங்கள்
06 21 38 53 A
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>A என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1538
சீட்டிழுப்பு திகதி 24.01.2019
வெற்றி இலக்கங்கள்
03 30 38 46 A
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 25 , 224, 912/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
அடுத்த ... 2019.01.28 திகதி

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.01.2019
வெற்றி வாரம் 2442
வர்ணம் கபிலம்
துலாம்
வெற்றி இலக்கங்கள்
09 19 27 46
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 8, 370, 702 /=
2019.01.25 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக. அல்லது துரித அழைப்பு 1919

ஆசிரியர்
திரு.ஷாம்சன்
IELTS
பெப்ரவரி 09, 2019
முழுமையான ஆங்கில இலக்கணம்,சரளமான உரையாடல் பயிற்சி எழுத்துவாண்மை என்பவற்றை விருத்திசெய்வதுடன் IELTS பரீட்சைக்கு நாம் உங்களைத்தயார்படுத்துவதால் மிகத்துணிவுடன் பரீட்சைக்குத்தோற்றி மிகச்சிறந்த பெறுபேறுகளை நீங்கள் பெறுவதற்கான உத்தரவாதத்தை நாம் உங்களுக்கு வழங்குகிறோம்.
இறுதிப்பதிவுத்திகதி : 31.01.2019 வியாழன்
எமது 64 மணிநேர சனி,ஞாயிறு பயிற்சிநெறியில் ஆடிப்படை ஆங்கில அறிவற்றவர்கள்கூட இணைந்து பயிற்சிபெறமுடியும்!
SAAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

## துயர் பகிர்கின்றோம்

### மனுவேற்பிள்ளை பிரசாத்நாயகம்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி.அ.ஹெயில் பிறைற்லி அவர்களின் அன்புத்தந்தை மனுவேல்பிள்ளை பிரசாத்நாயகம் அவர்கள் கடந்த (22.01.2019) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினர் ஆறுதல் அடையவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
கிளிநொச்சி

## மரண அறிவித்தல்



### இரத்தினகோபால் இராஜகோபால்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினகோபால் இராஜகோபால் நேற்று (24.01.2019) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால் - தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் கார்த்தீபன் மற்றும் காலஞ்சென்ற சாருஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜக்குலின், ராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சைலேஷ், றொகான், சரிஷ்னா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2019) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

71/8, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# வடக்கிற்கான நுழைவாயில்

## கண்காட்சி 10ஆவது ஆண்டாக யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

10 EDITION
JAFFNA INTERNATIONAL TRADE FAIR 2019
JITF 2019
25th, 26th, 27th January
10.00am - 8.00pm
Municipal Grounds - Jaffna
PLATINUM SPONSOR INSEE CEMENT · GOLD SPONSOR Browns · OFFICIAL PARTNERS: ASIRI HEALTH · Telecom · NINEWELLS · iROOF · ORGANIZED BY LECS · IN ASSOCIATION WITH CCIY · SUPPORTED BY · ENDORSED BY

பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி வடக்குக்கான நுழைவாயிலாக அமையப்பெற்றுள்ள யாழ்ப்பாணப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியானது இலங்கையில் அபிமானத்தை வென்றுள்ள வர்த்தக நாமங்கள் மற்றும் சேவைகள் பலவற்றை ஒன்றாகக் கொண்டமைந்த தனித்துவமான செயலாகும். விற்பனை மற்றும் கண்காட்சியில் இடம்பெறுகின்ற பெருந்தொகையான உற்பத்திகள் இலங்கையில் வளர்ச்சி வாய்ப்புக்களை இன்னமும் முழுமையாக அடையப்பெறாத சந்தைகளில் ஒன்றில் காலடியெடுத்து வைப்பதற்கான வாய்ப்பை இதனுடன் தொடர்புபட்ட சகல தரப்பினருக்கும் வழங்குகின்றது.

10ஆவது தடவையாக இடம்பெறுகின்ற யாழ்ப்பாணப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி இன்று தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. வடக்குக்கான நுழைவாயில் என்ற பொருத்தமான பெயருடன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஒன்றுகூடும் வகையில் ஒரு சூடுபிடிக்கும் சந்தையாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது. துரிதமாக அபிவிருத்தி கண்டு வருகின்ற வட தீபகற்பத்தில் அனைத்து வர்த்தகங்களையும் மற்றும் சேவைகளை உள்ளடக்கியவாறு 350 வரையான கண்காட்சிக் கூடங்கள் இந்த வர்த்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

வருடாந்தம் ஜனவரி மாதத்தில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து நிர்வகித்து வருகின்ற லங்கா எக்ஸ்பிசன் மற்றும் கொன்பிரன்ஸ் சேவிஸ் நிறுவனம், யாழ்ப்பாண மாநகர சபை, இலங்கை மாநாட்டு அலுவலகம் மற்றும் பன்னாட்டு வர்த்தக மன்றம் ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்து வருகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றின் அனுமதியையும் இது பெற்றுள்ளது.

பல்வேறு உற்பத்திகளைக் கொண்டுள்ள இந்தக் கண்காட்சியானது வடக்குக்குத் தமது வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்க விரும்புகின்ற நிறுவனங்களுக்கான நிகழ்வாக கருதப்படுவதுடன் இந்தப் பிராந்தியத்திலுள்ள வர்த்தக நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளைப் பிராந்தியத்துக்கு வெளியில் விரிவாக்குவதற்கும் இந்தத் தொழிற்துறையிலுள்ள பெரிய நிறுவனங்களுடன் ஒன்றாக இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் வழங்குகின்றது.

ஆண்டுதோறும் 60ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்க்கின்ற இந்த நிகழ்வில் 2 ஆயித்து 500 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு தள்ளுபடிகள் கிடைக்கப்பெறுவதுடன் அனைத்து வயதுப் பிரிவினர்களையும் பரவசப்படுத்துகின்ற பொழுதுபோக்கு மற்றும் ஏனைய வாய்ப்புக்களைக்கொண்ட அம்சங்களும் இடம்பெறுகின்றன. தொழில் வழிகாட்டல் சேவைகள், சிறப்பு உணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து உபகரணங்கள், கட்டட நிர்மாணப் பொருள்கள் மற்றும் சாதனங்கள், அழகு சாதன மற்றும் அழகுக்கலை சேவைகள், சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள், கல்வி ஆலோசனைகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் என்பன இந்தக் கண்காட்சியில் இடம்பெறும் பிரதான அம்சங்களாகும். ஒவ்வொரு மணித்தியாலத்திலும் இடம்பெறும் அதிஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பு ஆகிய அம்சங்களும் அடங்கியுள்ளன.

இந்த நிகழ்வுக்குக் கடந்த காலங்களில் கிடைக்கப் பெற் றுள்ள பலத்த வரவேற்பு மற்றும் எதிர்பாராத வளர்ச்சி தொடர்பில் எல்.ஈ.சி.எஸ். நிறுவனத்தின் தலைமை நிறை வேற்று அதிகாரியான ஆசிம் முக்தார் கருத்து வெளியிட்டுள்ளதுடன் வடக்கில் உள்ள வர்த்தக வாய்ப்புக்களை நேரடியாகக் கண்டு கொள்ளும் வாய்ப்பை வர்த்தகர்கள் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாம் முதற்தடவையாக இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்த சமயத்தில் எம்முடன் இணைந்து கொண்ட பல வர்த்தகர்கள் தமது உற்பத்திகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தமையால் முதல் நாளிலேயே கண்காட்சிக் கூடங்களை மூட வேண்டி ஏற்பட்டது. கடந்த காலங்களில் வடக்கில் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியை நாம் கண்கூடாகக் கண்டுள்ளதுடன் இத்தகைய நிகழ்வுகளின் மூலமாக குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு வாய்ப்புக்களை தோற்றுவிப்பதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் நாயகம் டென்மன்ற் பிரகாஷ் அவர்களின் அன்புத் தந்தை **சிதம்பரம் நாயகம்** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## மகிந்தவின்...

ரோகித ராஜபக்ச கரம் பிடித்துள்ளார். ராஜபக்சவின் சொந்தக் கிராமமான வீரக்கெட்



டியவில் ரோகிதவின் திருமண நிகழ்வுகள் நடைபெற்றன.

திருமணத்துக்கு வழங்கப்பட்ட உணவுகள் உள்ளூர் உணவுகளாகும். அயல் வீட்டவர்களினாலேயே திருமணத்துக்கான உணவுகள் தயாரிக்கப்பட்டன. மெதமுலன கிராம மக்களுக்கு மாத்திரம் திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. திருமணத்துக்கு வருபவர்களுக்கு ரணவரா இலைகள் மற்றும் விளாம்பழம் கொண்டு தயாரிக்கப்பட்ட பானமே வழங்கப்பட்டுள்ளது. மட்பாண்டங்களைக் கொண்டு இந்தத் திருமண உணவுகள் சமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

இந்தத் திருமண நிகழ்வுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மங்கள சமரவீர, ஹபீர் ஹாசிம் உள்ளிட்டோர் உலங்குவானூர்தியில் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (ம-5,22)

## காவியும்...

மாவனெல்லை, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட விவகாரம் தொடர்பில் சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்களின் போதே, மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேகாலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் வீட்டிலிருந்தும் அண்மையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டன. ஆயுதங்கள், முஸ்லிம்களின் வீட்டிலிருந்தா, சிங்களவர் வீட்டிலிருந்தா அல்லது தமிழர்களின் வீட்டிலிருந்தா மீட்கப்படுகின்றன என்பது பிரச்சினையில்லை.

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளமைதான் பிரச்சினையாகும். அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். காவியுடை அணிந்தோரும், வெள்ளை உடையை அணிந்தோரும் இல்லாத தீயை உருவாக்க முயற்சிக்கின்றனர். அவ்வாறு வெள்ளை உடையணிந்தவர்கள்தான், அடுத்தவரின் புத்தகத்தை தன் பெயரில் அச்சடித்து கொள்கின்றனர் - என்றார். (ம-5)

## பலாலி...

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சால், அமைச்சரவைப் பணியகத்துக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சு ஆயிரம் மில்லியன் ரூபாவையும், சிவில் வானூர்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு 960 மில்லியன் ரூபாவையும் இதற்காக ஒதுக்கியுள்ளன.

பிராந்திய வானூர்தி நிலையங்களுக்கு, குறிப்பாக இந்தியாவுக்கான வானூர்திப் பயணங்களை ஆரம்பிப்பதற்கான முதல் நடவடிக்கையாகவே, வானூர்தி ஓடுபாதையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. அபிவிருத்திப் பணிகள் சிவில் வானூர்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-5)

## நீராவியடிப்....

சி.தவராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காலங் காலமாகத் தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கிய நீராவியடிப் பிள்ளையார் கோயிலின் வளவிற்குள் இந்தப் புத்தர் சிலை அமைத்தமையானது தொல்பொருள் திணைக்களம் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பின் இன்னோர் பரிமாணமாகும்.

ஏற்கனவே இது தொடார்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பொலிசாரின் அனுசரணையுடன் செய்யப்பட்ட இந்த நடவடிக்கை, ஏற்கனவே நொந்து போயிருக்கின்ற முல்லைத்தீவு மக்கள் மனதில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற செயலாக அமைகின்றது.

தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகளால்தான் இன்று இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளால்தான் ஐக்கிய தேசியக் கட்சி அரசு இன்று பதவியில் உள்ளது. இவ்வாறான சூழலிலும் தொல்பொருள் திணைக்களம் இப்படியான செயல்களில் ஈடுபடுவதனை தமிழ்ப் பிரதிநிதிகள் மௌனிகளாக இருந்து வேடிக்கை பார்க்காது அரசுக்கு அழுத்தம் கொடுத்து ஒருசில அதிகாரிகளின் துவேசச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

நாட்டின் எந்தப் பகுதியிலும் ஒரு மதத்தைச் சார்ந்த சிறுதொகையினர் தன்னும் வாழ்வதாக இருந்தால் அவர்களின் மத வழிபாட்டுத் தேவைகளுக்காக கோயில்களை அமைப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் முகாம்களுக்குள் வாழும் படையினர் தவிர பௌத்த சமயத்தைச் சார்ந்த எவரும் இல்லாத நாயாறு நீராவியடி ஏற்றப் பகுதியில் அதுவும் பாரம்பரியமாக இருந்த பிள்ளையார் சிலைக்கு சில மீற்றர் தூரத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த விடயம் நடந்தேறியிருப்பதானது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது - என்றுள்ளது. (ம-8)

## பால்மாவுக்கும்...

பால்மாவுக்கான விலையை அதிகரிக்க அரசு தீர்மானம் எடுத்துள்ளது.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான புதிய விலைச் சூத்திரத்தையும் அறிமுகப்படுத்தவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பன்னாட்டுச் சந்தையில் பால்மாவின் விலையை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான புதிய விலைச் சூத்திரம் அறிமுகமாகவுள்ளது.

பால்மா இறக்குமதி நிறுவனப் பிரதிநிதிகள், நிதியமைச்சின் அதிகாரிகள், வணிக மற்றும் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் பிரதிநிதிகள் இணைந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதன்போது. இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான விலையை அதிகரிக்குமாறு அரசிடம் கோரியுள்ளனர். இதேவேளை, எரிபொருளுக்கு ஏற்கனவே விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

## பெப்ரவரி...

6ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 3 கிராமங்களைத் தேர்வு செய்து அந்தக் கிராமங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் அரச தலைவரால் 'கிராமசக்தி நிகழ்ச்சி' திட்டமிடப்பட்டது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் முன்னெடுக்க வேண்டிய பணிகள் தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பில் நேரில் ஆராயும் நோக்கில் யாழ். மாவட்டத்தை உள்ளடக்கிய வகையில் சிறப்புக் கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் அரச தலைவர் தலைமையில் எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் ஒரு கிராமத்துக்கும் அரச தலைவர் நேரில்சென்று பார்வையிடவுள்ளார். (ம-105)

## மனச்சாட்சி...

"நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையைக் கைவிடுவதற்கு நான் இணங்குகிறேன். ஆனால், நாடாளுமன்றத்தை மலினப்படுத்தி மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையில் தயாரிக்கப்படவுள்ள அரசமைப்பை எதிர்க்கின்றேன்" என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் சிறப்பு ஊடக அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதால் நாடு ஒன்பது துண்டுகளாகப் பிரியும் என்ற போலிப் பரப்புரையை மகிந்த ராஜபக்சவும் அவரின் சகாக்களும் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நாட்டின் மீதும் மக்கள் மீதும் பற்று இருந்தால் போலிப் பரப்புரையை அவர்கள் உடன் கைவிட வேண்டும். மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருப்பதால் வீண் பிரச்சினைகள் எழுகின்றன. மாகாணங்களுக்கு மக்களின் கைகளுக்கு அவர்களின் நலன் சார்ந்த அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதால் அந்த மாகாணங்கள் மட்டுமன்றி முழு நாட்டுக்கும் நன்மை ஏற்படும். நாடு நல்ல பாதையில் பயணிக்க சந்தர்ப்பம் கிடைக்கும். இதை அனைவரும் உணரவேண்டும்.

நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளினதும் இயன்றளவு ஒத்துழைப்புடன் ஓர் புதிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஒருமித்த பிரிபடாத பிரிக்க முடியாத நாட்டுக்குள்ளே ஒரு தீர்வைக் காணக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நாம் தவறவிடக் கூடாது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் புதிய அரசமைப்புக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ம-5,22)

## நாடாளுமன்றில்...

தன் நாடாளுமன்றத்தில் இன்று சிறப்பு அறிவிப்பை விடுத்து உரையாற்றவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விடயம் தொடர்பிலும், புதிய அரசமைப்புத் தொடர்பிலும் அவர் தனது உரையில் முக்கியமாகக் குறிப்பிடப்படலாம் என்று தெரியவருகின்றது. (ம-5,31)

## தொல்பொருள்...

12ஆம் திகதி வரை அந்தப் பகுதியில் முதலாம் தரப்பினரோ இரண்டாம் தரப்பினரோ எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளையும் செய்யக்கூடாது என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

கோவில் வளாகத்தில் கடந்த 14ஆந் திகதி தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளுக்காகச் சென்றவேளை அந்தப் பகுதியில் குடியிருக்கும் பௌத்த பிக்குவுக்கும் மக்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது. அங்கு சென்ற பொலிஸார் அதனைத் தீர்த்துவைத்த நிலையில் அந்த இருதரப்பினருமே முல்லைத்தீவில் சமாதானக் குலைவை ஏற்படுத்த முற்பட்டனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டி இருதரப்பினருக்கு எதிராகவும் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

நீதிபதி லெனின்குமார் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புத்தர் சிலை அமைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்று தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிராம மக்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்றுமுன்தினம் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினரின் ஆதரவுடன் திறக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இருதரப்பினரும் தத்தமது வாதங்களை முன்வைத்தனர்.

வழக்கின் முதலாம் தரப்பான பௌத்த பிக்கு சார்பில் பெரும்பான்மையின சட்டத்தரணி ஒருவர் முற்பட்டிருந்தார். வழக்கு விடயங்கள் குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோது கருத்துக்கூற மறுத்துவிட்டார்.

இரண்டாம் தரப்பினரான ஆலய நிர்வாகத்தினர் சார்பில் 13சட்டத் தரணிகள் மன்றில் முற்பட்டனர். அவர்களில் ஒருவரான அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தாவது:

முதலாம் தரப்பான பௌத்த பிக்குவின் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி அரசிதழ் ஒன்றில் தொல்பொருட் திணைக்களம் அந்தக் குறித்த இடத்தைத் தொல்பொருட் திணைக்களத்துக்குரிய பகுதியாக அறிவித்ததாக ஒரு ஆவணத்தையும், குறித்த இடத்திலே கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி கிடைத்தது என்பதாக மற்றொரு ஆவணத்தையும் சமர்ப்பித்தார்கள்.

அந்த அரசிதழில் குறித்த இடத்தின் பெயர் செட்டிமலை எனவும், செட்டிமலைக் கிராமம், செட்டிமலை கிராம அலுவலர் பிரிவு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மன்றில் தெரிவித்தனர்.

நாங்கள் அதை மறுத்துரைத்தோம். அவ்வாறான்தொரு இடம் அங்கு இல்லை என்றும், தொல்பொருட் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தில் எந்தப் பகுதி, எந்த இடம், எவ்வளவு பரப்பு என்பன இல்லை என்றும்கூறி நாங்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தோம்.

அதனையடுத்து, முதலாம் தரப்பினர் இந்த விடயத்தைச் சுமுகமாகத் தீர்ப்பதற்குச் சாத்தியக்கூறு இருப்பதாகவும், சுமுகமாகத் தீர்க்க விரும்புவதாகவும் கூறினர்.

அதனடிப்படையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை அடுத்த தவணை நீதிமன்றில் முற்படுமாறும், வளாகத்தில் அபிவிருத்தி வேலைகள் இடம்பெறக் கூடாது என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த பிணக்குக்குரிய இடத்திலுள்ள ஆலயம் மற்றும் விகாரை தொடர்பாக சமாதானமாகத் தீர்வு எட்டமுடியுமா என்று ஆராய்வதற்கும், தேவையேற்படின் இரண்டாம் தரப்பான நீராவியடிப் பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினர் தமது தரப்புக் கருத்துக்களை முன்வைக்கலாம் என்றும்கூறிய நீதிமன்று வழக்கை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (து-246)

## பெருந்தொகை...

அரச தலைவர் வடக்கில் ஆரம்பித்து வைத்த போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரத்தின் மூன்றாவது நாள் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. நேற்று அதிகாலையில் ஏழாலைப் பகுதியில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் பாரவூர்தியுடன் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுசாரத்தை (எதனோல்) சிறப்பு அதிரடிப் படையினர் மீட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வளவு பெருந்தொகையில் மதுசாரம் கைப்பற்றப்பட்டிருப்பது இதுவே முதற்றடவை. கைப்பற்றப்பட்டிருப்பவை யாழ்ப்பாணத்திலேயே உற்பத்தி செய்யப்பட்ட மதுசாரமாகவே இருக்க முடியும் என்றும் வேறு இடங்களில் இருந்து எடுத்து வரப்பட்டிருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாத துறைசார் நிபுணத்துவத் தரப்பு உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தது.

நேற்றைய தினம் 371 கான்கள் மதுசாரம் கைப்பற்றப்பட்டன. ஒவ்வொரு கானும் 20 லீற்றர் கொள்ளளவைக் கொண்டது. மொத்தமாக 7 ஆயிரத்து 420 லீற்றர் மதுசாரம் மீட்கப்பட்டது. இதன் பெறுமதி இரண்டு முதல் இரண்டரைக் கோடி ரூபா என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விநியோகிக்கப்படும் பனம் சாரயத்துக்கு கலப்படம் செய்வதற்காகவே இந்தப் பெரும் தொகை மதுசாரம் எடுத்துவரப்பட்டது என்று ஆரம்ப விசாரணைகளில் மூலம் தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிடிக்கப்பட்ட மதுசாரம் சிறப்பு அதிரடிப் படையினரால் கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்தத் திணைக்களம் இருக்கும் போதும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிரடிப் படையினர் மதுசாரத்தையும் சந்தேகநபர்களையும் கிளிநொச்சி அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினர் சந்தேகநபர்களை அங்குள்ள நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. கைப்பற்றப்பட்ட மதுசாரமும் நீதிமன்றில் கையளிக்கப்பட்டது. (ம-21,26)



## விளையாட்டு வீரர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது

அளவெட்டி, ஜன. 25
அளவெட்டி தெற்கு கலைவாணி விளையாட்டுக் கழக வீரர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு, கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் நிலைய உபதலைவர் கி.துரைராசா தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. அளவெட்டி நியூ பாரதி வெளியீட்டக உரிமையாளர் வை.சதீஸ் வழங்கி வைத்தார். (ஓ.36)

## விளையாட்டுக் கழகத்துக்கு உதவிகள்



யாழ்ப்பாணம், ஜன. 25
காரைநகர் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு தொகை கால் பந்தாட்டக் காலணிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் 2018 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இவை கொள்வனவு செய்யப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் காரைநகர் பிரதேசசபை உறுப்பினர் ஆ.விஜயராசா, காரைநகர் பிரதேச செயலர் திருமதி.உசா சுபலிங்கம், காரைநகர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார், விளையாட்டுக்கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# அசத்திய மத்திய கல்லூரி



யாழ்ப்பாணம், ஜன. 25
மாறவெல சென்.சேவியர் கல்லூரியை இன்னிங்ஸ் மற்றும் 137 ஓட்டங்களால் தோற்கடித்து அபார வெற்றியைப் பதிவு செய்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான பிரிவு மூன்றிற்கான துடுப்பாட்டத் தொடரில், கடந்த செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் மாறவெல சென்.சேவியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.சேவியர் கல்லூரியை எதிர்த்து மத்திய கல்லூரி மோதியது.

சென்.சேவியர் கல்லூரி அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. மத்திய கல்லூரியின் அபாரப் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல், 18.4 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து அந்த அணி சுருண்டது.

டிலிந் ஜெகனா 12 ஓட்டங்களை அந்த அணிக்காக அதிகபட்சம் பெற்றுக் கொடுத்தார். திவாகரன், வியாஸ்காந் இருவரும் தலா 3 இலக்குகளையும், விதுசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

மத்திய கல்லூரி அணி 71.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஜெயதர்சன் 52 ஓட்டங்களையும், இந்துயன் 41 ஓட்டங்களையும், நிதுசன் 33 ஓட்டங்களையும், இயல்அரசன் 28 ஓட்டங்களையும், வியாஸ்காந் 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் றொசாந் 5 இலக்குகளையும், டிலோஸ் 3 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சென்.சேவியர் அணியால், சகல இலக்குகளையும் பறிகொடுத்து 32.3 பந்துப் பரிமாற்றங்களில் 81 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. பந்து வீச்சில் மத்திய கல்லூரி சார்பில் திவாகரன் 5 இலக்குகளையும், இயல்அரசன், விதுசன், வியாஸ்காந் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள். (ஓ.23)

## தென்மராட்சி பிரிமியர் லீக் அடுத்த மாதம் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜன. 25
தென்மராட்சி பிரிமியர் லீக் தொடர் எதிர்வரும் 2ஆம் திகதி தொடக்கம் இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தில் சிறந்த துடுப்பாட்ட அணிகள், துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவந்து மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்ற வைப்பதற்கெனவும் அவ்வாறான போட்டிகளில் பங்குபற்றக்கூடிய வீரர்களைத் தெரிவு செய்வதற்காகவும் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

பிரதேசத்தில் உள்ள துடுப்பாட்ட கழகங்களால் துடுப்பாட்டப் போட்டிகள் நடாத்தப்படுகின்ற போதிலும் நிலையான அணியைத் தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. தென்மராட்சி பிரிமியர் லீக் போட்டிகளை நடாத்தி அவற்றில் தெரிவு செய்யப்படும் அணிக்கு சிறந்த பயிற்சிகளை வழங்கி மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றச் செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. இருப்பினும் அதனை துடுப்பாட்ட மைதானத்துக்குரிய வகையில் அமைத்து வழங்க நகரசபையினர் முன்வரவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் அ.பாலமயூரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, மைதானத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த 'பிட்ச்' சேதமடைந்துள்ளதால் புதிதாக அமைக்க வேண்டியுள்ளது. 'பிட்ச்' அமைப்பதற்கு மக்கி பெறுவது கடினமாக உள்ளது. மக்கி எங்காவது இருப்பதை சபைக்குத் தெரிவித்தால் அதனை விலை கொடுத்துப் பெறுவதற்கு சபை தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஓ.9)

## பெண்களுக்கான மென்பந்து; அதிசயம் வி.க. வெற்றி

கிளிநொச்சி, ஜன. 25
பளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில், பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் அதிசயம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. பளை பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அதிசயம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. ஜீவிதா 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பானுசா ஓர் இலக்கைக் கைப்பற்றினார். 84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அதிசயம் விளையாட்டுக்கழக அணியினர் 4.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டனர். பானுசா 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் விநாயகர் விளையாட்டுக்கழக அணி சார்பில் சந்திரகலா ஓர் இலக்கை வீழ்த்தினார். (ஓ.23)

## வீதியோட்டம்


யாழ்ப்பாணம், ஜன. 25
கைதடி நவீல்ட் பாடசாலையின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை வீதியோட்டம் நடத்தப்பட்டது.


ஆண்களுக்கான வீதியோட்டப் போட்டியில் சு.மதுலனன் முதலாம் இடத்தையும், நு.றிவால்டோ இரண்டாம் இடத்தையும், சுதாகரன் மூன்றாம் இடத்தையும், பெண்களுக்கான போட்டியில் லக்சனா முதலாம் இடத்தையும், மு.யனுசாயினி இரண்டாம் இடத்தையும், ஏ.ஜோதிகா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (ஓ.23)











# ஆஸி. முன்னிலையில்

இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது.
முதலாவது ஆட்டம் நேற்று பிரிஸ்பேர்னில் ஆரம்பமானது. இலங்கை அணி ஆரம்பத்திலிருந்தே தடுமாற்றத்துடனேயே ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன, திரிமன்னே களமிங்கினர். 10 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் திரிமன்னே 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலே வந்த வேகத்தில் சந்திமல் 5 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். அணி 106 ஓட்டங்களுக்குள் 8 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக டிக்வெல அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஏனைய வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை. ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் இலங்கை அணியை நிலைகுலைய வைத்தனர் என்றே சொல்லலாம். இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களுக்குள் சுருண்டது.
பந்து வீச்சில் கம்மின்ஸ் 4 இலக்குகளையும், றிச்ஹட்சன் 3 இலக்குகளையும், ஸ்ராக் 2 இலக்குகளையும், லயன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸுக்கா ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஹரிஸ், பேர்ன்ஸ் களமிறங்கினர். அணி 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பேர்ன்ஸ் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இணைந்தார் கவாயா. இவர்களது இணை சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போது கவாய 15 ஓட்டங்களைப் பெற்று பெரோராவின் பந்து வீச்சில் 'போல்ட்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். இன்றைய நாள் முடிவில் ஆஸ்திரேலியா அணி 2 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் ஹரிஸ் 40 ஓட்டங்களுடனும், லயன் ஓட்டமெதனையும் பெறாது களத்தில் உள்ளனர்.

# இறுதிக்குள் ரபேல் நடால்

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி மெல்போர்னில் இடம்பெற்று வருகின்றது. தற்போது அரையிறுதியாட்டங்கள் இடம்பெறுகின்றன.
நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் இரண்டாம் நிலை வீரரான ரபேல் நடால் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார். '
ரபேல் நடால் கிரீஸ் நாட்டு வீரரான ரிஸிற்ரிபஸுடன் மோதினார். இதில் நாடல் 6:2,6:4,6:0 என்ற நேர் செற் கணக்கில் ரிஸிற்ரிபஸை வீழ்த்தி இலகு வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார்.
இன்று இடம்பெறும் ஜோகோவிக் - பௌல்லி இருவருக்குமான அரையிறுதியில் வெற்றி பெறுபவருடன் நடால் இறுதிப் போட்டியில் மோதுவார்.






# பருத்தித்துறை ஐக்கியம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 25
பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
புலோலி இளைஞர்கள் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றது. 46 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணி, 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 27 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது. (ஓ.23)

## நியூசிக்கு எதிரான பங்களாதேஷ் அணியில் தஸ்கின்,ரஹ்மான்

பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட வுள்ளது.
இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஒருநாள் தொடரில் சபீர் ரஹ்மான், தஸ்கின் அகமது ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

ஆஸி. பகிரங்க ரென்னிஸ்

# கிவித்தோவா - ஓசாகா இறுதியில் மோதல்

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் இடம்பெற்று வருகின்றது.
நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதி ஒற்றையர் பிரிவில் கிவித்தோவா வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.
8ஆம் நிலை வீராங்கனையான கிவித்தோவா அமெரிக்க வீராங்கனையான டானிலி ரோஸ் கொலின்ஸை எதிர் கொண்டார்.
இதில் கிவித்தோவா 7:6, 6:0 என்ற நேர் செற் கணக்கில் கொலின்ஸை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னே றினார்.
மற்றுமொரு அரையிறுதியாட்டத்தில் 7ஆம் நிலை வீராங்கனையான கரோலினா பிலிஸ்கோவா, 4ஆம் நிலை யப்பான் நாட்டு வீராங்கனையான நோமி ஒசாகா மோதினர்.
இதில் ஒசாகா, 6:2,4:6,6:4 என்ற செற் கணக்கில் பிலிஸ்கோர்வாவை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறினார். முதலாவது செற்றை 6:2 என்ற கணக்கில் ஒசாகா எளிதாகக் கைப்பற்றினார். இராண்டாவது செற்றை பிலிஸ்கோவா 6:4 என்ற கணக்கில் கைப்பற்ற மூன்றாவது ஆட்டம் பரபரப்பானது. இறுதியில் ஒசாகா 6:4 என பிலிஸ்கோவாவை வீழ்த்தி வெற்றி பெற்றார்.
இறுதிப் போட்டியில் 8ஆம் நிலை வீராங்கனையாக கிவித்தோவாவை ஒசாகா எதிர்கொள்கிறார். கிவித்தோவா இரண்டு முறை விம்பிள்டன் பட்டத்தை வென்று முதன் முறையாக ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
ஒசாகா 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் முதல் கிரான்ட்ஸ்லாம் பட்டம் வென்ற யப்பானிய வீராங்கனையாக விளங்கு கின்றமையோடு முதன் முறையாக ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறி யுள்ளார்.
இரண்டுவீராங்கனைகளும் முதன்முறையாக ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான இறுதிப் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.

# சாய்னா நேவால் முன்னேற்றம்

இந்தோனேசியா மாஸ்டர்ஸ் பூப்பந்தாட்ட போட்டியில் இந்தியாவின் முதல்நிலை வீராங்கனையான சாய்னா நேவால், 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இவர் கடந்த வாரம் இடம்பெற்ற மலேசிய மாஸ்டர் பூப்பந்தாட்ட போட்டியில் காலிறுதியில் தோல்வியடைந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சாய்னா இந்தோனேசியாவின் தினார் தியா ஆயுஸ்டைனை எதிர் கொண்டார். 8ஆம் நிலை வீராங்கனையான சாய்னா நேவால், 50ஆம் நிலை வீராங்கனையான தினாரிடம் முதல் செற்றை 7:21 என அதிர்ச்சிகரமாக இழந்தார். பின்னர் சுதாரித்துக் கொண்ட சாய்னா 2ஆவது செற்றை 21:16 எனவும், 3ஆவது செற்றை 21:11 எனவும் கைப்பற்றி வெற்றி பெற்றார்.


**போட்டிப்பரீட்சை கருத்தரங்கு (SLPS - 3)**

P.உமாசங்கர்& வளவாளர்களின் விஷேட கருத்தரங்கு
P.ஆறுமுகம் SLEAS பயிற்சி இணைப்பாளரும்
NIE வருகை விரிவுரையாளரும்
பாடசாலை நிர்வாக சம்பவ கற்கை With multi media Presentation & பல புதிய சம்பவ கற்கைகளும்
27/1 ஞாயிறு 9AM to 5 PM

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி
077 469 6695
077 741 7143
071 813 0390
077 394 2964

**SANNITHY INSTITUTE**

வடமராட்சியில் ஆங்கிலம், சிங்களம் அனைவருக்கும்
புதிய வகுப்புக்கள் 27.01.2019
(தனி வகுப்புக்களும்)
077 767 7773 சந்நிதி மனோ
(CS 22765) (4.07)

**கருத்தரங்குகள்**

அதிபர் சேவை தரம் -3
Feb–10 பரீட்சைக்கு
26/1,27/1,2/2,3/2,4/2,9/2 திகதிகளில் காலை 9.00 → 3.00 மணிவரை

சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
Feb–17 பரீட்சைக்கு
27/1,3/2,9/2,10/2 திகதிகளில் காலை 9.30 → 2.30 மணிவரை

076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

**FLC FRENCH LANGUAGE CENTRE**

# பிரெஞ்ச்

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 28.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

# காணி விலைக்குத் தேவை

**யாழ். மாவட்டத்தில் விவசாயத்துக்கு உகந்த செம்பாட்டு மண் வளத்துடன் 5-10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி நல்ல நீர் வளத்துடன் கீழ் குறிப்பிட்டுள்ள இடங்களில் தேவை.**

- அச்சுவேலி
- புத்தூர் மேற்கு
- சிறுப்பிட்டி
- கோப்பாய்
- மருதனார்மடம்
- கோண்டாவில்
- புன்னாலைக்கட்டுவன்
- மல்லாகம்
- இணுவில்
- பத்தமேனி
- நவக்கிரி
- நீர்வேலி
- வசாவிளான்
- திருநெல்வேலி
- உரும்பிராய்
- தெல்லிப்பழை
- சுன்னாகம்

**காணி தெளிவான சிக்கல்களற்ற உறுதியுடன், ஒரே துண்டாக இருப்பது அவசியமானது.**

தொடர்புகொள்ளவும்:
**077 207 8451 / 077 7760 255**

# வாருங்கள் முன்னேற்றுவோம்

▶ வடமாகாணத்தின் கல்வியை முதல் நிலைக்கு கொண்டு வருவதற்கு கல்வியியலாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற துறைசார் நிபுணர்களின் ஆலோசனையை வேண்டிநிற்கின்றோம்.

▶ யாழ். மாநகரத்தின் தூய்மையை மேம்படுத்தும் முகமாக சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதனை மேலும் முன்னேற்றுவதற்கும் நோயிலிருந்தும் மரணத்திலிருந்தும் எமது சந்ததியை பாதுகாப்பதற்கும் உங்களது துறைசார் ஆலோசனையை எதிர்பார்க்கின்றோம்.

அனுப்பவேண்டிய முடிவுத்திகதி : 25.03.2019
உங்கள் ஆலோசனை அனுப்பவேண்டிய முகவரி:

T.C.T
No - 527, நாவலர்வீதி
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு சு.சுரேஸ்குமார்(இரசாயனவியல் ஆசிரியர்)
021 222 8025, 077 555 9028



## இயக்கச்சி முகாவில்

# ஸ்ரீ மகா காளி அம்மன்

## ஆலய நவக்கிரக பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக பெருவிழா - 2019

**விளம்பி வருடம் தை மாதம் 13 ஆம் நாள் (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிமுதல் 10.30 வரையுள்ள மீனலக்கின சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்**

## கிரியாகால நிகழ்வுகள்

- விளம்பி வருடம் 9 ஆம் நாள் 23.01.2019 புதன்கிழமை பிம்பஸ்தாபனம், தூபிஸ்தாபனம் நடைபெற்றுள்ளது.
- 24.01.2019 வியாழக்கிழமை தொடக்கம் எண்ணெய்காப்பு நடைபெற்று வருகின்றது.

**விளம்பி வருடம் தை மாதம் 11 ஆம் நாள் (25.01.2019)**

- வெள்ளிக்கிழமை காலை 09.00 மணி முதல் விநாயகவழிபாடு,நக்ஷத்திர அஷ்டவாக்கிய ஹோமம்,கோளறு பதிகப் பாராயணம், பிரசாதம் வ்ழங்கல்.
- மாலை 5.00 மணிமுதல் விநாயகவழிபாடு, புண்ணியாகவாசனம், யாக பூஜை, நவக்கிரக காயத்திரி மந்திர ஹோமம், தீபாராதனை, வேத, தோத்திர தேவார பாராயணம் . பிரசாதம் வழங்கல்.

**விளம்பி வருடம் தை மாதம் 12 ஆம் நாள் (26.01.2019)**

- சனிக்கிழமை காலை 09.00 மணி முதல் விநாயகவழிபாடு, கோளறு பதிகப் பாராயணம், விஷேட திரவ்விய ஹோமம், பிரசாதம் வழங்கல்.
- மாலை 5.00 மணி முதல் விநாயகவழிபாடு, பஞ்சகவ்ய பூஜை, விம்ப சுத்தி, கௌதுகபந்தனம், பூர்வ சந்தானம், யாக பூஜை, பச்சிம சந்தானம், சிவாச்சார்ய சர்வோபசார சமர்ப்பணம், பிரசாதம் வழங்கல்.

**விளம்பி வருடம் தை மாதம் 13 ஆம் நாள் (27.01.2019)**

ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிமுதல் விநாயகவழிபாடு, புண்ணியாக வாசனம், யாக பூஜை, ஹோமம் மஹா பூர்ணாகுதி, அந்தர் பலி, பகிர் பலி, விஷேட தீபாராதனை, வேத தேவார தோத்திர நாத, தாள கீத வாத்திய சமர்ப்பணங்கள், யாத்திராதானம், கும்ப உத்தாபனம், காலை 9.45 மணி முதல் 10.30 வரையுள்ள சுபவேளையில் ஸ்தூபி விமான அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம், கர்ப்பாவரண அபிஷேகம், தசமங்கள தரிசனம், எஜமான் அபிஷேகம், ஆசீர்வாதம், ஆசார்ய சம்பாவனை, கும்பாபிஷேக பிரசாதம் வழங்கல், மஹாபிஷேகம், அன்னதானம்.

ஆலய நித்திய அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ க.பிரதீபசர்மா

பிரதிஷ்டா பிரதம குரு
சிவஸ்ரீ முத்து. ஸ்ரீனிவாசக்குருக்கள்

மங்களவாத்தியம்: நல்லூர் - ரஜீவன் குழுவினர்
கோண்டாவில் - பிரசாந் குழுவினர்

சர்வசாதகம்
பிரம்மஸ்ரீ ப.சனாதன சர்மா BBA (Hons) சாவகச்சேரி.

**ஆலய அறங்காவலர் சபை**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.